

# உதயங்கவுக்கு விளக்கமறியல்

மிரிஹான பிரதேசத்தில் அயல் வீட்டாரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ரஷ்யாவுக்கான இலங்கை முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உதயங்க வீரதுங்கவை ஜனவரி மாதம் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொடை நீதவான் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.




Follow us

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 05, இதழ் : 28, குரோதி வருடம், மார்கழி மாதம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (12.01.2025) ஹிஜ்ரி-1446, ரஜப் - 11, 0115886187 - பக்கங்கள் 20+8+8+8

விலை ரூ.130


நக்கல் நமசிவாயம்

தமிழ் எம்.பிக்களை கண்காணிக்குற வேலையையும் கிளீன் ஸ்ரீ லங்காவுக்குள்ள சேர்த்திட்டாங்க போல...



# கண்காணிப்பு வலையில் தமிழரசு எம்.பிக்கள்!

## தடைசெய்யப்பட்ட அமைப்பின் செயலமர்வுக்கு செல்வதை நோட்டமிடுகிறது பாதுகாப்புத் துறை

02 ஆம் பக்கம்

## சண்டே சாம்பார்



★ ஜனாதிபதி இவ்வாரம் சீனா விஜயம் - கூர்ந்து அவதானிக்கும் இந்தியா

03 ஆம் பக்கம்



02 ஆம் பக்கம்

## தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 51ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழில்


தற்போது விற்பனையில்

ஜூனியர் சிட்டு

பாலர் பாடசாலை சிறார்களுக்காக...



விலை ரூ.100/= மட்டுமே

அரச பாடத்திட்டத்திற்கு அமைவாக தொகுக்கப்பட்டு வெளிவருகிறது

பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

0777983308/0741684643


### மருந்து கொள்வனவுக்கான விண்ணப்பங்கள்:

# பேச்சு நடத்தவுள்ள ஔடதங்கள் அதிகாரசபை

■ நா.தினுஷா

நிலுவையிலுள்ள மருந்து கொள்வனவுக்கான விண்ணப்பங்கள் குறித்து அங்கீகரிக்கப்பட்ட மருந்து சந்தைப்படுத்தலுடன் தொடர்புடைய சகல அதிகாரிகளுடனும் கலந்துரையாட தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் விலை நிர்ணயப் பிரிவால் இந்தப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவுள்ளதுடன், நிலுவையிலுள்ள மருந்து கொள்வனவுக்கான விண்ணப்பங்கள் குறித்தும் மருந்துகளுக்கான விலைகள் தொடர்பிலும் இதன் போது கலந்தாலோசிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

02 ஆம் பக்கம்



# அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

■ தலவாக்கலை கேதீஸ்

அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்வதற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தி அக்கரப்பத்தனை மன்றாசி நகரில் வர்த்தகர்கள் வெள்ளிக்கிழமை (10) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அக்கரப்பத்தனை, மன்றாசி நகர வர்த்தகர்கள் இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது, நகர வர்த்தகர்களும் பொது மக்களும் கலந்துகொண்டு சுலோகங்களை ஏந்தியவாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

02 ஆம் பக்கம்




02 ஆம் பக்கம்





உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு வெளிநாட்டில் இருந்து நீங்கள் அனுப்பும் அன்பு அளவற்ற பெறுமதியானது.

மக்கள் வங்கி நாம், அந்த அன்பை அவர்களுக்கு பெற்றுத்தருவது மிகுந்த அபிமானத்தோடு.

PEOPLE'S Remittance

அன்பை அனுப்பும் இடம்

- உடனடியாக பணத்தை வரவழைக்க முடிதல்
- குறைந்த கட்டணங்கள்
- கணக்கிற்கு அல்லது கவுண்டரில் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடிதல்
- உலகெங்குமுள்ள முகவர் நிலையங்களின் சேவை
- 745 க்கும் மேற்பட்ட கிளைகள் மற்றும் பரந்த ATM வலையமைப்பு

+94 701 750 017 +94 112 031 001 / +94 112 438 395 teletran@peoplesbank.lk

மக்கள் வங்கியில் வைக்கப்பட்டுள்ள அனைத்து வைப்புகளும் CBSL வழிகாட்டுதல்களுக்கு அமைய ஸ்ரீலங்கா காப்புறுதி வைப்புத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படும்

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK Pride of the Nation

A (lka) ஃபிட்ச் ரேட்டிங், AAA பிராண்ட் ஃபினான்ஸ் ரேட்டிங்

மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.



செலான் வங்கியிடமிருந்து

உங்கள் தங்கப் பவுணிற்கு...

அதிகபட்ச முற்பணம்

ரூ. 160,000/=

வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

- அதிகபட்ச இரகசியத்தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்

011 200 88 88

செலான் தங்கக் கடன்

செலான் வங்கி

Fitch Rating "A-" (lka)


## "தமிழன்" 14ஆம் திகதி இதழில் விசேட பஞ்சாங்கம்

# மலையக தியாகிகள் தினம் கொட்டகலையில் அனுஷ்டிப்பு







(எஸ்.கணேசன்)

மலையக மக்களுக்கான உரிமைப் போராட்டங்களில் உயிர்த் தியாகம் செய்த மலையக தியாகிகளை நினைவுகூரும், மலையக தியாகிகள் தினம் வெள்ளிக்கிழமை (10) கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் உணர்வுப்பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

பிடிதளராதே அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர். பொதுச்சுடர் ஏற்றப்பட்ட பின்னர் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மலையக தமிழ்மக்களுக்குரிய தொழில்சார் உரிமைகள், காணி உரிமை, மொழி உரிமை, அரசியல் உரிமை, பொருளாதார உரிமை உள்ளிட்ட விடயங்களுக்கான போராட்டங்களின்போது உயிர் நீத்தவர்களே இன்று நினைவுகூரப்படுகின்றனர். பிடிதளராதே அமைப்பு மற்றும் மலையக உரிமைக்குரல் என்பன இணைந்து 2019 டிசம்பர் மாதம் சர்வதேச தேயிலை தினத்தன்று மலையக தியாகிகள் தினத்தை நடத்தியிருந்தன.

நுவரெலியா மாவட்டம், தலவாக்கலை, டெவோன் தோட்டத்தில் உள்ள மலையக மக்களுக்கான காணி உரிமை போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்த சிவனு லெட்சுமனனின் கல்லறையில் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டது.

இதன்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுப் போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்து, மலையக தியாகிகள் வரலாற்றை ஆரம்பித்து வைத்த முல்லோயா கோவிந்தன் உயிர் துறந்த ஜனவரி 10 ஆம் திகதியை, மலையக தியாகிகள் தினமாக அனுஷ்டிப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்படியே ஜனவரி 10 ஆம் திகதி மலையக தியாகிகள் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது. 2020 ஜனவரியில் மஸ்கெலியாவில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. 2021 இல் பத்தனையில் நடைபெற்றது. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் கொட்டகலையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே இம்முறை கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.




## தமிழாராய்ச்சி...

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 51ஆவது ஆண்டு நினைவேந்தல் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் அழைப்பின் பெயரில் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபியில் வெள்ளிக்கிழமை (10) காலை நடைபெற்றது. இதன்போது உயிர் நீத்த உறவுகளை நினைவுகூர்ந்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் சிவகு ஆதீன குரு முதல்வர் வேலன் சுவாமிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், சோலமன் சிறில் இலங்கை தமிழரசுக் கட்சி பதில் தலைவர் சீ விகே சிவஞானம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம், முன்னாள் மாநகர சபை முதல்வர் ஆனோல்ட், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன், கஜதீபன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் கருணாகரன் நாவலன், சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் இயக்குநர் ஜோதிலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## மருந்து ...

இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளதாகவும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அறிவித்துள்ளது.

இதேவேளை, 90 வகையான மருந்துகளின் விலையை குறைப்பதற்கும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைத் தீர்மானித்துள்ளதாக அறியமுடிகிறது. இந்த விடயம் தொடர்பிலும் இந்தப் பேச்சுவார்த்தையின் போது கலந்தாலோசிக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## அரிசி...

அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளதால் அதனை உரிய வகையில் நுகர்வோருக்கு விற்கமுடியாத சூழ்நிலை ஏற்படுவதாகவும் இதனால் சிறு வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் தமிழ் மக்கள் தைப்பொங்கல் திருநாளை கொண்டாட இருக்கின்ற நிலையில் பொங்கல் பொங்குவதற்கு சிவப்பு பச்சரிசி தேவைப்படுகின்றது. எனினும், நாட்டில் சிவப்பு அரிசி தட்டுப்பாடு நிலவுகின்றது. எனவே சிவப்பு அரிசியை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் அரிசியை கட்டுப்பாட்டு விலைக்கு விற்கமுடியாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கும் அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

## கண்காணிப்பு...

நமது அரசியல் செய்தியாளர்

இலங்கை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட அமைப்பான கனேடியத் தமிழர் தேசிய அவையின் (NCCT )ஏற்பாட்டில் நடைபெறவுள்ள 3 நாள் செயலமர்வில் ,இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள ஏற்பாடாகியிருப்பதை உயர்மட்ட பாதுகாப்புத்துறை தீவிரமாக கண்காணித்துவருவதாக நம்பகரமாக அறியமுடிகின்றது.

கனேடியத் தமிழர் தேசிய அவையின் ஏற்பாட்டில் 3 நாள் செயலமர்வொன்று இந்தியாவில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனவரி 31, பெப்ரவரி 01 மற்றும் 02 ஆம் திகதிகளில் இந்த செயலமர்வு நடைபெறவுள்ளதாகவும் தெரிகிறது.

இதில் கலந்துகொள்ள தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தயாராகிவரும் நிலையில் , இலங்கையில் தடை செய்யப்பட்ட அந்த அமைப்பில் தமிழ் எம்.பிக்கள் கலந்துகொள்வது தொடர்பில் உன்னிப்பாக அவதானித்துவருவதாக பெயர் குறிப்பிட விரும்பாத உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தடைசெய்யப்பட்ட அமைப்புடன் இணைந்து செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையின் அரசியலமைப்பை மீறியவர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர்கள் பாராளுமன்ற உறுப்புரிமையை கூட இழக்க நேரிடலாமென்றும் அந்த அதிகாரி மேலும் சுட்டிக்காட்டினார். எவ்வாறாயினும் இந்த தகவல் தொடர்பில் விபரங்களை பெற இலங்கைத் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை தொடர்பு கொள்ள முயற்சித்தபோதும் அந்த முயற்சி பலனளிக்கவில்லை.



★ ஜனாதிபதி இவ்வாரம் சீனா விஜயம் - கூர்ந்து அவதானிக்கும் இந்தியா

★ சீனாவுடன் இலங்கை செய்யவுள்ள ஒப்பந்தங்களால் புதுடில்லி அதிருப்தி

★ அரசியலமைப்பு விவகார நிபுணர்களின்றி தடுமாறும் தமிழரசுக் கட்சி

★ நிவாரணங்களை மக்களுக்கு வழங்கி தேர்தலுக்குச் செல்லத் தயாராகும் ஆட்சியாளர்கள்

# சண்டே சாம்பார்



சிவா இராமசாமி
mesivaraj@yahoo.com

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 14ஆம் திகதி சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். 17ஆம் திகதி வரை அவர் சீனாவில் தங்கியிருந்து முக்கிய சந்திப்புகளை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி இந்திய விஜயத்தை கடந்த மாதம் நிறைவுசெய்திருந்த சூழ்நிலையில், அவரின் இந்த சீன விஜயம் குறித்து இந்தியா முழு அளவில் அவதானித்து வருவதை அறியமுடிகின்றது. சீனாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் எதனையும் இலங்கை செய்கின்றதா என்பது குறித்து புதுடில்லி உன்னிப்பாக அவதானித்து வருகிறது.


ஜனாதிபதியின் சீன விஜயம் நடைபெறவுள்ள சூழ்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இலங்கையிலுள்ள பிரதான ஊடகங்களின் செய்தியாளர்களைச் சந்தித்து கலந்துரையாடலை நடத்தியிருந்தார். இலங்கைக்கு இந்தியா கடந்த காலங்களில் செய்த உதவிகள் குறிந்து அந்தச் சந்திப்பில் தூதுவர் சந்தோஷ் ஜா விரிவாகக் கூறியிருந்தார். திடீரென நாடொன்றின் தூதுவர் செய்தியாளர்களைச் சந்தித்து தனது நாடு செய்த உதவிகளைப் பற்றி கூறவேண்டியதன் நோக்கம் என்ன என்ற சந்தேகம் செய்தியாளர்களிடையே எழுந்தது.

ஜனாதிபதி சீனாவுக்கான பயண மொன்றை மேற்கொள்ளவுள்ள சூழ்நிலை யில், இலங்கைக்கு சில விடயங்களை நினைவுபடுத்துவதற்காக இந்தியத் தூதுவர் இவ்வாறு செய்தியாளர்களைச் சந்தித்திருக்கலாமென அந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட செய்தியாளர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தனர்.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் ஊடகர்களைச் சந்தித்த தினத்துக்கு முதல் நாள் கூடிய அமைச்சரவை, சீனாவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணும் வகையில் சில தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தது. அந்தத் தீர்மானங்கள் பின்வருமாறு:

### ★ இலங்கை அரசு 'ஒரே சீனக் கொள்கையை' தொடர்ச்சியாகக் கடைப்பிடித்தல்

இலங்கை அரசு 'ஒரே சீனக் கொள்கையை' தொடர்ச்சியாகக் கடைப்பிடித்து வந்துள்ளதுடன், அதன்மூலம் சட்டரீதியான சீனாவாக மக்கள் சீனக் குடியரசை மாத்திரம் ஏற்றுக்கொள்வதுடன், தாய்வான் சீனாவின் ஒரு மாநிலம் மாத்திரமே என ஏற்றுக்கொள்வதெனும் நிலைப்பாடாகும். இலங்கை அரசு குறித்த கொள்கையை அவ்வகையிலேயே தொடர்ந்தும் கடைப்பிடித்து அதற்கிணங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதாக வெளிவிவகாரங்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.



ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

PS/SB/Circular/1/2025

சீனாவுடன் இந்தளவு தூரம் தற்போதைய அரசு நெருங்கியுள்ளமை குறித்து ஆழ்ந்த கவனத்தை செலுத்திவரும் புதுடில்லி அதற்கு எதிர்வினையாற்றத் தயாராகி வருவதாகத் தெரிகிறது.

இந்தியாவிலிருந்து முட்டையை இறக்குமதிசெய்யும் இலங்கை, கோழி இறைச்சியை சீனாவுக்கு அனுப்புவது நகைப்புக்குரியதென சமூக ஊடகங்களில் கூட விமர்சனங்கள் எழுந்துள்ளன.

ஆனால், ஒரே சீனக்கொள்கையைக் கடைப்பிடித்தல் தொடர்பான அமைச்சரவையின் தீர்மானத்துக்குக் காரணம் உள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் சீனாவின் உதவித் திட்ட நிகழ்வில் பேசி யிருந்த பிரதமர் ஹரிணி, தாய்வானுக்கு ஆதரவாகப் பேசும்வகையில் கருத்து களை வெளியிட்டிருந்தார். அந்த விடயத்தில் கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தது. இதனால் சீனாவுடன் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை பகிரங்கமாக வெளிப்படுத்த இலங்கை நடவடிக்கை எடுக்கவேண்டுமென சீனத் தரப்பிலிருந்து கோரப்பட்டிருந்தது. அதனடிப்படையில், அமைச்சரவை மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றி யிருந்தது.

ஆனால், சீன ஊடக நிறுவனங்களுடன் இலங்கை அரசு செய்யவுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பிலும் பலரின் கவனம் திரும்பியுள்ளது. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பன சீன ஊடக குழுமத்துடன் செய்யவுள்ள ஒப்பந்தத்தால் இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பில் கரிசனைகள் எழுந்துள்ளன.

ஏனெனில், இலங்கையின் அந்த ஊடக நிறுவனங்களின் கேந்திர நிலையங்களில் சீனா கால்பதிக்கும் வாய்ப்பு ஏற்படும். அதன் தொலைத்தொடர்பு வசதிகளை அது அமைந்துள்ள இடங்களை சீனாவும் பகிர்ந்துகொள்ளும் நிலைமை ஏற்படலாம் என்பதால் இந்திய பாதுகாப்புத் துறையினர் அது தொடர்பில் கரிசனைக் கொண்டுள்ளதாக அறியமுடிகிறது.

### மக்களுக்கான நிவாரணங்கள்

2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் எனப்படும் வரவு-செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கடந்த வியாழன் முன்வைத்தார்.

நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு தொடர்பான உரை எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்...)




வானத்தில் சந்திப்பு



9 am - 11 pm CINNAMONLIFE 8th floor THE FORUM 02 Glennie St, Colombo 00200

CINNAMON LIFE ஆராய உங்களை அழைக்கிறது, "வானத்தில் சந்திப்பு" கொழும்பின் மையத்தில் உள்ள நகர்ப்புற வனவிலங்குகளின் தனித்துவமான கலவையைக் காண்பிக்கும் ஒரு கலை நிறுவல்

பாரம்பரிய காத்தாடி தயாரிப்பாளர்களுடன் இணைந்து, கொழும்பில் உள்ள விலங்குகள், பூச்சிகள் மற்றும் பறவைகளுக்கு 2000 க்கும் மேற்பட்ட நேர்த்தியான கைவினைக் காத்தாடிகள் மூலம் உயிர்ப்பிக்கிறோம்.

11TH - 14TH JANUARY

THE FORUM CINNAMON LIFE

Cinnamon Life CITY OF DREAMS SRI LANKA

தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com
ஞாயிற்றுக்கிழமை, ஜனவரி 12, 2025

# பெண்களுக்கெதிரான மீறல்கள்!

பெருந்தோட்டத்துறையில் பணியாற்றும் மலையகத் தமிழ்ப் பெண்கள் இன, மொழி மற்றும் பொருளாதார ரீதியில் பல்வேறுவிதமான ஒடுக்குமுறைகளை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டியிருக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தனியார் கம்பனிகளின் முறையற்ற நடவடிக்கைகளால் அப்பெண்களின் சீரான வேலைச்சூழல், சுகாதாரம், பாதுகாப்பான வீடு என்பவற்றுக்கான உரிமைகள் வெகுவாக மீறப்படுவதாக விசனம் வெளியிட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஐக்கிய நாடுகள் குழுவின் 90ஆவது கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அதனை முன்னிறுத்தி கடந்த 2016 - 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் *(அதற்குப் பின்னரும்) பெண்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகளை முடிவுக்குக்கொண்டுவருவதை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஐக்கிய நாடுகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:*

*பெண்களுக்கு எதிரான சகலவிதமான ஒடுக்குமுறைகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பிரகடனத்துக்கமைவாக தாம் கொண்டிருக்கும் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளைப் பாராட்டுகின்றோம்.*

*இருப்பினும், கடந்த 2017ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான தேசிய வேலைத்திட்டம் 2021ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து புதிய வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.*

*அதேவேளை, பெண்களை வலுவூட்டுவதுடன், பாலின சமத்துவத்தை மேம்படுத்தும் நோக்கில் கடந்த ஆண்டு 37ஆம் இலக்க பெண்கள் வலுவூட்டல் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அச்சட்டத்தினூடாக பெண்களுக்கான உரிமைகளை அனுபவிப்பதற்கு சகல பெண்களும் உரித்துடையவர்கள் என்ற விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.*

*அதேபோன்று பெண்களுக்கு எதிரான சகலவிதமான ஒடுக்குமுறைகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பிரகடனத்தினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள் இலங்கையின் அரசியலமைப்பு உள்ளடங்கலாக பல்வேறு சட்டங்களில் உள்வாங்கப்பட்டுள்ளன. இருப்பினும், இலங்கையில் நடைமுறையிலுள்ள சில சட்டங்களில் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை ஊக்குவிக்கக் கூடியவாறான சரத்துகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.*

*குறிப்பாக, 1951ஆம் ஆண்டு 13ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம், 1952ஆம் ஆண்டு 44ஆம் இலக்க கண்டிய விவாக, விவாகரத்துச் சட்டம், 1911ஆம் ஆண்டு 10ஆம் இலக்க திருமண உரிமைகள் மற்றும் மரபுரிமை ஆணைச் சட்டக்கோவை என்பன அத்தகைய ஒடுக்குமுறை சரத்துகளைக்கொண்டிருக்கின்றன.*

*இச்சரத்துகள் முற்றாக நீக்கப்படவோ அல்லது பெண்களுக்கு எதிரான சகலவிதமான ஒடுக்குமுறைகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பிரகடனத்துக்கமைவாகத் திருத்தியமைக்கப்படவோ வேண்டும். அதேபோன்று முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தினூடாக முஸ்லிம் பெண்களின் உரிமைகள் மீறப்படுவதுடன், அவர்களது நீதிக்கான அணுகல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.*

*மேலும், சில சந்தர்ப்பங்களில் மதரீதியான ஆடைகளை அடிப்படையாகக்கொண்டு பெண்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றன. உதாரணமாக, கடந்த 2018ஆம் ஆண்டு திருகோணமலையில் அமைந்துள்ள பாடசாலையொன்றுக்குள் முஸ்லிம் பெண்கள் அணியும் அபாயா ஆடையுடன் பிரவேசிப்பதற்கு இடமளிக்கப்படாமை குறித்து உதவி ஆசிரியைகள் நால்வரால் எமது ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கப்பட்டது. அத்தோடு, இலங்கை சட்டத்தின்கீழ் திருநங்கைகள் மற்றும் திருநம்பிகளும் தொடர்ச்சியாக ஒடுக்குமுறைகளைக் கொண்டிருக்கின்றனர்.*

*எனவே, அவர்களது பெயர்ப்பதிவு மற்றும் அவர்களின் பிறப்புச்சான்றிதழ்களில் பால் மாற்றம் செய்தல் என்பன தொடர்பில் சுகாதார அமைப்பு, பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் நாம் தொடர்ச்சியாகக் கலந்துரையாடல்களை மேற்கொண்டுவருகிறோமென அவ்வறிக்கையில்* சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக நீதிக்கான அணுகல், சமாதானம் மற்றும் பாதுகாப்பு, அரசியல், பொதுவாழ்வு மற்றும் தீர்மானம் எடுத்தலில் பங்கேற்றல், வரவு-செலவுத்திட்டத்தில் பெண்களைப் பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்கான நிதியொதுக்கீடு, வேலைவாய்ப்பு, அபிவிருத்தி போன்றவற்றில் பெண்கள் முகங்கொடுத்துவரும் ஒடுக்குமுறைகள் குறித்தும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பெண்கள் மீதான வன்முறை, ஒடுக்குமுறைக்கு எதிராக கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக மேற்கொண்ட போராட்டங்களின் விளைவால், பெண்களுக்கெதிரான வன்முறைகளும் ஒடுக்குமுறைகளும் ஓரளவுக்குக் குறைந்ததாகத் தென்பட்டாலும், அது தொடர்கதையாகவே இருக்கின்றது.

பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளினதும் அதனால் பெண்கள் முகங்கொடுக்கக்கூடிய சவால்களினதும் வடிவங்களில் மாற்றம் பெற்றதே ஒழிய, இதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாத நிலையாக மாற்றம் பெற்றுள்ளது.

ஆண்கள், தங்கள் தொழிலில் உயர்நிலை அடைவதை உயர்வாக மதிப்பிடுவதையும் பெண்கள் தங்கள் திறமைகளால் உயர்நிலையை அடையும்போது அதனை கொச்சைப்படுத்துவதையும் சாதாரணமாகவே அவதானிக்க முடியும். மேலும் பெண்கள், ஆண்களைக்கொண்டு பணிகளை மேற்கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்வதும் பொதுவான அம்சமாகும்.

நடந்து முடிந்த இரண்டு உலக யுத்தங்களும் பெண்களுக்குரிய சம உரிமையை வென்றெடுப்பதில் முக்கிய நிகழ்வாக இருந்தன. ஆண்கள், யுத்த முனைக்கு அனுப்பப்பட்டபோது, பெண்கள், ஏனைய அனைத்து தொழிற்றுறைசார் நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அது, பெண்களுடைய வாழ்நிலையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. யுத்தம் பெரும் அழிவை ஏற்படுத்தியபோதும் அதன் ஒருபக்க விளைவாக பெண்கள் சுயாதீனமான நிலைக்கு முன்தள்ளப்பட்டனர். ஆனால், தமிழ் மக்கள் மத்தியில், கடந்த 30 ஆண்டுகால யுத்தம், இவ்வாறான ஒரு விளைவை ஏற்படுத்தவில்லை. மாறாக, பெண்களை மேலும் கீழ்நிலைக்கே இட்டுச்சென்றுள்ளது.

அரபு உலகில் ஏற்பட்ட புரட்சியில், அரபுலகப் பெண்கள் தங்களையும் இணைத்துக்கொண்டனர். அங்கு இடம்பெறுகின்ற அரசியல் விவாதங்களில் பெண்கள் முக்கிய பங்கேற்றனர். பெண்கள் மீதான ஒடுக்குமுறை மோசமாகவுள்ள ஆப்கானிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளில் கூட, பெண்கள் புரட்சிகரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், இலங்கையைப் பொறுத்தமட்டில், யுத்தத்துக்குப் பின்னர் பெண்களின் நிலை மிகவும் மோசமாகவுள்ளது. மேலும், யுத்தத்தால் தமது கணவனை இழந்த பெண்கள், ஏனைய பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விட, மாறுபட்ட நிலையில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, சமூகமானது, தான் கொண்டுள்ள கலாசார விழுமியங்களை, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்தாது, அவர்களின் உடல், உள நலன்களையும் அவர்களின் எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு, கலாசார விழுமியங்களில் மாற்றங்களைக் கொண்டுவருவதே, தற்போது தமிழ்ச் சமூகம் செய்யவேண்டிய நடவடிக்கையாகும்.

அதேபோல், பெண்ணென்ற வகையில் தாய்மார், தமது பிள்ளைகளுக்குச் சரியான மனப்பாங்குகளை வழங்கி, தமது பிள்ளைகள், ஏனைய பெண்களுக்கும் கௌரவம் வழங்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குதல் வேண்டும். தமது ஆண் பிள்ளைகளைச் சரியான மனப்பாங்குடன் கூடியவாறு, சிறுபராயத்திலிருந்து ஆயத்தம் செய்தல் பிரதானமான பொறுப்பாகும். அவ்வாறு செய்யப்படுமானால், பெண்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைகளையும் ஒடுக்குமுறைகளையும் முடிவுக்குக் கொண்டுவரமுடியும் என்பது திண்ணம்.

# அரச நிர்வாகம் என்ற வேதாளம்



மீநிலங்கோ தெய்வேந்திரன்

ஜனாதிபதியும் அமைச்சர்களும் அரச நிர்வாகத்தினர் மீது வெளிப்படையாகவே அதிருப்தி தெரிவித்துள்ளனர். நாட்டை முன்னோக்கி நகர்த்தும் தமது திட்டங்களுக்கு அரச நிர்வாகிகளிடமிருந்து - பொதுத்துறை நிர்வாகம் - போதிய ஆதரவு கிடைப்பதில்லை என்பதே அக்குற்றச்சாட்டாகும். இலங்கை பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கத் தொடங்கிய காலம் முதல் இலங்கையின் அரச சேவையை மறுசீரமைக்க வேண்டும். அரச ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்பது ஒரு கோரிக்கையாக இருந்தது.

அதேவேளை, ஐ.எம்.எவ். இலங்கைக்கு விதித்துள்ள நிபந்தனைகளில் அரச சேவையை சீரமைப்பது முக்கியமானது. இலங்கையின் அரசியல் அரங்கின் இடது பக்கத்தில் இருப்பவர்களும் வலது பக்கத்தில் இருப்பவர்களும் அரச நிர்வாகத்தின் மீது அதிருப்தியில் இருக்கிறார்கள். இங்கு மூன்று கேள்விகள் முக்கியமானவை. இலங்கையின் அரச சேவை மீதான பொது அதிருப்திக்கான காரணங்கள் எவை? பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதனூடாக இப்பிரச்சினையைத் தீர்த்துவிட முடியுமா? வினைத்திறனுள்ள அரச சேவைக்கு என்ன செய்யவேண்டும்?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முக்கிய செயற்றிறன் குறிகாட்டிகளில் ஒன்று, நலிவடைந்த பொதுத்துறை செயற்பாட்டை ஒரு பயனுள்ள, திறமையான மற்றும் நிலையான செயற்பாடாக மாற்றும் திறனாகும். இது ஒரு கடினமான பணியாகும். ஏனென்றால் அரசாங்கமானது திட்டமிடப்படாத, அதிக ஒழுங்குபடுத்தப்பட்ட, அதிக எண்ணிக்கையிலான சேவைத் துறையைக் கையாளவேண்டியுள்ளது. அதிக சதவீத ஊழியர்களிடம் ஊக்கமில்லை, பலர் பல்வேறு அளவுகளில் ஊழல் நிறைந்த செயல்களுடன் ஆழமாக தொடர்புடையவர்கள். பொதுத் துறை ஊழியர்களின் நடவடிக்கைகள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கருத்தியல் நிர்வாகத் திட்டத்துடன் இன்னும் ஒத்திசைக்கப்படவில்லை. இந்தப் பின்புலத்தில் வினைத்திறனுள்ள அரச நிர்வாகமே அரசாங்கத்தின் வெற்றியை உறுதிப்படுத்தும். இன்று அரசாங்கத்திடம் மாற்றத்தைத் தூண்டுவதற்கான தேசிய ஆணை உள்ளது. அரசாங்கத்தின் முன்னோக்கு என்பதே பெரும் வினாவாகும்.

ஐ.எம்.எவ்வின் நிபந்தனைப்படி செயற்படுவதா அல்லது இலங்கையின் நிலைமைகளைக் கருத்திற்கொள்வதா என்பதை அரசாங்கமே முடிவுசெய்ய வேண்டும். 22 மில்லியன் மக்கள் தொகைக்கு (14 பேருக்கு ஒரு பணியாளர்) சேவை செய்ய 1.5 மில்லியன் ஊழியர்களைக் கொண்ட நாட்டின் மொத்த வேலைவாய்ப்பில் அண்ணளவாக 15 வீத பொதுத்துறை பங்கு வகிக்கிறது. இருப்பினும், இந்த ஊழியர்கள் பொதுக் கடமைகளை சரியான நேரத்தில் நிறைவேற்றுவதில்லை. தொடர்ச்சியான தொழில்முறை வளர்ச்சியின்மை, கற்பனை செய்ய முடியாத சோம்பல் ஆகியவற்றால் தங்கள் சுய மைய நடத்தை காரணமாக தங்கள் மதிப்பை இழந்துவிட்டார்கள்.

எனவே, மொத்த ஊழியர் எண்ணிக்கை இறுதியில் அரைவாசியாகக் குறைக்கப்பட வேண்டும். நிதி நிலைத்தன்மையை நிலைநிறுத்துவதற்கு தற்போதைய திறமையற்ற மற்றும் பயனற்ற அதிகாரத்துவ அமைப்புகளை இல்லாமல் செய்ய மொத்த எண்ணிக்கையை கணிசமாகக் குறைக்க வேண்டும் என்பதே ஐ.எம்.எவ்வினதும் தாராண்மைவாதப் பொருளாதார நிபுணர்களினதும் கருத்தாகும்.

எவ்வாறாயினும், அபிவிருத்தியடைந்த மற்றும் வளரும் நாடுகளிலுள்ள நாடுகளின் தரவுகளை நாம் ஆராயும்போது, இலங்கையின் (ஒட்டுமொத்த) அரச துறை மிக அதிகமாகவுள்ளது அல்லது அது திறமையற்றது என்ற வாதத்தை ஆதரிக்க முடியாது. குறிப்பாக, இலங்கையின் உயர் மனித அபிவிருத்தி சுட்டெண் (HDI) மற்றும் ஒப்பீட்டளவில் இலங்கையின் அரச செலவினங்கள் மிகவும் குறைந்த மட்டத்தில் இருக்கின்றமை ஆகியவற்றையும் கணிப்பில் எடுக்க வேண்டியுள்ளது. இலங்கை போன்ற சமூக நல அரசின் தன்மைகளைக்கொண்ட நாடுகளில் அரச சேவை என்பது முக்கிய பங்காற்றுகிறது.

உதாரணமாக, இலங்கையின் உயர் கல்வியறிவு வீதம், நாடெங்குமுள்ள வலுவான சுகாதாரத்துறை என்பன சாத்தியமாக அரச சேவையே காரணம் என்ற உண்மையை நாம் மறந்துவிடலாகாது. இலங்கையின் அரச நிர்வாகத்தின் அளவானது, அதிக வருமானம் பெறும் நாடுகளுக்கும் ஐரோப்பிய மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கும் ஓரளவு நெருக்கமாகவுள்ளது. இதில் கவனிக்க வேண்டியது யாதெனில், அவை பெரும்பாலும் சமூகநல அரசுகளாக உள்ளன. இலங்கையின் வெற்றிகரமான சமூகநலக் குறிகாட்டிகளுக்குக் காரணம் அரச நிர்வாகம் சேவைத்துறையில் மிகச்சிறப்பாகப் பணியாற்றியமையே.

இலங்கையின் அரச துறை ஊழியர்கள் தாங்கள் வழங்கவேண்டியதை வழங்குவதில் திறமையானவர்களா என்ற கேள்வி எப்போதும் எழுப்பப்படும் ஒன்றாகும். குடிமக்கள் மற்றும் சமூகங்களின் வாழ்க்கையை நேரடியாகப் பாதிக்கும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவது பொது ஊழியர்கள் பொறுப்பு. இதில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சமூக சேவைகள் மற்றும் பொதுப் பாதுகாப்பு ஆகியவை அடங்கும். இந்த அத்தியாவசிய சேவைகளை வெற்றிகரமாக வழங்குவதன் மூலம் நாட்டின் மனித அபிவிருத்திச் சுட்டெண் மேம்படுகிறது. இலங்கையின் தற்போதைய சுட்டெண் 0.78. இது தெற்காசியாவில் உள்ள எந்த நாட்டை விடவும் மிக அதிகம்.

**இலங்கையின் அரச நிர்வாகமானது, அரசியல்மயமாக்கல், ஊழல், குறைவான ஊதியம், வினைத்திறனின்மை ஆகிய நான்கால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இவை நான்கையும் ஒருசேரச் சீரமைப்பது எப்படி என்பதே சவால். ஏனெனில் ஒவ்வொன்றும் தனித்தனி வேதாளங்கள். அவை இலங்கையின் அரச கட்டமைப்பில் ஆழமாக வேரூன்றியவை.**

இந்த உயர்வான மனித அபிவிருத்திச் சுட்டெண்ணை இலங்கை மிகக் குறைவான நிதிவளத்தோடு சாதித்துள்ளதென்பதையும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும். கடந்த பத்தாண்டு காலப்பகுதியில், மாநிலத்தின் சராசரி செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 18.8 வீதமாக இருந்தது. இதற்கு முந்தைய கடந்த சில தசாப்தங்களில் அரசாங்க செலவினம் 20 வீதத்தைத் தாண்டவில்லை. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 வீதத்துக்கும் குறைவான அரச செலவினங்களைக் கொண்ட உலகின் 24 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அவற்றிலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் பாது இலங்கையின் மனித அபிவிருத்திச் சுட்டெண் மிகவும் அதிகமானது.

இவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது, இலங்கையின் அரச துறையானது குறைந்த வளங்களின் கீழ் உயர் மனித அபிவிருத்தியை வெற்றிகரமாகச் சாதித்துள்ளதால் அது திறமையற்றது என்று கூற முடியாது. ஆனால், இலங்கையின் அரச நிர்வாகத்தில் ஏராளமான பிரச்சினைகள் உள்ளன. அரச துறைகளைத் தனியார்மயப்படுத்துவது அதற்குத் தீர்வல்ல. ஐ.எம்.எவ். கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பொதுச்சேவைகளைத் தனியார்மயப்படுத்தக் கோருகின்றது. அதற்கு வினைத்திறனற்ற அரச சேவையை உதாரணம் காட்டுகிறது. இது தவறானது.

இலங்கையின் அரச நிர்வாகம் கடந்த சில காலமாகச் சீரழிந்துள்ளது. அதற்கான காரணங்கள் பல. அவற்றில் முதன்மையான ஐந்தை இங்கே சுருக்கமாகப் பார்க்கலாம்.

***01. சன்மானமின்மை மற்றும் ஊக்கமின்மை:***

இலங்கையிலுள்ள அரசாங்க ஊழியர்கள் தங்களின் சம்பளம் வாழ்க்கைச் செலவைப் பிரதிபலிக்கவில்லை என்று நினைக்கிறார்கள். அரச துறை ஊதியங்கள் தனியார் துறையை விட மோசமாகப் பின்தங்கியுள்ளன. இது அதிருப்தி மற்றும் ஊதிய உயர்வுக்கான கோரிக்கைகளுக்கு வழிவகுக்கிறது. இந்த அதிருப்தியானது ஈடுபாடு இல்லாமை, பணிக்கு வராமை மற்றும் மோசமான பணி நெறிமுறை என்பனவாக வெளிப்படுகிறது.

***02. அதிகாரத்துவ சிவப்பு நாடா மற்றும் மத்தியமயப்படுத்தல்:***

இலங்கையின் பொதுத் துறை அதன் சிக்கலான அதிகாரத்துவத்துக்கு பெயர் பெற்றது. இது அரசாங்க ஊழியர்கள் தங்கள் வேலையை திறமையாக முடிப்பதைக் கடினமாக்குகிறது. ஒப்புதல்களின் பல அடுக்குகள், அதிகப்படியான ஆவணங்கள் மற்றும் கடினமான படிநிலைகள் என்பன படைப்பாற்றல் மற்றும் முன்முயற்சியைத் தடுக்கின்றன. காலாவதியான விதிகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தால் அரச ஊழியர்கள் விமர்சன ரீதியாகவோ அல்லது புதுமையாகவோ சிந்திப்பதிலிருந்து தடுக்கப்படுகிறார்கள். இது தவிர்க்கவியலாமல் திறமையின்மைக்குப் பங்களிக்கிறது.

***03. போதிய பயிற்சி மற்றும் நிபுணத்துவ மேம்பாடு:***

போதிய பயிற்சி இல்லாததாலும் தொடர்ந்து நிகழும் தொழில் வளர்ச்சியின் பற்றாக்குறையாலும் பல அரச ஊழியர்கள் தங்கள் பாத்திரங்களின் கோரிக்கைகளைக் கையாளத் தகுதியற்றவர்களாக உள்ளனர். காலாவதியான பயிற்சித் திட்டங்கள் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்குத் தேவையான திறன்களை வழங்கத் தவறிவிடுகின்றன.

***04. ஊழல் மற்றும் தவறான சன்மானங்கள்:***

அரச துறையில் ஊழல் ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாகும். அங்கு பல அரசு ஊழியர்கள் முறைசாரா கொடுப்பனவுகள் அல்லது இலஞ்சங்களைத் தங்கள் வருமானத்துக்கு துணையாக நம்பியிருக்கிறார்கள். இது திறமையின்மை ஊக்குவிக்கப்படும் ஓர் அமைப்பை உருவாக்குகிறது. ஊழியர்கள் இலஞ்சத்துக்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான செயல்முறைகளை வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறார்கள். உத்தியோகபூர்வ ஊக்கத்தொகை மற்றும் தனிப்பட்ட நிதி ஆதாயம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள தவறான ஒருங்கிணைப்பு, தனிப்பட்ட செறிவூட்டலுக்கு ஆதரவாக அரச சேவை புறக்கணிக்கப்படும் கலாசாரத்தை ஊக்குவிக்கிறது.

***05. அரசியல் தலையீடு மற்றும் அனுசரணை:***

அரசாங்க நியமனங்கள் மற்றும் செயற்பாடுகளில் அரசியல் தலையீடு இலங்கையில் ஆழமாக வேரூன்றிய பிரச்சினையாகும். அரச துறை நியமனங்கள் பெரும்பாலும் தகுதியை விட அரசியல் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது. இது திறமையின்மைக்கு வழிவகுக்கிறது.

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்)

# பேசுபொருளாக மாறியுள்ள ரோஹிங்யா அகதிகள்



றிப்தி அலி

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சரான ஆனந்த விஜயபால அண்மையில் வெளியிட்ட கருத்தால் ரோஹிங்யா அகதிகள் விவகாரம் தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது.

இந்த வாரம் குறித்த விடயம் பாராளுமன்றத்திலும் பேசுபொருளாகக் காணப்பட்டது. தற்போது முல்லைத்தீவு விமானப் படை முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இந்த அகதிகள் தொடர்பான சட்ட நடைமுறைகள் நிறைவடைந்த பின்னர் அவர்கள் அனைவரும் மியன்மாருக்குத் திருப்பியனுப்பப்படுவார்கள் என அமைச்சர் ஆனந்த விஜயபால அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு மியன்மார் அரசாங்கத்துடன் தொடர்பில் இருப்பதாகவும் இலங்கை வந்துள்ள ரோஹிங்யா அகதிகளின் பெயர் விபரங்கள் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புகலிடம் கோரி இலங்கை வந்த ரோஹிங்யர்கள் இதுவரை திருப்பியனுப்பப்படவில்லை. இவ்வாறான நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் சர்வதேச சட்டங்களை மீறி புதிய நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ளமை பாரிய சர்ச்சையை நாட்டில் தோற்றுவித்துள்ளது.

எந்தவித பேச்சுவார்த்தையும் மேற்கொள்ளவில்லை. வெளிவிவகார அமைச்சால்தான் ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்திருந்தார்.

அதேவேளை, சுமார் ஒரு இலட்சம் சட்டவிரோத குடியேற்றவாசிகள் இலங்கையை வந்தடைவதற்கான திட்டம் உள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இது தொடர்பில் தற்போது விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது இலங்கை வந்துள்ளவர்கள் சட்டவிரோத குடியேற்றவாசிகளாகவே கருதப்படுகின்றனர். அவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டால் சர்வதேச சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்கான வசதிகள் வழங்கப்படுமென அமைச்சர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

இது மனித கடத்தலைத் தவிர, வேறொன்றுமில்லை. இதன் பின்னணியில் இலங்கையைச் சேர்ந்தவர்கள் இருக்க வேண்டும். ரோஹிங்யர்கள் இந்தப் பகுதி வழியாக ஐரோப்பாவிலுள்ள இலக்கை நோக்கிச் சென்றதாக சந்தேகிக்கப்படுகின்றனர் எனவும் அமைச்சர் ஆனந்த விஜயபால ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, கடந்த டிசம்பர் 19ஆம் திகதி இலங்கை வந்த இந்தப் புகலிட கோரிக்கையாளர்களில் 39 ஆண்களும் 27 பெண்களும் 49 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர்.



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பாராளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்ட காலப்பகுதியில் நீண்டகாலம் அவருடைய பிரத்தியேகச் செயலாளராக அமைச்சர் ஆனந்த விஜயபால செயற்பட்டார்.

அதேவேளை, 2004 – 2006 வரையான காலப்பகுதியில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விவசாய அமைச்சராகச் செயற்பட்ட காலப்பகுதியிலும் அவரின் பிரத்தியேகச் செயலாளராக இவர் செயற்பட்டுள்ளார்.

அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட பின்னர் ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளராகவும் ஆனந்த விஜயபால கடமையாற்றினார்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற நாமல் கருணாரத்னவுக்கு பிரதி அமைச்சர் பதவியே வழங்கப்பட்ட நிலையில், அந்த மாவட்டத்தில் இரண்டாவது அதிகூடிய வாக்குகளைப் பெற்ற ஆனந்த விஜயபாலவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை, அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக தற்போது ஜனாதிபதி செயலகப் பிரதானியாகவும் ஆனந்த விஜயபால செயற்படுகின்றார். இவ்வாறு ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமான ஒருவரால் ரோஹிங்யா அகதிகள் தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்து பாரிய எதிர்ப்பலைகளைத் தோற்றுவித்துள்ளன.

அமைச்சரின் கருத்துக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் செயற்பட்டாளர் பாரிய எதிர்ப்புகளை வெளியிட்டுள்ளனர். இவ்வாறான நிலையில், இந்த வாரம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில் இந்த விடயம் தொடர்பில் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும்போது, குறித்த அகதிகளை நாடு கடத்துவது தொடர்பில் அரசாங்கம் இதுவரை

இவர்கள் தற்போது முல்லைத்தீவிலுள்ள விமானப் படை முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். குறித்த அகதிகள் இலங்கைக்கு வந்த படகில் கடமையாற்றிய 12 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து அவர்களும் முல்லைத்தீவு விமானப்படை முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இந்த அகதிகளைப் பார்வையிடுவதற்கான அனுமதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பல தடவைகள் கோரப்பட்டுள்ளன.

எனினும், இதுவரை ஆணைக்குழுவுக்கான அனுமதி வழங்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளை மனித உரிமைகள் ஆணைக்குழு அழைத்து விசாரணை செய்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த முகாமில் தற்போது நோய் பரவுகின்றமையாலேயே அனுமதி வழங்கப்படவில்லை என்ற பதில் இதன்போது வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தாலும் குறித்த அகதிகளைப் பார்வையிடுவதற்காக கோரப்பட்ட அனுமதி நிராகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், புகலிடம் கோரி ஆபத்தான கடல் பயணம் ஊடாக இலங்கை வந்துள்ள ரோஹிங்யா அகதிகளை மியன்மாருக்கு திருப்பியனுப்ப வேண்டாமென ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், இலங்கை அரசாங்கத்துக்கு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தால் இரண்டு கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன. இதனை ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மார்க் அன்ட்ரே ப்ரென்ச் உறுதிப்படுத்தினார்.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)


## கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.

ST&S ® SINCE 1892

COMMERCIAL CREDIT

## மாபெரும் வாகன ஏல விற்பனை

### 2025 ஜனவரி மாதம் 16ஆம் திகதி வியாழக்கிழமை

தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல் எனும் முகவரியில் காலை 10.00 மணி முதல்

முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் வண்டிகள் உட்பட டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்கள் சுமார் 150

| | | | |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 15 | - 4XXX | PEUGEOT 305 GL | 1985 |
| 13 | - 9XXX | HONDA CIVIC | 1985 |
| 16 | - 9XXX | NISSAN MARCH K10 | 1987 |
| WP-KT | - 1XXX | TATA NANO | 2012 |
| 13 | - 8XXX | TOYOTA COROLLA | 1982 |
| 18 | - 1XXX | SUBARU JF1AC1HR0CB | 1992 |
| 17 | - 1XXX | SUZUKI SWIFT | 1990 |
| 14 | - 4XXX | DAIHATSU CHARMENT | 1986 |
| **வேன்** | | | |
| 52 | - 4XXX | ISUZU FARGO | 1986 |
| 50 | - 9XXX | TOYOTA CR26 | 1984 |
| 52 | - 5XXX | NISSAN LARGO | 1987 |
| **லொறி மற்றும் மினி ட்ரக்** | | | |
| NC-LI | - 4XXX | FOTON BJ1036V3JB3R | 2007 |
| 43 | - 9XXX | ISUZU NKR55E | 1989 |
| NC-LI | - 6XXX | TATA LPK909 | 2011 |
| 40 | - 8XXX | ISUZU ELF TLD55 | 1980 |
| WP-PV | - 3XXX | FOTON BJ1028V3JA2-1 | 2012 |
| CP-PY | - 5XXX | TATA 207-RX PICKUP | 2014 |
| WP-PW | - 1XXX | MICRO LOADER | 2013 |
| SP-PR | - 5XXX | YUEJIN NJ1022DU | 2011 |
| NP-DAC | - 5XXX | PIAGGIO APE TRUCK PLUS | 2012 |
| WP-DAE | - 9XXX | MAHINDRA SUPRO MAXI TRUCK T6 | 2016 |
| SG-PU | - 2XXX | PIAGGIO APE MINI | 2012 |
| WP-DAG | - 3XXX | MAHINDRA MAXXIMO PLUS | 2018 |
| SG-PU | - 5XXX | DFSK EQ1020DR | 2012 |
| WP-PT | - 5XXX | MAHINDRA MAXXIMO | 2012 |
| WP-DAA | - 2XXX | MAHINDRA MAXXIMO PLUS VX | 2015 |
| NW-PW | - 3XXX | MAHINDRA MAXXIMO PLUS | 2013 |
| NC-DAC | - 6XXX | MAHINDRA MAXXIMO PLUS VX | 2015 |
| WP-PV | - 8XXX | MAHINDRA MAXXIMO PLUS | 2013 |
| SP-PS | - 9XXX | MAHINDRA MAXXIMO | 2012 |
| SP-PU | - 9XXX | PIAGGIO APE TRUCK PLUS | 2012 |
| **டிராக்டர்** | | | |
| NC-RF | - 7XXX | POWER TRACK EURO 45 | 2018 |
| NW-RE | - 4XXX | KUBOTA L3608 | 2013 |
| NW-RF | - 6XXX | MASSEY FERGUSON MF-1552 | 2017 |
| **முச்சக்கரவண்டிகள்** | | | |
| NW-YS | - 4XXX | BAJAJ 4 STROKE | 2011 |
| WP-YU | - 2XXX | MAHINDRA ALFA | 2011 |
| WP-QH | - 6XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| SG-QM | - 0XXX | BAJAJ 4 STROKE | 2007 |
| WP-YG | - 8XXX | TVS KING | 2010 |
| WP-QK | - 8XXX | BAJAJ 4 STROKE | 2007 |
| WP-QG | - 0XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| WP-GY | - 3XXX | BAJAJ 2 STROKE | 2002 |
| WP-QI | - 5XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| WP-JV | - 6XXX | BAJAJ 2 STROKE | 2005 |
| UP-QX | - 1XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| WP-HX | - 8XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| CP-HT | - 7XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| WP-JF | - 6XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| CP-HH | - 8XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| WP-HT | - 2XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| WP-YF | - 6XXX | TVS KING | 2010 |
| CP-QP | - 0XXX | BAJAJ 4 STROKE | 2008 |
| CP-QA | - 1XXX | BAJAJ 2 STROKE | 2005 |
| WP-HR | - 4XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| WP-JI | - 9XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| WP-QB | - 7XXX | BAJAJ 4 STROKE | 2005 |
| WP-AAX | - 1XXX | TVS KING | 2015 |
| WP-HJ | - 1XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| WP-QX | - 8XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| UP-AAP | - 0XXX | PACE PACE 435 DS | 2014 |
| WP-JJ | - 3XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| CP-YF | - 8XXX | BAJAJ 4 STROKE | 2010 |
| CP-ABE | - 4XXX | BAJAJ 4 STROKE | 2015 |
| WP-QK | - 6XXX | BAJAJ 4 STROKE | 2007 |
| WP-AAM | - 5XXX | TVS KING | 2013 |
| WP-JL | - 9XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| WP-GQ | - 3XXX | BAJAJ 2 STROKE | 2002 |
| 201 | - 3XXX | BAJAJ 2 STROKE | 1995 |
| CP-HD | - 9XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| CP-JP | - 9XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| CP-QD | - 3XXX | BAJAJ 2 STROKE | 2005 |
| CP-QD | - 9XXX | BAJAJ 2 STROKE | 2006 |
| CP-JG | - 1XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| CP-YV | - 6XXX | BAJAJ 4 STROKE | 2011 |

| | | | |
|---|---|---|---|
| **முச்சக்கரவண்டிகள்** | | | |
| CP-QD | - 2XXX | BAJAJ 2 STROKE | 2005 |
| WP-JC | - 2XXX | BAJAJ 2 STROKE | 2004 |
| WPHF | - 0XXX | BAJAJ 2 STROKE | 2003 |
| CP-GN | - 2XXX | BAJAJ 2 STROKE | 2001 |
| **மோட்டார் சைக்கிள்** | | | |
| WP-XF | - 6XXX | HERO HONDA PLEASURE | 2011 |
| EP-BDN | - 4XXX | BAJAJ PULSAR 150 | 2016 |
| SP-BHY | - 0XXX | HERO MAESTRO EDGE | 2019 |
| SP-BCG | - 9XXX | BAJAJ DISCOVER 125 | 2014 |
| NC-BBG | - 6XXX | HERO PLEASURE | 2014 |
| WP-BFB | - 6XXX | HONDA DIO SCV 110 | 2017 |
| WP-BHW | - 3XXX | HERO MAESTRO EDGE | 2019 |
| EP-BHJ | - 5XXX | TVS NTORQ | 2019 |
| EP-BEH | - 7XXX | YAMAHA RAY ZR | 2016 |
| WP-BGJ | - 5XXX | HONDA DIO SCV 110 | 2018 |
| WP-BAI | - 4XXX | BAJAJ DISCOVER 125 | 2013 |
| WP-BEP | - 6XXX | BAJAJ V 15 | 2016 |
| WP-BJF | - 1XXX | TVS NTORQ | 2023 |
| WP-BJF | - 6XXX | RANOMOTO C50 CUSTOM | 2022 |
| NC-BFD | - 2XXX | HERO DASH VX | 2016 |
| NC-BAX | - 5XXX | BAJAJ PULSAR 150 | 2014 |
| CP-BEJ | - 7XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| NC-BJA | - 7XXX | HERO APRILIA | 2020 |
| NC-BHK | - 7XXX | YAMAHA RAY ZR DISK | 2018 |
| WP-BHS | - 4XXX | APRILIA SR 125 | 2018 |
| WP-BIQ | - 9XXX | TVS NTORQ | 2019 |
| WP-BHR | - 7XXX | HONDA DIO SCV 110 | 2019 |
| SG-BDO | - 7XXX | HERO HUNK | 2016 |
| WP-BJA | - 5XXX | APRILIA SR 125 | 2019 |
| UP-BEY | - 2XXX | BAJAJ PULSAR 135 | 2017 |
| SG-XP | - 1XXX | BAJAJ BOXER BM100 | 2012 |
| WP-BDC | - 4XXX | HERO DASH VX | 2015 |
| WP-BJA | - 2XXX | HERO APRILIA | 2019 |
| EP-BCT | - 4XXX | BAJAJ PULSAR 150 | 2015 |
| EP-BID | - 5XXX | HERO HUNK | 2019 |
| EP-BFU | - 0XXX | HONDA SHINE | 2017 |
| SG-BGK | - 8XXX | HERO MAESTRO EDGE | 2018 |
| WP-XY | - 4XXX | YAMAHA FZ-S | 2012 |
| NW-BFO | - 6XXX | HONDA DIO SCV 110 | 2017 |
| EP-BDZ | - 1XXX | HONDA HORNET | 2016 |
| EP-BJB | - 3XXX | RANOMOTO CROSS CUB | 2018 |
| WP-BHG | - 5XXX | SUZUKI ACCESS 125 | 2017 |
| CP-BHQ | - 8XXX | TVS NTORQ | 2018 |
| NW-BFB | - 5XXX | TVS SCOOTY PEP + | 2017 |
| NW-BJA | - 7XXX | RANOMOTO PATTAYA DOUBLE POWER | 2020 |
| CP-BIR | - 2XXX | HONDA DIO SCV 110 | 2019 |
| NC-BFL | - 2XXX | HONDA DIO SCV 110 | 2017 |
| NC-BEK | - 6XXX | BAJAJ PULSAR 150 | 2016 |
| WP-BCT | - 5XXX | BAJAJ PLATINA 100 | 2015 |
| WP-BAQ | - 3XXX | HONDA DIO SCV 110 | 2013 |
| WP-BGP | - 9XXX | HONDA DIO SCV 110 | 2018 |
| NC-BDS | - 5XXX | HONDA DIO SCV 110 | 2016 |
| WP-BGN | - 9XXX | TVS APACHE 150 | 2017 |
| WP-BFG | - 4XXX | HONDA DIO SCV 110 | 2017 |
| CP-BCU | - 1XXX | TVS APACHE 180 | 2015 |
| WP-BET | - 4XXX | HONDA DIO SCV 110 | 2017 |
| WP-BBH | - 8XXX | YAMAHA FZ-S | 2014 |
| NP-BDN | - 9XXX | YAMAHA YZF R-15 | 2016 |
| NP-BCV | - 7XXX | BAJAJ PULSAR 150 | 2015 |
| NC-BDL | - 8XXX | BAJAJ PLATINA 125 | 2016 |
| WP-BIC | - 5XXX | TVS NTORQ | 2019 |
| CP-BGT | - 5XXX | MAHINDRA CENTURO ROCKSTAR | 2018 |
| CP-XN | - 3XXX | TVS FLAME | 2012 |
| CP-BET | - 5XXX | HONDA DIO SCV 110 | 2017 |
| UP-BHV | - 2XXX | HERO MAESTRO EDGE | 2019 |
| SP-BIZ | - 8XXX | APRILIA SR 125 | 2020 |
| WP-BHW | - 7XXX | TVS METRO | 2019 |
| WP-BID | - 5XXX | TVS METRO PLUS | 2019 |
| NC-BER | - 5XXX | BAJAJ DISCOVER 125 | 2017 |
| EP-BHK | - 5XXX | TVS APACHE 150 | 2018 |
| EP-BIW | - 8XXX | HERO HUNK 200 R | 2019 |
| SG-WT | - 1XXX | BAJAJ DISCOVER 100 | 2011 |
| SG-XB | - 9XXX | BAJAJ PLATINA 125 | 2011 |
| WP-WK | - 4XXX | BAJAJ DISCOVER 150 DISK | 2011 |
| WP-BFI | - 2XXX | HONDA DIO SCV 110 | 2017 |
| WP-BBN | - 2XXX | BAJAJ DISCOVER 125 | 2014 |
| WP-BJB | - 9XXX | RANOMOTO GN125 | 2021 |

வாகன பரிசீலனை : ஜனவரி 13ஆம் திகதி முதல் ஜனவரி 15ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை ஏலம் நடைபெறும் இடம் தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல். தொடர்புகளுக்கு : 0112 000 000

வாகன விற்பனைக்கான நிபந்தனைகள்

- உள்நுழைவு : ஒருவர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ.1,500/- யும் மீளளிக்கப்படும் கட்டணமாக ரூ.10,000/- யும் வைப்புத்தொகையாக ஏலம் இடம்பெறும் தினத்தில் செலுத்த வேண்டும்.
- பணக் கொடுப்பனவு : மீளளிக்கப்படாத ஆரம்ப வைப்பு வாகன பெறுமதியிலிருந்து 25% ஆகும். ஏலம் நிச்சயிக்கப்பட்ட பின்னர் வாகனத்தை கொண்டு செல்வதற்கு 75% மீதிப்பணத்தை 2025 ஜனவரி மாதம் 17, 18 மற்றும் 20ஆம் திகதிகளில் பி.ப 4.00 மணி வரையில் கீழ்க்காணும் எமது வாகன வளாகத்தில் செலுத்த வேண்டும்.
- வாகன வளாகம் : கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ. தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல்.
- ஆவணங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய இடம் : கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் லிமிடெட். தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கபிட்டிய, குருநாகல்
- எவ்வித முன்னறிவித்தல்களுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏலத்திலிருந்து நீக்குவதற்கான உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலம் விற்பனையாளரின் முடிவே இறுதி முடிவாகும்.

ISO 9001 SGS UKAS MANAGEMENT SYSTEMS 005

www.sandslanka.com

## ஷொக்மன் மற்றும் சமரவிக்ரம

ஒரு நாடு - ஒரு ஏல விற்பனையாளர்

133 வருட சேவைக்காலத்தின் கொண்டாட்டம்

CELEBRATING 133 Years TRUSTED SERVICE EXCELLENCE

**பிரதான காரியாலயம்.** - 24, டொரின்டன் வீதி, கண்டி.
தொலைபேசி : 0812 227 593 பெக்ஸ் : 0812 224 371
மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk

**நகர காரியாலயம்.** - 6A, பெயார்பீல்ட் கார்ட்ன்ஸ், கொழும்பு 08.
தொலைபேசி : 011 2 671 467, 2 671 468 பெக்ஸ் : 011 2 671 469
மின்னஞ்சல் : schokman@samera1892.com

## சண்டே சாம்பார்...
03ஆம் பக்கத் தொடர்ச்சி...

அதன்பின்னர் நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் எனப்படும் வரவு-செலவுத் திட்ட இரண்டாம் மதிப்பீடு தொடர்பான உரை மீதான விவாதம் அடுத்த மாதம் 18 முதல் 25ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 7 நாட்களுக்கு நடத்தப்படவுள்ளது.

இதனையடுத்து அன்றைய தினம் - அதாவது, பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி வரவு-செலவுத்திட்டத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு சபையில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 27 முதல் மார்ச் 21ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் வரவு-செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு எனப்படும் குழுநிலை விவாதம் நடத்தப்படவுள்ளது.

வரவு-செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி பிற்பகல் சபையில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்காக புதிதாக வேட்புமனுக்களைக் கோருவதற்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் விசேட ஏற்பாடுகள் சட்டமூலமும் பாராளுமன்றத்தில் கடந்த வியாழன் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அரச பணியாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு, வரிக்குறைப்பு மற்றும் தனியார் துறையினருக்கான விசேட ஏற்பாடுகள் பலவற்றை அரசாங்கத்தின் இந்த பட்ஜெட் செய்யவுள்ளதாக அறிய முடிகிறது. மக்களுக்கான நிவாரணங்களை வழங்கிவிட்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு செல்வதென அரச மேல்மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

### ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி வவுனியாவில் கூடிப் பேசியது

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (05) வவுனியாவில் நடந்தது.

இதன்போது, குறிப்பிடத்தக்க அமைப்பு மாற்றம் எதுவும் பேசப்படவில்லை. கூட்டணிக்குத் தலைவர் ஒருவரை நியமிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட குழுக்களின் கூட்டங்களை அடுத்த வாரத்துக்குள் நிறைவுசெய்து, பெப்ரவரி முதலாம் திகதி வவுனியாவில் பொதுச்சபையைக் கூட்டி, கட்சியின் அரசியல் யாப்பில் மாற்றம் செய்து, தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இனி ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே செயற்படுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் தேர்தல் கூட்டணி வைக்கும் தரப்புகளுடன் பேச்சு நடத்துவதெனப் பேசப்பட்டது. யாழில் சி.வி.விக்னேஸ்வரன் தரப்பு, ஈ.சரவணபவன் தரப்பு, பொ.ஐங்கரநேசன் தரப்பு, கிளிநொச்சியில் மு.சந்திரகுமார் தரப்பு, மட்டக்களப்பில் ஈரோஸ் (இராஜேந்திரா அணி) ஆகியோருடன் பேச்சு நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

வவுனியாவில் சிறிரெலோவுடனும் பேசவேண்டுமென சிவசக்தி ஆனந்தன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்), க.சிவநேசன் (புளொட்) ஆகியோர் கேட்டனர். ஆனால், ரெலோ அதை எதிர்த்தது. அவர்கள் சிறிரெலோ என்ற பெயரில் கூட்டணியில் இணைய முடியாது என்றும் தமது கட்சியின் பெயரை மாற்றி விட்டு வரலாம் என்றும் கூறினார்கள்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் இணைவது குறித்து வி.மணிவண்ணன் தரப்பினர் பேச்சு நடத்தியது பற்றி ஆராயப்பட்டது. மணிவண்ணன் தனக்கு கூட்டணியின் செயலாளர் பதவியைத் தர வேண்டுமெனக் கேட்டிருந்தார். அத்துடன், தற்போதைய தலைவர்கள் ஒதுங்கி, புதியவர்களிடம் கூட்டணியை கையளிக்க வேண்டுமெனக் கேட்டிருந்தார். அதற்கு கூட்டணியிலுள்ள கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

இப்படியான கோரிக்கைகளை முன்வைத்ததால் வி.மணிவண்ணன் தரப்புடன் பேச்சு நடத்தாமல், விக்னேஸ்வரனுடனேயே பேச்சு நடத்தலாமெனத் தீர்மானிக்கப்பட்டது.

பாராளுமன்றத் தேர்தல் தோல்விக்கான காரணங்களைப் பற்றியும் பேசினார்கள். தேசிய மக்கள் சக்தி அலையடித்ததால் தோற்றுவிட்டோமென சிலர் அபிப்பிராயப்பட்டனர். சங்கு சின்னத்தில் போட்டியிட்டதால் தோற்றதாக சிலர் குறிப்பிட்டனர். ஆனால், அந்தக் கூட்டணியின் தோல்விக்குக் காரணமான பலவீனமான நிலைமை குறித்து யாரும் பேசிக்கொள்ளவில்லை.

### இராஜதந்திர செயற்பாடுகளுக்கு விசேட சுற்றறிக்கை

வெளிநாட்டு அரசு, சர்வதேச அமைப்புகள், இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுக்குழுக்கள் மற்றும் வெளிநாட்டிலுள்ள தூதரகங்களுடன் அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் உள்ளகச் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தால் விசேட சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதான செயலாளர்கள், மாகாண ஆளுநர்களுக்கு இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்தச் சுற்றறிக்கையில், ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கொழும்பில் தங்கியிருக்கும் தூதுவர்கள் மற்றும் தூதுக்குழுக்களின் பிரதானிகளின் பிரதிநிதிகள் உள்நாட்டு அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்திப்பதற்கு நேரடியாக நேரத்தை ஒதுக்கிக்கொள்ளும் விதம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்ட இராஜதந்திர செயன்முறைகளுக்கு முரணானதென்பதால் இதன் பின்னர் அவ்வாறான இராஜதந்திர குழு பிரதிநிதிகளுக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் வெளிநாட்டலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சின் பிரிவுக்கு முதலில் அறிவிக்க வேண்டுமென்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சின் சம்பந்தப்பட்ட பிரிவால் உள்நாட்டு அதிகாரிகளால் அதற்குப் பொருத்தமான நேரத்தை ஒதுக்கிக்கொள்ளக்கூடியதாக இருக்குமென்று அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் செயன்முறைகள் ஆளுநர்கள் மற்றும் மாகாண ஆளுநர்களால் பின்பற்றப்படவேண்டுமென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கை ஆளுநர்கள் அல்லது மாகாண அமைச்சர்களைச் சந்திப்பதற்காக இலங்கையில் தங்கியுள்ள தூதுவர்கள் அல்லது தூதுக்குழுக்களின் பிரதானிகளால் அவர்கள் அல்லது அந்தத் தூதுக்குழுக்களின் பணிக்குழு சார்பில் நேரடியாக நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கான கோரிக்கையை வெளிநாட்டலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சின் ஒருங்கிணைப்புப் பிரிவுக்கு வழங்க வேண்டும்.

அதேபோன்று, இலங்கைக்கு வரும் தூதுக்குழுக்கள் அல்லது கொழும்பில் தங்கியுள்ள தூதுவர்கள் அல்லது தூதுவர் குழாம் பிரதானிகளால் ஜனாதிபதி அல்லது பிரதமர் அல்லது அமைச்சர்களைச் சந்திக்கும்போது, அவ்வாறான சந்திப்புகளை மேற்கொள்வதற்குப் பொருத்தமான விதங்கள் தொடர்பில் வெளிநாட்டலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதேபோல், ஐக்கிய நாடுகள் சபை உட்பட தூதரக அலுவலகங்கள் மற்றும் இலங்கைக்கு சுற்றுலா வரும் வெளிநாட்டுத் தூதுக்குழுக்களில் கீழ்மட்ட பதவிகளில் இருக்கும் அதிகாரிகள், ஜனாதிபதி அல்லது பிரதமரைச் சந்திப்பதற்கான வசதிகள் மேற்கொள்ளவேண்டிய அவசியமில்லை என்றும் அந்தச் சுற்றறிக்கையினூடாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அமைச்சு, நிறுவனங்களால் இலங்கை வெளிநாட்டுக் கொள்கை மற்றும் உறவுகள் உள்ளிட்ட காரணங்கள் தொடர்பில் எந்தவொரு விதத்திலும் வெளிநாட்டலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சுக்கு எழுத்துபூர்வ அனுமதியின்றி ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட முடியாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



### அமெரிக்கத் தூதுவர் - தமிழரசு சந்திப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவினருக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கு மிடையிலான சந்திப்பு கடந்த புதன்கிழமை மாலை கொழும்பில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, இனப் படுகொலைக்கான பொறுப்புக்கூறல், புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழர்களுக்கான சமஷ்டித் தீர்வுக்கான சாத்தியமின்மைகள் எழும்போது அதுசார்ந்த அரசியல் நகர்வுகளின் தேவைப்பாடு மற்றும் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் அரசியலமைப்பு விவகாரம் மற்றும் புதிய அரசியலமைப்பு தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் தமிழரசு எம்.பிக்களிடம் கேள்வி எழுப்பினார். ஆனால், புதிய அரசியலமைப்பு குறித்து சரியான நிலைப்பாடு எதனையும் தமிழரசுக் கட்சி எம்.பிக்கள் அங்கு பேசவில்லை எனத் தெரிகிறது. சுமந்திரன் போன்ற அரசியலமைப்பு நிபுணர்கள் எவரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளாமல் வெறுமனே பாராளுமன்றக் குழு மாத்திரம் இதில் கலந்துகொண்டதால் அரசியலமைப்புத் திருத்தம் பற்றி அமெரிக்கத் தூதுவருக்கு சரியான விளக்கத்தை, தமிழர் சார்பான நிலைப்பாட்டை இந்தச் சந்திப்பில் எடுத்துரைக்க முடியாமல் போயுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை அதன் வெளிவிவகாரங்களைக் கையாளும் பொறுப்பு முன்னாள் எம்.பி. சுமந்திரனுக்கு வழங்கப்பட்டுள்ளபோதும் இந்தக் கூட்டத்துக்கு அவர் அழைக்கப்பட்டிருக்கவில்லை. முன்னதாக கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக்குழுக் கூட்டத்திலும் இதுபற்றி பேசப்பட்டது.

அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்புக்கு புதன்கிழமை செல்லவேண்டும் என்று சிறிதரன் எம்.பி. இங்கு குறிப்பிட்டார். அப்போது பேசிய கோடீஸ்வரன் எம்.பி. அரசியலமைப்பு விவகாரம் குறித்து முழுமையான அறிவைக் கொண்டவர்கள் தமிழரசின் பாராளுமன்றக் குழுவில் இருக்கிறார்களா என்று கேள்வி எழுப்பினார். அதன்போது, கருத்து வெளியிட்ட ஸ்ரீநேசன் எம்.பி., சமஷ்டி முறைகள் குறித்து நீண்ட விளக்கமளித்தார். இந்தியா, ஜப்பான், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளை முன்னுதாரணமாகக் காட்டிய ஸ்ரீநேசன் இந்தியாவில் அரை சமஷ்டி முறைமை சமஷ்டியே இருப்பதாகவும் சுவிட்சர்லாந்தில் முழு அளவிலான சமஷ்டி முறைமை இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், புதிய அரசியலமைப்பு குறித்து அமெரிக்க தூதுவர் எழுப்பிய கேள்விக்கு சரியான பதிலை வழங்க முடியாமல் தமிழரசு எம்.பிக்கள் தடுமாறியதாக அறியமுடிந்தது.

## 04ஆம் பக்கத் தொடர்ச்சி

அரசியல் தொடர்புகளைக்கொண்ட ஊழியர்கள் பெரும்பாலும் பொறுப்புக்கூறலிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள். இது அரசியல் நியமனம் பெற்றவர்களுக்கு ஆதரவாக தங்கள் கடின உழைப்பு அங்கீகரிக்கப்படாமல் இருப்பதைக் காணும் திறமையான தொழிலாளர்களை மேலும் மனச்சோர்வடையச் செய்கிறது.

இவை சீரமைக்கப்படக் கூடியன. இதற்கான அரசியல் விருப்பு முக்கியமானது. அந்த அரசியல் விருப்பையே "சிஸ்டம் சேஞ்ச்" என்று ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியிடம் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அரச துறையை சீரமைப்பதில் பிரதானமான சில விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

01. அரசதுறையினருக்கு சம்பளத்தை அதிகரிப்பது அதிருப்தியை நிவர்த்திசெய்வதற்கான ஒரு படியாக இருந்தாலும், அது செயற்றிறன் அடிப்படையிலான ஊக்கத்தொகைகளுடன் இணைக்கப்பட வேண்டும். தெளிவான, அளவிடக்கூடிய விளைவுகளுக்கு ஊதிய உயர்வுகள் மற்றும் போனஸ்களை இணைப்பது பணியாளர்களை அவர்களின் திறன் மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்த ஊக்குவிக்கும். கடின உழைப்பு மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு வெகுமதி அளிப்பதன் மூலம் அரசாங்கம் முழுக்க முழுக்க ஊதிய உயர்வுக்கான கோரிக்கைகளைக் குறைத்து முடிவுகளில் கவனம் செலுத்தும் தகுதி கலாசாரத்தை வளர்க்க முடியும்.

02. அரசாங்கத்தின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கிய படியானது அதிகாரத்துவ செயல்முறைகளை எளிமைப்படுத்துவதாகும். தேவையற்ற படிகள், ஆவணங்கள் மற்றும் ஒப்புதல்கள் ஆகியவற்றைக் குறைப்பது பணியாளர்களை விரைவாகவும் குறைவான பிழைகளுடன் முடிக்க அனுமதிக்கும். கீழ்நிலை நிர்வாகிகளுக்கு அதிகாரம் அளிக்க முடிவெடுப்பதை பரவலாக்குவது மிகவும் திறமையான சேவை வழங்கலை ஊக்குவிக்கும்.

03. அரசதுறை ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் அரசியல் விசுவாசத்தின் அடிப்படையில் அல்ல, தகுதியின் அடிப்படையில் இருக்கவேண்டும்.

**அரசதுறை ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் அரசியல் விசுவாசத்தின் அடிப்படையில் அல்ல, தகுதியின் அடிப்படையில் இருக்கவேண்டும். பணியமர்த்தல் மற்றும் தொழில் முன்னேற்றத்துக்கான வெளிப்படையான தகுதி அடிப்படையிலான அமைப்புகளை உருவாக்குவதன் மூலம் சிறந்த வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வெகுமதி வழங்கப்படுவதை அரசாங்கம் உறுதிசெய்ய முடியும். இது மன உறுதியை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் தகுதியான, திறமையான நபர்கள் பொறுப்பான பதவிகளில் அமர்த்தப்படுவதையும் உறுதிசெய்யும்.**

பணியமர்த்தல் மற்றும் தொழில் முன்னேற்றத்துக்கான வெளிப்படையான, தகுதி அடிப்படையிலான அமைப்புகளை உருவாக்குவதன் மூலம், சிறந்த வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வெகுமதி வழங்கப்படுவதை அரசாங்கம் உறுதிசெய்ய முடியும். இது மன உறுதியை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தகுதியான, திறமையான நபர்கள் பொறுப்பான பதவிகளில் அமர்த்தப்படுவதையும் உறுதிசெய்யும்.

04. ஒரு நவீன, திறமையான பொதுத் துறையை உருவாக்குவதற்கு தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாடு அவசியம். வாடிக்கையாளர் சேவை, தொழில்நுட்பம், திட்ட மேலாண்மை மற்றும் பிற முக்கிய பகுதிகளில் பணியாளர்கள் வழக்கமான பயிற்சி பெற வேண்டும். சமீபத்திய கருவிகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் குறித்து ஊழியர்களைப் புதுப்பித்துக்கொள்வதன் மூலம், நவீன சவால்களுக்கு ஏற்றவாறு செயற்படும் திறன் கொண்ட பணியாளர்களை அரசாங்கம் உருவாக்க முடியும்.

05. ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு ஊழல் எதிர்ப்புச் சட்டங்களை வலுப்படுத்துதல், வெளிப்படைத்தன்மையை ஊக்குவித்தல் மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனைகளைச் செயற்படுத்துதல் ஆகியவை தேவை. தொழில்நுட்பப் பயன்பாட்டை அதிகரிப்பது, டிஜிட்டல் அமைப்புகளை அறிமுகப்படுத்துவது ஆகியவற்றின் மூலம் மனித தலையீட்டைக் குறைப்பதன் மூலம் இலஞ்சத்துக்கான வாய்ப்புகளை குறைக்கலாம்.

இலங்கையின் அரச நிர்வாகமானது, அரசியல்மயமாக்கல், ஊழல், குறைவான ஊதியம், வினைத்திறனின்மை ஆகிய நான்கால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இவை நான்கையும் ஒருசேரச் சீரமைப்பது எப்படி என்பதே சவால். ஏனெனில் ஒவ்வொன்றும் தனித்தனி வேதாளங்கள். அவை இலங்கையின் அரச கட்டமைப்பில் ஆழமாக வேரூன்றியவை.

எனவே, இவ்வேதாளங்களுக்கு ஒரு முருங்கை மரம் இல்லையெனில் இன்னொரு முருங்கை மரம்.

## சாயிபாபா மத்திய நிலையத்தின் தலைவருக்கு 'சேவா திலகம்' பட்டம் வழங்கி கௌரவம்








சாயி பாபா மத்திய நிலையத்தின் தலைவர் எஸ்.என்.உதயநாயகன், கொழும்பு, புதுச்செட்டித்தெரு சாயி பாபா மத்திய நிலையத்தின் தலைமைப் பொறுப்பையேற்று 24 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு, சாயி நிலையத்தினர் அவருக்கு 'சேவா திலகம்' எனும் பட்டம் வழங்கி கௌரவித்தனர். இந்நிகழ்வில் பொதுச்செயலாளர் சிவா இராஜஜோதி, பொருளாளர் சுந்தரம் தவகுமார் மற்றும் அறங்காவலர் கோபால் ஜீவரட்னம் ஆகியோரும் பங்கேற்றனர். இதன்போது சாயி பஜனையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

mogo
MEDIA ACADEMY

POWERED BY DERANA



# REGISTRATIONS ARE NOW OPEN!

YOUR PATHWAY TO GETTING A JOB IN MEDIA

## OUR OFFERINGS: DIPLOMA PROGRAMS

- VFX
- Animation
- Game Development
- Modeling & Texturing
- Concept Art
- Radio & Television Production
- News Journalism and Production
- Television Post-Production

## WHY CHOOSE US?

- **Global Recognition:** Certification recognized in 18 countries.
- **Industry-Focused:** Programs developed with input from leading media professionals.
- **Hands-On Training:** State-of-the-art Motion Capture Studio & live projects at Mogo Studio and Mogo Games
- **Guaranteed Jobs:** 40% of graduates secure positions at Derana.
- **Expert Faculty:** International experts dedicated to your success.
- **Flexible Plans:** Bank Loan & Credit Card Installments

JANUARY 2025

EDEX Expo 17 18 19 BMICH/25 26 KANDY KCC MEET US.

Those attending the EDEX Expo will be exempted from registration fees

## START YOUR JOURNEY IN MEDIA ARTS TODAY!

Hotline: 011 728 8300 Email: reach@mogocademy.lk Visit: mogoacademy.lk

205 De Saram Pl, Colombo 10

Mogo Media Academy is a part of the Derana Macroentertainment Family.



# சந்தர்ப்பம் மீண்டும் வருமா?

**அக்கினியான்**

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் அரசியல் வட்டாரங்களிலும் பிரதேச மற்றும் நாட்டிலுள்ள கட்சிகள் மட்டத்திலும் பரவலாகப் பேசப்பட்டுவருகிறது. அது தொடர்பான தங்கள் கருத்துகளை கட்சித் தலைவர்கள் பகிரங்கமாகத் தெரிவித்து வருகிறார்கள். இந்தச் சூழலில் புதிய அரசியலமைப்பினூடாக தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பத்தைத் தேடிக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆர்வமாக மட்டுமல்ல, தங்கள் கருத்துகளையும் முன்வைத்து வருவதையும் அவதானிக்க முடிகிறது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் இவ்விடயத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பது மட்டுமல்ல, அதி உச்சமான நம்பிக்கைகொண்டவர்களாகவும் காணப்படுகிறார்கள் என்பது வெளிப்படுத்தப்படுகிறது. இருந்தாலும் சில தரப்பினர் இந்த அரசாங்கம் தமிழர் விவகாரத்தில் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை என்ற தமது அதிருப்தியையும் தெரிவித்து வருகிறார்கள்.

இது ஒரு புறமிருக்க, கடந்த காலத்தைப்போலல்லாது கிடைக்கவிருக்கிற சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாது; கோட்டை விட்டுவிடக் கூடாது என்பதிலும் கவனமாக இருக்கிறார்கள் என்பதை அவர்கள் மேற்கொண்டுவரும் கலந்துரையாடல்களில் தெரிவித்துவரும் கருத்துகளிலுமிருந்து புரியக்கூடியதாகவுள்ளது. புதிய அரசியல் சாசனமென்பது தமிழ்பேசும் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்கான பரிகாரமாகக் கொண்டுவரப்படப் போவதில்லை.முழுநாட்டுக்காகவும் அனைத்து இன மக்கள் நன்மை கருதியும் கொண்டுவரப்படவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டு வருகிறபோதும் சந்தர்ப்பம் கை நழுவிப் போய்விடக் கூடாது என்பதில் கவனமாக தமிழ்த் தேசியக் கட்சிகள் இருக்கின்றன என்பது அவர்கள் முன்வைக்கும் பலமான கோரிக்கைகள் மூலமும் கருத்துகள் வாயிலாகவும் அறியக்கூடிய விடயந்தான்.

இருந்தபோதிலும் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள கட்சிகள் இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் ஒன்றுபட்டு செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம் மாத்திரமல்ல, கடந்த காலத்தில் கற்றுக்கொண்ட பாடங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற அனுபவங்களாகவும் அது அமைகிறது. அரசியல் தீர்வு எனும் விவகாரம், நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இவை அனைத்திலும் ஒரு சாதகமான நிலை தமிழ் மக்கள் பெறவேண்டுமாக இருந்தால் வடக்கு, கிழக்கிலுள்ள கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின்கீழ் வந்து நிற்கவேண்டிய அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது.

அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரிந்து செயற்பட்டால் அது பாதகமான விளைவுகளை மட்டுமன்றி, ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதுபோல் தீர்வாளர்கள் இந்தப் பிளவை வைத்தே தப்பிக்கொள்வதற்கான வாய்ப்பை நாங்களே உருவாக்கிக் கொடுத்தவர்களாகிவிடுவோம். அது மாத்திரமல்ல, தமிழ் மக்களை கடந்த காலங்களில் ஆட்சியை நடத்தியவர்கள் எப்படி ஏமாற்றினார்களோ அதே சந்தர்ப்பங்களை அவர்களே உருவாக்கி விடுவார்கள்.

புதிய அரசாங்கமான தேசிய மக்கள் சக்தி புதிய அரசியல் சாசனமொன்றை உருவாக்குவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வது வரவேற்கத்தக்க விடயம் மாத்திரமல்ல, துணிச்சலான விடயமாகவும் பலராலும் வரவேற்கப்படும் விடயமாகவும் காணப்படுகிறது.

அண்மையில் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார, "சமூக கட்டமைப்பில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குப் புதிய அரசியல் சாசனத்தை உருவாக்குவதன் மூலம் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும். அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்படும். அந்தக் காரியத்தை முன்னெடுக்கும் வகையில் எதிர்வரும் ஜனவரி மாதம் யாப்பை உருவாக்குவதற்குரிய பணிகளை முன்னெடுக்க உத்தேசித்துள்ளோம்'' - எனத் தெரிவித்திருந்தார்.

புதிய அரசியல் சாசனம் தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் புதிய அரசியல் சாசனம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்வதாக இருக்கவேண்டும். அதை விரைவாகக் கொண்டுவர வேண்டுமெனத் தெரிவித்திருந்தார்.

புதிய சாசனம் உருவாக்கப்பட வேண்டுமாயின் நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பினருடனும் குறிப்பாக, பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைத்து கட்சிகளுடனும் கலந்துரையாட வேண்டிய அவசியம் ஏற்படுமென்பதை அரசாங்கத் தரப்பைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இவ்வாறானதொரு சூழ்நிலையில் தமிழ்த் தேசியப்பரப்பிலுள்ள அனைத்து கட்சிகளும் ஒன்றுகூடி ஒருமித்த கருத்தின் அடிப்படையில் தமது கருத்துகளை அல்லது கோரிக்கைகளை முன்வைப்பார்களானால் அது பெறுமதிமிக்கதாகவும் பலமுடையதாகவும் இருக்குமென்பதே சிறப்பு.

வடக்கு, கிழக்கில் தற்போது பல கட்சிகள் இயங்கிவருகின்றன. அனைத்தும் தேசியத்தை முன்னிறுத்தி செயற்படுபவையே. இவற்றுள் தற்போதைய பாராளுமன்றத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என பல கட்சிகள் பிரதிநிதிகளைக் கொண்ட கட்சிகளாகக் காணப்படுகின்றன. இவை ஏதோவொரு வகையில் கொள்கை கோட்பாடு கோரிக்கை என்பவற்றில் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டவைகளாக இருப்பதாகக் கருதினாலும் தமிழ் மக்களுக்கான அடிப்படைப் பிரச்சினையான அதிகாரப்பகிர்வு, அரசியல் தீர்வு விடயங்களில் ஏதோவொரு புள்ளியில் சந்திக்கும் கட்சிகளாகவே காணப்படுகின்றன. அதன் நிமித்தம் இவை தனித்தனி பாதையால் பயணிக்காமல் குறித்ததொரு பாதையில் பயணிக்கிறபோதுதான் தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க முடியும் என்பதைப் புரிந்து வைத்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் தங்கள் தங்கள் வீம்புத் தனத்தால் பிளவுபட்டவர்களாகவே காணப்படுகிறார்கள்.

இந்த பிரிவு, பிளவு என்பதை ஒதுக்கி வைத்துவிட்டு அரசியல் தீர்வு விவகாரத்தில் ஒன்றுபட்டு நிக்கவேண்டிய காலத்தின் கட்டாயத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறோம் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதை உறுதிப்படுத்தும் வகையிலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மிகப் பெறுமதியான கருத்தொன்றைத் தெரிவித்து சகல தமிழ்த் தரப்பினருக்கும் அழைப்பொன்றை விடுத்திருக்கிறார்.

தொடர்ந்து நாங்கள் பிரிந்து நிற்போமாக இருந்தால் தமிழ் மக்களின் அபிலாஷைகளை அடைய முடியாமல் மறுபடியும் நாம் ஏமாற்றப்பட்டவர்களாகவே ஆகிவிடுவோம். எனவே, தமிழ்த் தேசியக்கட்சிகள் அரசியல் தீர்வைப் பெறும் விவகாரத்திலாவது ஒன்றுபட்டு நின்று எமது மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்போம். எமக்குள்ள பிளவுகளையும் கருத்து முரண்பாடுகளையும் மறந்து ஒன்றுபட வாருங்கள் என்ற கோதாவில் தனது அழைப்பை விடுத்திருப்பதுடன், எதிர்வரும் 25ஆம் திகதி தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். தெரிவித்துள்ளார்.

அவரது இந்த அழைப்பும் அறிவித்தலும் நல்லதொரு சகுனச் சங்கொலியாக தென்படுகிறதென வைத்துக்கொள்ள வேண்டும். இதேபோன்றதொரு கருத்தை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறீதரனும் தெரிவித்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அவர் தனது அறிக்கையில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்ன என்பது குறித்து தமிழ்த் தேசியப்பரப்பிலுள்ள கட்சிகள் கொள்கை ரீதியில் பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம். தற்போதைய சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடாமல் தமிழர்களுக்கு வரலாறு இல்லையென மிக ஆணித்தரமான கருத்தை முன்வைத்துள்ளார்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விவகாரத்தில் கடந்த காலங்களில் மாறுபட்ட கருத்துகள், அபிப்பிராயங்கள், கொள்கைகள் இருந்து வந்ததன் காரணமாகவே பல்வேறு சந்தர்ப்பங்களை தமிழர் தரப்பினர் இழந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுத்துக் கூற முடியாது.

உதாரணமாக, 1972ஆம் ஆண்டு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க குடியரசு யாப்பை வரைந்தபோது இலங்கை தமிழரசுக் கட்சியினர் சமஷ்டி அடிப்படையிலான தீர்வே தமிழ் மக்களுக்கான உரித்துடைய

தமிழ்த் தேசியப்பரப்பிலுள்ள அனைத்து கட்சிகளும் ஒன்றுகூடி ஒருமித்த கருத்தின் அடிப்படையில் தமது கருத்துகளை அல்லது கோரிக்கைகளை முன்வைப்பார்களானால் அது பெறுமதிமிக்கதாகவும் பலமுடையதாகவும் இருக்குமென்பதே சிறப்பு.

அதிகாரப்பகிர்வாக இருக்க முடியுமென வாதிட்டது மாத்திரமல்ல, நகல் அரசில் திட்டமொன்றைத் தயாரித்து கொல்வின் ஆர். டி சில்வா தலைமையிலான அரசியல் நிர்ணய சபைக்குச் சமர்ப்பித்தபோதும் அது சிங்களத் தலைமைகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. சமஷ்டி என்ற காரணத்தைக்காட்டி நிராகரிக்கப்பட்டது.

இதன் காரணமாக தமிழரசுக் கட்சியினர் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறினார்கள். ஆனால், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பேரன் ஜி.ஜி.பொன்னம்பலம், தந்தை செல்வாவின் கோரிக்கைகள் நிறைவேறிவிடக் கூடாது என்பதற்காக சமஷ்டி முறையான தீர்வை கடுமையாக எதிர்த்தார். அவர் மட்டுமன்றி, பாராளுமன்றத்தில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொண்டிருந்த உறுப்பினர்களான நல்லூர் அருளம்பலம், எம்.பி.சுப்பிரமணியம், வட்டுக்கோட்டை ஆ.தியாகராஜா, யாழ் மாட்டின், நியமன பாராளுமன்ற உறுப்பினர் குமாரசூரியர், மட்டக்களப்பு இராஜன் செல்வநாயகம் ஆகியோர் எதிர்ப்பாளர்களான சிங்கள உறுப்பினர்களோடு சேர்ந்து தமிழரசுக் கட்சி சமர்ப்பித்த முன்மொழிவுக்கு எதிராக வாக்களித்தார்கள்.

1978ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பு என அழைக்கப்பட்ட யாப்பு ஜே.ஆர்.ஜெயவர்தனவால் கொண்டுவரப்பட்டபோது அரசியல் நிர்ணய சபை எதுவும் அமைக்கப்படாமல் பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலமே அது உருவாக்கப்பட்டது. முன்னைய யாப்பைப்போலவே இந்த யாப்பு உருவாக்கத்திலும் தமிழ் மக்கள் பங்குகொள்ள வாய்ப்பளிக்கப்படவில்லை. தமிழ் மக்களின் சம்மதம் இல்லாமலே 1978 செப்டெம்பரில் யாப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. போருக்கான சூழ்நிலை உருவாகியிருந்த காரணத்தால் தமிழ் மக்கள் இந்த யாப்புப்பற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. இந்த யாப்பின் மூலம் தமிழ் மக்கள் திறக்க முடியாத ஒரு பூட்டு போடப்பட்டது.

இவை பழைய கதைகளென வைத்துக் கொண்டாலும் நல்லாட்சி அரசாங்கத்தில் நடந்தவற்றை இரை மீட்டுப்பார்ப்பின் என்ன நடந்தது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாராளுமன்றம், அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்டது. வழிப்படுத்தல் குழுக்கள் அமைக்கப்பட்டு அதிகாரப்பகிர்வு விவகாரம் பிரிவு பிரிவாக ஆராயப்பட்டது. ஆலோசனைகளும் ஆக்கமயமான யோசனைகளும் முன்வைக்கப்பட்டன, ஆராயப்பட்டன.

குறிப்பாக, தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் தீர்வுப்பிரச்சினைக்கு என்ன வழிமுறையில் தீர்வு காண முடியுமென பக்கம் பக்கமாக ஆராயப்பட்டது. இறுதியில் எடுக்கப்பட்ட முடிவு என்ன? ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வு என்ற வேலி போடப்பட்டது. இந்தக் குழப்பத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் முறுகலும் முரண்பாடும் இறுதியில் அரசியல் சாசன முயற்சிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் அதிகாரப்பகிர்வுக்கான வழியை திறந்து விட்டிருக்கிறது. மாகாண சபை முறையின்வழி அதிகாரங்கள் பகிரப்பட்டிருக்கிறது என புழுகு வார்த்தைகள் பேசப்பட்டன. இதை விடுதலைவாதிகளின் ஒரு தரப்பினர் ஏற்றுக்கொண்டாலும் புலிகள் கடுமையாக எதிர்த்தார்கள். மென்போக்குவாதிகளான தமிழரசுக் கட்சியினர்கூட இது போதுமான அதிகாரப்பகிர்வு அல்ல என புலிகளுக்குத் தாளம் போட்டார்கள்.

88ஆம் ஆண்டு தொடக்கம் செயற்பட்டு வந்த மாகாண சபையின் தேர்தல்கள் கடந்த ஏழு வருடங்களுக்கும் மேலாக நடத்தப்படாமல் இருக்கிறது. அதை நடத்துங்கள் என அரசை கோருகிறார்கள். அரசினரோ புதிய சாசனம் வரும் மட்டும் பொறுத்துக்கொள்ளுங்கள் என எச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.இதுதான் இன்றைய அரசியல் கள நிலைவரம். இதனைப் புரிந்து கொண்டு தமிழ்த் தேசியக்கட்சிகள் செயற்படவேண்டிய காலத்தின் கட்டாயத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த 75 வருடங்களுக்கும் மேலாக தமிழ்த் தலைமைகள் தமது போராட்டத்தை நடத்திவந்தபோதும் அதனுடைய விளைவுகள் வெறும் பூஜ்ஜியமாகவே இருந்துள்ளன. இதற்குக் காரணம் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையே மோதல் முரண்பாடுகள், பிளவுகள் என ஏகப்பட்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டு வந்துள்ளன. எனவேதான் சிறந்த கலந்துரையாடலுக்குப்பின் தமிழ்க் கட்சிகள் கொள்கை ரீதியில் பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியமானது மட்டுமல்ல, அரசியல் சாசன பேச்சுவார்த்தை மேசைக்கு செல்லும்போது ஒன்றுபட்ட பலத்தோடும் முடிவோடும் செல்லவேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலும் ஏன் ஜனாதிபதித் தேர்தலும் தமிழ் மக்களுக்கு நல்லதொரு பாடத்தை இடித்துரைத்திருக்கிறது.

எங்களது வீரப்பிரதாபங்களும் கர்வமும் பெருமை பேசுதலும் ஒருவரையொருவர் குற்றம் சுமத்துவதிலும் காலத்தை ஓட்டியிருக்கிறோமே தவிர, மக்களை அனைவரும் மறந்துபோய்விட்டோம். வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்தி பாரிய வெற்றியை நிலைநாட்டி மறைமுகமாக தமிழ்க் கட்சிகளுக்கு ஒரு பாடத்தைப் படிப்பித்திருக்கிறது. வடக்கில் வென்றிருக்கிறார்கள், வன்னியில் சாதித்திருக்கிறார்கள், கிழக்கில் எச்சரித்திருக்கிறார்கள். இதை ஏற்றுக்கொள்ளவேண்டும். கிழக்கில் நாம் வென்றுவிட்டோமென்று பெருமை பேசுவதெல்லாம் பசப்புத்தனமான தற்பெருமை.

பொதுத் தேர்தலிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் நாம் ஒன்றுபட்டு நிற்கவேண்டும் என்பதற்கப்பால் எதிர்கொள்ள விருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தலிலும் மாகாண சபைத் தேர்தலிலும் இழந்து விட்ட கௌரவத்தை மீளக் கொண்டு வர இந்த இரண்டு தேர்தல்களையும் நாம் கவனமாகவும் நிதானமாகவும் எதிர்கொள்ளவேண்டும். அப்போதுதான் அரசியல் சாசனத்துக்காக தமிழ் மக்கள் பலமான போராட்டத்தை நடத்த முடியும்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ற வகையில் அரசியல் தீர்வு விவகாரம் முன்னுரிமைப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 75 வருட காலம் தமிழ் மக்கள் இதற்காக போராடி வந்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் சுயாட்சியுடன் கூடிய அதிகாரப்பகிர்வை வேண்டி நிற்கிறார்கள் என்பதும், தமிழர் பாரம்பரியமிக்க வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து வந்திருக்கிறது என்பதை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி வலியுறுத்தி வருவதைக் காண்கிறோம். அண்மையில் வவுனியாவில் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமாக வடக்கு, கிழக்கு இணைந்த ஒரு மாநிலமாக தமிழ் மக்கள் சுயாட்சியுடன் வாழக்கூடிய அரசியலமைப்பை புதிய அரசாங்கம் உருவாக்கவேண்டும். அத்துடன், மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தி அதற்கான அதிகாரங்களை முழுமையாக வழங்கவேண்டுமென ஐந்து கட்சிகளின் கூட்டாக இயங்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தீர்மானத்தை மேற்கொண்டிருந்தது. இதேநேரம் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதில் அரசுக்கு அக்கறையில்லை என்ற அதிருப்தியும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் தமிழரசுக் கட்சியின் அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்து உரையாடியபோது புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாக அரசாங்கம் ஆரம்பத்தில் கூறியிருந்தாலும் தற்போது அதில் கரிசனை கொள்வதில்லை. புதிய அரசியல் யாப்பு தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை பூர்த்திசெய்யாத வகையில் ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறையைக்கொண்டதாக இருக்குமானால் தமிழ் மக்கள் அதற்கு எதிராக வாக்களிப்பதைத் தவிர, மாற்று வழியில்லையென தமிழரசுக் கட்சியினர் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். இத்தகைய அவநம்பிக்கைகளைப் போக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையே தவிர, மாற்று மருந்து இருக்க முடியாது.

தமிழ் மக்கள் பேரவை ஏலவே தயாரித்து முன்மொழிந்த நகல் அரசியல் திட்டத்தில் இவ்விவகாரங்கள் தெளிவாக விளக்கப்பட்டிருக்கும் நிலையும் இங்கு காணப்படுகிறது. எனவேதான் மேற்படி கோரிக்கைகளில் புதிய அரசியல் திட்டத்தில் சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு வேண்டும் என்ற கோரிக்கை, அத்துடன், வடக்கு - கிழக்கு இணைப்பு, இன்னொரு புறத்தில் மாகாண சபை அதிகாரங்கள் வலிமைப்படுத்தப்படவேண்டுமென்ற கோரிக்கைகள் பல வழிகளால் அரசாங்கத்தை நோக்கி முன்வைக்கப்பட்டு வருகிறது.

உண்மையைக் கூறப்போனால் இவை அனைத்துமே புதிய கோரிக்கைகள் அல்ல. ஏற்கனவே பல தசாப்த காலமாக முன்வைக்கப்பட்டு வருகிற கோரிக்கை. எனவேதான் இந்தக் கோரிக்கைகளை நாம் வென்றெடுக்கவேண்டுமாயின் வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபட்டு ஒரு குடையின் கீழ் அணிதிரளவேண்டிய அவசியம் உணர்த்தப்பட்டிருக்கிறது.

இவை மட்டுமல்ல, இந்தக் கோரிக்கைகளின் பின்னணியில் இருக்கும் இன்னொரு மறைமுகமான விடயம் வடக்கு, கிழக்கிலுள்ள இனத்துவமான கட்சிகளும் இந்த விடயத்தில் ஒன்றுபடுத்தப்பட்டு செயற்பட வேண்டும். இதில் குறிப்பிடக்கூடிய விடயம், முஸ்லிம் கட்சிகளை ஒன்றிணைத்துப் போராடுவதன் மூலமே குறிப்பிட்ட சில விடயங்களைச் சாதிக்க முடியுமென்பதை தமிழ்த் தரப்பினர் புரிந்துகொள்ளவேண்டும். ஆனால், இந்த விவகாரத்தில் பூனைக்கு மணி கட்டுவது யார் என்பதுதான் பலமான சங்கடமாகிறது.

# ஆபத்தைத் தருமா சீன வைரஸ்?

நா.தினுஷா

சமூகத்தில் தற்போது பரவலாகப் பேசப்பட்டுவரும் HMPV என்ற வைரஸின் விரிவாக்கம் இயுமன் மெட்டாப்நியூமோவைரஸ் (Human metapneumovirus) என்பதாகும். இந்த வைரஸ் இலங்கையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமா, மீண்டும் கொரோனா தொற்றுக்காலத்தில் ஏற்பட்டதைப் போன்றவொரு அச்சுறுத்தல் நிலைமை ஏற்பட்டுவிடுமா என்ற அச்சம் எழுந்துள்ளது.

HMPV என்று மருத்துவ குறுகிய சொல் வடிவத்தில் அழைக்கப்படும் இந்த வைரஸ் 2001ஆம் ஆண்டு ஐரோப்பா, நெதர்லாந்தை அண்மித்த பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இது சுவாச தொகுதியுடன் தொடர் புடைய நோய் அறிகுறிகளை ஏற்படுத்தக்கூடிய தன்மை கொண்டதென்பது மருத்துவ பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உலக மட்டத்திலும் சரி, இலங்கை, ஆசிய வலய நாடுகளிலும் சரி கடந்த 2019ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கொவிட் - 19 என்ற வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் இலங்கை உள்ளிட்ட பல உலக நாடுகள் பெரும் நெருக்கடியைச் சந்தித்திருந்தன. அதன்பின்னர் இதுபோன்ற தொற்று நோயை ஏற்படுத்தக்கூடிய வைரஸின் தாக்கம் ஏற்படும்போது நாம் எவ்வாறு அதனை எதிர்கொள்வது என்பது தொடர்பில் உலக நாடுகள் முன்னாயத்துடனேயே இருந்துவருகின்றன.

இருந்தபோதும், HMPV என்றழைக்கப்படும் இந்த வைரஸால் எதிர்காலத்தில் பெரும் தாக்கம் ஏற்பட வாய்ப்பில்லை என்று சுகாதாரத் துறையினர் கூறுகிறார்கள். இதுதொடர்பில் எச்சரிக்கையாகவும் முன்னாயத்துடனும் இருப்பது அவசியமாகும்.

## இலங்கையில் HMPV தாக்கம்

HMPV வைரஸ் தொடர்பில் அவ்வளவு பயங்கொள்ளவேண்டிய அவசியமில்லை என்பது வைத்தியர்களில் ஆலோசனையாக இருக்கிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த வைரஸ் இடைக்கிடை தோற்றம் பெற்றுள்ளது. இது தொடர்பான பரிசோதனைகளில் இந்த வைரஸ் அடையாளங்காணப்பட்டுள்ளது. இந்த வைரஸ் அதிக குளிர்காலத்தில் தோற்றம் பெறுகிறது. இலங்கையில் அதிக குளிர்காலம் இல்லாவிட்டாலும் உலகின் ஏனைய நாடுகளில் இன்புளுவென்சா, HMPV வைரஸ் போன்ற பல்வேறு சுவாச தொகுதியை அடிப்படையாகக்கொண்ட வைரஸ் தொற்றுகள் பரவலடைந்து வருகின்றன.

இந்த வைரஸ் தொடர்பில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத் துறை, மருத்துவ அறிவியல் பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் நீலிகா மலவிகே கூறுகையில்,

***"இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளுக்கமைய 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்த வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்தக் காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட இந்த வைரஸ் மரபணு பகுப்பாய்வுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கண்டி வைத்தியசாலையின் வைரஸ்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் அதீகா அக்ரமால், அந்த வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வந்த அநேகமான நோயாளர்களிடம் இந்த வைரஸ் தொற்று அடையாளங்காணப்பட்டுள்ளது"*** என்று தெரிவித்தார்.

எனவே, இந்த வைரஸ் தொற்றுப் பரவல் இலங்கைக்குப்புதிதல்ல; உலகத்துக்கும் புதிதல்ல என்பது மருத்துவர்களின் கருத்தாக இருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் வைத்தியசாலைகளுக்கு வரும் அநேகமான நோயாளர்கள் சுவாச நோய்களுடன் தொடர்புபட்டவர்களாகக் காணப்படுவதால், அவர்களுக்குப் பல்வேறு வைரஸ்களால் உருவாகும் சுவாச தொகுதியுடன் தொடர்புடைய தொற்று நிலைமையும் அவதானிக்கப்படுகிறது.

## தீவிரமடையும் இன்புளுவென்சா தாக்கம்


சுவாச நோய்களை ஏற்படுத்தும் பல்வேறு வைரஸ்கள் இருக்கின்றன. அநேகமான வைரஸ்கள் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. தற்போதைய நாட்களில் சுவாச நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டாலும் அவர்கள் மத்தியில் பல்வேறு வைரஸ்கள் நோய்க் காரணியாகச் செயற்படுகின்றன. இவற்றில் இன்புளுவென்சா தொற்றே அதிகம் பரவலடைவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

உலக சுகாதார ஸ்தாபனத்தால் கடந்த வாரம் வெளியிடப்பட்ட தரவுகளின் பிரகாரம் டிசம்பர் மாதத்தில் சுவாச நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை கண்காணிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் மாத்திரமல்ல, ஒவ்வொரு வருடமும் வடக்கு அரை கோளத்திலுள்ள நாடுகளில் சுவாச நோயாளர்களின் அதிகரிப்பை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

சுவாச நோய்கள் தொடர்பில் கண்டறிவதற்காக இலங்கையிலும் கண்காணிப்பு கட்டமைப்பொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது. முழு நாட்டிலும் சகல மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் தெரிவுசெய்யப்பட்ட எச்சரிக்கை நிறைந்த பிரதேசங்களை அடையாளம் கண்டு இருபது வரையான வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவில் கண்காணிப்புக் கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. பிரதான நான்கு வைத்தியசாலைகளில் அங்கு தங்கியிருந்து சிகிச்சைபெற்றுவரும் நோயாளர்களின் சுவாச நோய் தொடர்பில் கண்காணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஒவ்வொரு வருடமும்

### இலங்கையில் பல்வேறு வைரஸ்களால் ஏற்படும் காய்ச்சல் நிலைமை (01.01.2024 - 23.12.2024)




Source - WHO (GISRS)

நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் சுவாச நோயாளர்கள் குறிப்பாக, இன்புளுவென்சா நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. மேற்குறிப்பிட்ட மூன்று மாதங்களும் இன்புளுவென்சா நோயாளர்களின் இரண்டாவது கட்டமாகக் கருதப்படுகிறது.

கடந்த ஐந்து வருடங்களில் வெளிநோயாளர் பிரிவு மேற்கொள்ளப்படும் கண்காணிப்புகளின்படி ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இன்புளுவென்சா நோயாளர்களின் இரண்டாம் கட்ட அதிகரிப்பை அவதானிக்கக்கூடியதாக இருந்துள்ளது. வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நூற்றுக்கு 5 சதவீதமான நோயாளர்கள் இன்புளுவென்சா நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களில் 3.8 சதவீதமான நோயாளர்கள் இன்புளுவென்சா நோயாளர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய 2025 ஜனவரி மாத இறுதியில் இன்புளுவென்சா நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை அவதானிக்கக்கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வைரஸ் தொற்று தொடர்பில் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் சமூக மருத்துவ விசேட வைத்திய நிபுணர் சிந்தன பெரேரா கூறுகையில்,

***"இலங்கையைப் பொறுத்தவரையில் இன்புளுவென்சா நோயால் பாதிக்கப்படும் நோயாளர்களில் வருடாந்தம் 17 வரையிலானவர்களே உயிரிழக்கின்றனர். அவர்களுள் அநேகமானவர்கள் நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பதுடன், நீண்டநாள் நோயுடன் இன்புளுவென்சா தொற்றும் ஏற்பட்டமையால் உயிரிழந்துள்ளனர்"*** என்று சுட்டிக்காட்டினார்.

## HMPV – கொவிட்டை விட வீரியமிக்கதா?

உலகின் அநேகமான பகுதிகளில் கொவிட் - 19 வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளர்களும் அடையாளம் காணப்படுகிறார்கள். இடைக்கிடை metapneumovirus வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களும் அடையாளம் காணப்படுகிறார்கள். இதேபோன்று, சுவாச ஒத்திசைவு வைரஸும் அதிகளவில் பரவலடைந்து வருகிறது.

இந்த HMPV என்ற வைரஸ் ரிபோநியூக்ளிக் அமிலம் (RNA) மரபணு தொகுதியைக் கொண்ட வைரஸாகும். விசேடமாக ஐந்து வயதுக்கும் குறைவான சிறுவர்களில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதுடன், முதியவர்களுக்கும் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வைரஸாகும். அதேபோன்று நோய் எதிர்ப்புச் சக்தி குறைவான நபர்கள் மற்றும் நீண்டநாள் நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் இந்த நோய் கடும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இந்த வைரஸ் உலக நாடுகளில் இருந்துவருவதால் இந்த வைரஸ் தொற்றை எதிர்த்துப் போராடக்கூடிய நோய் எதிர்ப்புச் சக்தி மக்கள் மத்தியில் இருப்பதாக மருத்துவ ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இலங்கையில் சுவாச தொகுதியை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் நோய்களில் 10 – 13 சதவீதம் வரையில் இந்த வைரஸின் தாக்கம் இருக்கிறது.

தற்போதைய காலப்பகுதியில் சீனாவின் வடக்கு பகுதி, இந்தியா மற்றும் அமெரிக்காவின் பல்வேறு பிரதேசங்களில் இந்த வைரஸ் அடையாளம் காணப்பட்டு வருகிறது.

கொவிட் - 19 வைரஸிலிருந்து இது முற்றிலும் வேறுபட்ட வைரஸாகும். கொவிட் - 19 என்பது புதிதாக தோற்றம் பெற்ற வைரஸாகும். இது விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குத்தொற்றை ஏற்படுத்தும் தன்மை கொண்டதாகக் காணப்பட்டது. அதேபோன்று, கொவிட் - 19இல் பல்வேறு திரிபுகளும் தோற்றம் பெற்றன. அதன் காரணமாகவே கொவிட் - 19 இனின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது. அதன் காரணமாக தொற்று நோய் நிலைமை வரையில் பாதிப்பை ஏற்படுத்தியது. இதனூடாக ஏற்படும் நோய் நிலைமையும் சுவாச தொகுதியுடன் தொடர்புடையதாகும்.

ஆனால், HMPV வைரஸ் தொற்றைப் பொறுத்தவரையில் இந்த நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதா, இல்லையா என்பதைக் கண்டறிய பல்வேறு வழிமுறைகளும் இருக்கின்றன. RTPCR, ANTI BODY TESTING, அன்ரிஜன் போன்ற வழிமுறைகள் இருக்கின்றன. அன்ரிஜன் கண்டுபிடிக்கும் முறைகளும் இருக்கின்றன. ஆனால், அது பரிசோதனை மட்டத்திலேயே இருக்கிறது. இதற்குத் தனியாக தடுப்பூசி இல்லை. நோய்த் தொற்று ஏற்படுத்தும் காய்ச்சல் நிலைமையைக் குறைத்தல், நீரிழப்பைத் தவிர்த்தல் போன்ற நோய்த் தாக்கங்களைக் குறைப்பதற்கே ஆரம்பத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த வைரஸின் தாக்கத்தால் சுவாச தொகுதியை அடிப்படையாகக்கொண்டு நியூமோனியா நிலைமை வரையில் விருத்தியடைந்தால் மாத்திரம் சுவாசத்துக்கு அவசியமான ஒட்சிசன் போன்ற விடயங்கள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

***"வேகமாகப் பரவலடையும் தன்மை இந்த வைரஸிடம் இருந்தாலும் எமது நாட்டில் அப்படியொரு நிலைமை இன்றும் அவதானிக்கப்படவில்லையென்று"*** இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் சுரந்த பெரேரா சுட்டிக்காட்டுக்கிறார்.

ஆனால், இந்த HMPV என்பது சாதாரணமாக உலக நாடுகளிலிருந்து வரும் வைரஸ் வகை. மேற்குறிப்பிட்டதுபோன்று இலங்கையிலும் இந்த வைரஸ் தொற்று இதற்கு முன்னர் பதிவாகியுள்ளது. இது புதிய நோயோ அல்லது புதிய வைரஸோ இல்லை என்பது மருத்துவர்களின் கருத்தாக இருக்கிறது. உலக சுகாதார ஸ்தாபனமும் இதனையே சுட்டிக்காட்டுகிறது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கூற்றுப்படி பொதுவாக இந்த குளிர்காலத்தில் வடக்கு அரைகோள நாடுகளில் சுவாச நோயாளர்களின் அதிகரிப்பை எதிர்பார்க்கக்கூடியதாக இருக்குமென்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாக பருவகாலத்தை அடிப்படையாகக்கொண்டு பரவும் இன்புளுவென்சா, சுவாச ஒத்திசைவு வைரஸ் (RSV) மற்றும் மெட்டாப்நியூமோவைரஸ் (HMPV) உள்ளிட்ட சுவாசம் சார்ந்த ஏனைய வைரஸ்கள் மனித உள்ளிட்ட பிற பொதுவான சுவாச வைரஸ்கள் மற்றும் மைக்கோ பிளாஸ்மா நிமோனியா போன்ற நோய்கள் சுவாச நோய்க்கிருமிகளால் பருவகால தொற்றுநோய்களால் ஏற்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகின்றது.

இருந்தபோதும், சீனாவில் வைரஸ் தொற்று நிலைமை அதிகரித்துள்ளதால் ஏனைய நாடுகளிலும் இது தொடர்பில் அவசியமற்ற அச்சநிலை தோற்றம் பெற்றுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கைக்கமைய சீனாவில் அடையாளம் காணப்படும் சுவாச நோயாளர்ளில் அதிகமானோர் இன்புளுவென்சா வைரஸ் தொற்றினாலேயே பாதிப் படைந்துள்ளதாகவும் சீனாவில் மெட்டாப் நியூமோவைரஸின் தாக்கம் இருந்தாலும் இன்புளுவென்சா வைரஸின் தாக்கமே அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் இருபது வருடங்களாக இருந்துவந்தாலும், இதனால் அதிக தாக்கம் ஏற்படாமையின் காரணமாகவே இதற்காக தடுப்பூசி எதுவும் கண்டுபிடிக்கப்படவும் இல்லை என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

இந்த வைரஸ் தொடர்பில் விசேடமாக அறிக்கையிடுமளவுக்கு புதிய விடயமில்லை என்றும் சாதாரண வைரஸ் தொடர்பில் அச்சங்கொள்ள வேண்டியதுமில்லை என்றும் வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

தேசிய தொற்று நோய்கள் நிறுவனத்தின் ஆலோசகர் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவிக்கையில்,

***"சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்களிலிருந்து பாதிப்படையாமல் இருப்பதும் நன்மையையே ஏற்படுத்தும். டிசம்பர், ஜனவரி மாதங்கள் அதிக குளிர்காலம் என்பதாலும் ஏனைய நாடுகளிலும் இந்த வைரஸ் பரவலடைந்து வருகின்றமையின் காரணமாக இலங்கையிலும் இந்த நோய் நிலைமை பரவலடைவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன"*** என்று தெரிவித்தார்.

இருந்தபோதும், பேசும்போது வெளியாகும் எச்சில் துளிகளால் ஏனையவர்களுக்கும் வைரஸ் தொற்று நிலைமை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இதனைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனில், அதிக சன நெரிசல் கொண்ட இடங்களுக்கு அவசியமின்றி பயணிப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். சுவாச நோய் நிலைமை இருக்கும் பட்சத்தில் அவ்வாறு சன நெரிசல் கொண்ட இடங்களுக்குச் செல்வதென்றால் முகக்கவசம் பயன்படுத்துவது அவசியமாகும். அதனூடாக ஏனையவர்களுக்கு இந்த வைரஸ் தொற்று ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள முடியும். மெட்டாப்நியூமோவைரஸ் என்பதற்காக மாத்திரமல்ல, பொதுவாக வேறு எந்த வொரு வைரஸால் சுவாச நோய் நிலைமை ஏற்பட்டாலும் முகக்கவசம் அணிவிப்பதனூடாக ஏனையவர்களுக்கு அந்த நோய் பரவலடைவதைத் தவிர்த்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

எனவே, ***"மெட்டாப்நியூமோ வைரஸ் அவ்வளவு தூரம் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வைரஸ் அல்ல. அதனால் அச்சங்கொள்ள வேண்டியது அவசியமில்லை. இன்புளுவென்சா தாக்கத்தால் இரண்டு மூன்று வாரங்களுக்கு காய்ச்சல் நிலைமை இருக்கக்கூடும். எனவே, அதனைத் தவிர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதே மருத்துவர்களின் ஆலோசனையாக இருக்கிறது''*** என்று வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம ஆலோனை கூறுகிறார்.

மெட்டாப்நியூமோவைரஸ் ஒருவரிடமிருந்து இன்னுமொருவருக்கு பரவலடைவதற்கான வாய்ப்பிருக்கிறது. அதற்கப்பால் வேறு பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தாது. உலகில் இருபது வருடங்களுக்கு மேல் இருப்பதால் இலங்கையிலும் இந்த வைரஸின் தாக்கம் நீண்ட காலம் இருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

சீனாவில் HMPV உட்பட கடுமையான சுவாச நோய்த்தொற்றுகளின் அளவுகள் குளிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் எல்லைக்குள்ளேயே, அசாதாரண நிலைமை எதுவும் பதிவாகவில்லை என்றும் சீன அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

சுகாதாரப் பராமரிப்புச் செயற்பாடு அதிகமாக இல்லை என்றும் மருத்துவமனை பயன்பாடு கடந்த ஆண்டை விட தற்போது குறைவாக உள்ளது என்றும் அவசரகால அறிவிப்புகள் அல்லது பதில்கள் எதுவும் அதிகரிக்கப்படவில்லை என்றும் சீன அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

குளிர்காலத்தில் சுவாச நோய்த் தொற்றுகள் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படும் நிலையில், சீனா உள்ளிட்ட நாடுகள் சுவாச நோய்த்தொற்றுகள் பரவுவதைத் தடுப்பது மற்றும் நோயின் தாக்கத்தைக் குறைப்பது எப்படி என்பது குறித்த சுகாதாரச் செய்திகளை பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன.

## WHOஇன் ஆலோசனைகள்


குளிர்காலம் நிலவும் பகுதிகளிலுள்ள தனிநபர்கள் பரவலைத் தடுக்கவும் சுவாச நோய்க்கிருமிகளால் ஏற்படும் அபாயங்களைக் குறைக்கவும் சாதாரண முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்துள்ளது. குறிப்பாக, தொற்று அறிகுறிகள் உள்ளவர்கள் மற்றவர்களுக்கு தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க வீட்டிலேயே இருக்க வேண்டும், மற்றும் ஓய்வெடுக்க வேண்டும்.

அதிக ஆபத்திலுள்ளவர்கள் அல்லது சிக்கலான அல்லது கடுமையான அறிகுறிகளைக் கொண்டவர்கள் விரைவில் மருத்துவ உதவியை நாடவேண்டும். நெரிசலான அல்லது மோசமான காற்றோட்டமான இடங்களில் முகமூடி அணிவது, இருமும் போதும் தும்மும்போதும் திசு அல்லது முழங்கையால் மூடுவது, வழக்கமாகக் கை கழுவுதல் , மருத்துவர் மற்றும் உள்ளூர் பொதுச் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையின்படி பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசிகளைப் பெறுவது ஆகியவற்றை தனிநபர்கள் கருத்திற்கொள்ள வேண்டும்.

நாட்டின் சூழல், முன்னுரிமைகள், வளங்கள் மற்றும் திறன்களைக் கருத்திற் கொண்டு, ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் சுவாச நோய்க்கிருமிகளைக் கண்காணிக்க உறுப்புநாடுகளை உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்துகிறது. சுகாதார ஸ்தாபனம் இங்கே ஒருங்கிணைந்த கண்காணிப்பு குறித்த வழிகாட்டுதலை வெளியிட்டுள்ளது. சுகாதார வசதிகளில் ஏற்படும் தாக்கம் உட்பட, இன்புளுவென்சா தொற்றுநோய் மற்றும் தொற்றுநோய் தீவிரத்தை மதிப்பிடுவதற்கான வழிகாட்டுதலையும் சுகாதார ஸ்தாபனம் புதுப்பித்துள்ளது.

எனவே, மெட்டாப்நியூமோவைரஸ் தொடர்பில் வீண் அச்சம் தேவையில்லை என்றும் நோய் அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் வைத்தியர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

### HUMAN METAPNEUMOVIRUS இன் அறிகுறிகள்



**01 மூக்கு ஒழுகுதல் அல்லது அடைத்தல்**
*சளி, காய்ச்சல் அல்லது COVID-19 உள்ளிட்ட பல வைரஸ்களால் மூக்கு ஒழுகுதல் அல்லது அடைப்பு ஏற்படலாம்.*

**02 இருமல்**
*வைரஸால் ஏற்படும் இருமல் என்பது குறுகிய கால இருமலாகும். இது சுவாசக் குழாயில் ஏற்படும் வைரஸ் தொற்று காரணமாக ஏற்படுகிறது.*

**03 மூச்சுத் திணறல்**
*மூச்சுத் திணறல் பொதுவாக சளியின் அறிகுறியாக இருக்காது. ஆனால், அது மிகவும் கடுமையான நிலையின் அறிகுறியாக இருக்கலாம்.*

**04 தொண்டை வலி**
*தொண்டை வலி பெரும்பாலும் தடிமன் அல்லது காய்ச்சல் போன்ற வைரஸ் தொற்றால் ஏற்படுகிறது.*

**05 ஆஸ்துமா**
*வைரஸ் தாக்கம் தீவிரமடையும்போது ஆஸ்துமா நிலைமை அதிகரிக்கக்கூடும்.*

**06 காய்ச்சல்**
*காய்ச்சலை ஏற்படுத்தும் பல்வேறு வகையான வைரஸ்கள் இருக்கின்றன. HMPV வைரஸ் தொற்றிலும் இது பொதுவான அம்சமாகும் .*

**07 ஒவ்வாமை**
*வைரஸால் ஏற்படும் ஒவ்வாமையால் உடம்பில் புள்ளிகள், புடைப்புகள் அல்லது அரிப்புடன் கூடிய கொப்புளங்களாகத் தோன்றும்.*

# அரசின் குறைகளை மறைக்கிறதா கிளீன் ஸ்ரீலங்கா திட்டம்



எம்.எஸ்.அமீர் ஹுசைன்

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு வழங்கப்படுமா என்பது பிரதான கேள்வியாக இருக்கின்றது. அதேநேரம்

மின்சாரக் கட்டணக் குறைப்பு உட்பட இன்னும் பல சலுகைகள் தொடர்பாகவும் மக்கள் மத்தியிலிருந்து கேள்விகள் எழுப்பப்படுகின்ற நிலையில், அரசாங்கம் தொடர்ந்தும் கடந்த கால ஆட்சியின் குறைபாடுகளையும் ஊழல், மோசடிகளையும் சுட்டிக்காட்டி மக்கள் கோரிக்கைகளைத் திசை திருப்பும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. எவ்வாறாயினும், அந்தத் தவறுகளை சரிசெய்ய அரசாங்கம் ஆரம்பித்துள்ள புதிய திட்டமாக சுத்தமான இலங்கை என்ற கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை முன்னெடுக்க ஆரம்பித்திருக்கின்றது. இந்த கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் பற்றிய இரண்டு நாள் விவாதமொன்றுக்கும் 2025.01.23ஆம், 24ஆம் திகதிகளை பாராளுமன்றத்தில் ஒதுக்குவதாக பிரதமர் பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.



கிளீன் ஸ்ரீ லங்கா என்ற இத்திட்டத்தின் மூலம் நாட்டில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் பல உள்ளன. அதன் ஓர் அம்சமாகவே வாகனங்களைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தும் வேலைகளும் நடக்கின்றன. போக்குவரத்தில் நிகழும் ஒழுங்கீனமான தன்மைகளை தடுத்து நிறுத்தி பொருத்தமற்றவைகளை நீக்குவதும் கிளீன் ஸ்ரீ லங்காவின் பிரதான வேலைத்திட்டங்களில் ஒன்றாகும். ஆனாலும் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டவுடன் வாகன உரிமையாளர்கள் தரப்பிலிருந்து பெரும் சர்ச்சை கிளம்ப ஆரம்பித்திருக்கின்றது.

தினமும் நடைபெறும் வாகன விபத்துகளால் நாட்டின் பல பாகங்களில் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. வாகனங்களை இலக்கு வைத்த கிளீன் ஆரம்பத்தின் பின்னணி ஒருவிதமான தூர நோக்கம் கொண்டதாகும். வருடாந்தம் 3000இற்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறான விபத்துகளால் மரணிக்கின்றனர். விபத்தொன்று நடந்து முடிந்த பின்னர் யார் தவறு, யார் சரி என்பதைத் தேடுவதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. ஏற்படுகின்ற உயிரிழப்புகளால் பாதிக்கப்படுபவர்கள் சம்பந்தப்பட்டவர்களின் குடும்பங்களாகும்.

கணவரை பெண்கள் இழக்கும்போது அந்தக் குடும்பம் அநாதரவாகின்றது. பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றனர். அல்லது தாய், தந்தையர் பலியாகின்றபோது அந்தக் குடும்பமே அநாதரவாகின்றது. பொருளாதார ரீதியாக பல நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடுகின்றது. பின்விளைவுகள் நீண்ட காலத்துக்கு தொடரக்கூடியதாக அமைகின்றன. இவ்வாறான நிலைமைகளிலிருந்து ஒவ்வொருவரும் பாதுகாப்புப் பெறுவதாக இருந்தால் முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகின்றது. அதேபோன்று வாகன ஓட்டுநர்களும் பொதுமக்களது உயிருக்கு மதிப்பளித்து மிகவும் அவதானமாக வாகனத்தை செலுத்த வேண்டிய பொறுப்பை சுமந்தவர்களாக இருக்கின்றனர்.

அதிகமான விபத்துகளின் போக்குகளை அவதானிக்கும்போது பொதுப் போக்குவரத்து பஸ்களால் ஏற்படும் விபத்துகள் கூடுதலாக நடைபெறக்கூடியதாக உள்ளன. புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பார்க்கின்றபோது 2024ஆம் ஆண்டில் முதல் 10 மாத காலப்பகுதிக்குள் மாத்திரம் 1,818 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. இந்த விபத்துகளால் சுமார் 2000 பேர் அளவில் உயிரிழந்துள்ளனர். 2023ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், 2,200 விபத்துகளால் 2,557 பேர் பலியாகியிருக்கின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி நிஹால் தல்துவ அண்மையில் தெரிவித்தார். இவ்வாறாக வருடாந்தம் 2000இற்கும் மேற்பட்ட வீதி விபத்துகள் இடம்பெறுவதோடு பலியாகின்றவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தவண்ணம் உள்ளன.

அதேநேரம் பொலிஸ் தலைமையகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவிக்கையில், கடந்த 05 வருட காலப்பகுதிக்குள் வீதி விபத்துகளால் இறந்தவர்களின் எண்ணிக்கை 12,140. காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 90,000 ஆகும் என்றும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மரணித்தவர்களது குடும்பங்களுக்கு சட்ட நடவடிக்கை மூலமும் போதுமான நிவாரணங்கள் கிடைப்பதாக இல்லை. உரிய நஷ்ட ஈடுகளும் அறவிடப்படுவதில்லை. வழக்குகளும் முடிய நீண்டகாலம் செல்கின்றன. விபத்துகளுக்குக் காரணமானவர்கள் எப்படியாவது சில சந்தர்ப்பங்களில் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிடும் சந்தர்ப்பங்களும் நிறைய உள்ளன.

எத்தனை வகையான வீதிப் போக்குவரத்து சட்டங்கள் நடைமுறையில் இருந்தாலும் வீதி விபத்துகளும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. தினமும் காலை முதல் இரவு வரையில் நாட்டிலுள்ள அனைத்து வீதிகளிலும் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டவர்களாக வீதிப் போக்குவரத்துச் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் மீறுபவர்களையும் கண்காணித்து அபராதம் விதித்தும் சட்ட நடவடிக்கை எடுத்தாலும் விபத்துகளின் எண்ணிக்கை 2000த்தை தாண்டி விடுவதோடு மரணிப்போர் எண்ணிக்கையும் அதிகரித்தவண்ணமுள்ளன. அவ்வாறே காயமடைந்து முடமாகின்றவர்களது எண்ணிக்கை ஆயிரக்கணக்கிலாகும்.

அவ்வாறாயின், இத்தகைய விபத்துகள் ஏன் நடைபெறுகின்றன? எவ்வாறு நடக்கின்றன? விபத்துகளுக்கான காரணங்கள் யாவை? இத்தகைய விபத்துகளைக் கட்டுப்படுத்த முடியாதா? என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன. ஒவ்வொரு சாரதியும் காலையில் எழுந்து தமது வாகனத்தைக் கையில் எடுக்க முன்னர் குறித்த பிரயாணம் மிகவும் பாதுகாப்பாக அமைய வேண்டுமென்று தாம் வணங்கும் இறைவனை, கடவுளை பிரார்த்தித்தவர்களாகவே வாகனத்தை கையிலெடுக்கின்றனர். ஒருபோதும் தமது வாகனம் விபத்துக்குள்ளாக வேண்டும், அதன்மூலம் யாரும் மரணிக்க வேண்டும் என்று கனவிலும் நினைப்பதில்லை. ஆனாலும் வாகனத்தை வீதிக்குப் போட்டவுடன் எதிர்பாராத விதமாக விபத்துகளைச் சந்திக்க நேரிடுகின்றன.

**உயிர்களுக்கு விலை மதிப்பிட முடியாது. இதனைச் சாரதிகள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். அனைவரும் பாதுகாக்கப்பட வேண்டும். விலைமதிக்க முடியாத உயிர்களைப் பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கைக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும்.**

பாதசாரிகளது கவனயீனமான நடத்தை, வீதிப் பாதுகாப்புச் சட்டங்களை உதாசீனம் செய்தல், மது போதையில் வாகனம் செலுத்துதல், வாகனங்களை செலுத்தும் போது செல் போன்களை பயன்படுத்தல், சாரதிகளுக்கு திடீர் என்று நித்திரை வருதல், சாரதிகளின் உதாசீனமான போக்குகள் மற்றும் முறையாக சாரதி அனுமதிப்பத்திரம் பெறாமல் இலஞ்சம் கொடுத்துப் பெறல் என்று விபத்துகளுக்கான காரணங்களாக சொல்லலாம். அதிலும் இலங்கையில் பொதுப் போக்குவரத்தில் 16,000 அளவிலான தனியார் பஸ்களும் 11,000 அளவிலான இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களும் தினமும் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. மறுபுறமாக மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி என்று விபத்துகளுக்குக் காரணமான வாகனங்களாக உள்ளன.

எவ்வாறாயினும், இத்தகைய விபத்துகளின் போக்குகளை அவதானிக்கையில், பொலிஸ் போக்குவரத்துப் பொலிஸார் கண்காணித்துள்ள விடயங்களாக இருப்பவை பொதுப் போக்குவரத்து வாகனங்களால் ஏற்படும் விபத்துகள் அதிகமாக இருப்பதோடு, உயிரிழப்புகளுக்கும் இத்தகைய வீதி விபத்துகளே காரணமாக அமைந்துள்ளன. அத்துடன், சாரதிமாரின் கவனயீனமும் முக்கிய காரணமாக அமைந்துள்ளது என்ற விடயத்தைக் கண்டறிந்துள்ளனர்.

தனியார் போக்குவரத்து பஸ்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளை அசாதாரணமான முறையில் உதிரிப்பாகங்களைப் பொருத்தி அலங்கரித்திருப்பது, வாகனத்துக்குள் அதிக ஒலி எழுப்பும் வகையில் வானொலி பயன்படுத்தல் போன்ற விடயங்களும் விபத்துகளில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

அதனால் கடந்த வாரம் முதல் போக்குவரத்து சோதனை பொலிஸார் நாட்டில் பல பாகங்களில் தனியார் பஸ்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளை சோதனை செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். இந்தச் சோதனையின் போது போக்குவரத்துச் சட்டங்களை மீறும் வகையிலும் வாகனம் செலுத்தும்போது சாரதியின் முன்னோக்கிய அவதானத்துக்குத் தடையாக அமையக்கூடிய வகையில் செய்யப்பட்டுள்ள அலங்காரங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குறிப்பாக, எல்லை மீறும் வகையிலான பலவிதமான வர்ணங்களை உடைய மின்குமிழ்களைக்கொண்ட அலங்காரம், சாரதியின் இருக்கைக்கு முன்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள விதம் விதமான அழகுபடுத்தல்கள், கடுமையான ஒலி எழுப்பும் வகையிலான ஹோர்ன், வாகனத்தைச் செலுத்திக்கொண்டே செல்போனில் உரையாடும் வகையிலான உபகரணங்கள் என்று பலவிதமான அலங்காரங்களை பொலிஸார் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சில முச்சக்கர வண்டிகளில் பொருத்தப்பட்டுள்ள புத்தர் சிலைகளைக் கூட ஒதுக்குமாறு பணித்துள்ளனர். பொலிஸாரின் இத்தகைய செயற்பாடு காரணமாக தனியார் பஸ் ஓட்டுநர்கள் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கிடையில் நாட்டில் பல இடங்களில் முரண்பாடுகள் நிகழ்ந்துள்ளன. தற்போது இந்த விடயம் தொடர்பாக அதற்கான சங்கம் தலையிட்டு பொலிஸாருக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். ஆனாலும் சாரதிகளுக்கு ஒரு வார காலக்கெடு விதித்து அதற்குள்ளாக இத்தகைய மேலதிகமான கருவிகள், உபகரணங்களை அப்புறப்படுத்தாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று அறிவித்துள்ளனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கை பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையாக அமைவதால் அது குறித்து பாராட்டப்பட வேண்டும். பாதுகாக்கப்படுவது பொதுமக்கள் மட்டுமல்லாது, சாரதிகளும் தான் என்பதையும் மறந்து விட முடியாது.

ஆனாலும் இத்தகைய பொருட்களை விற்பனைக்காக இறக்குமதிசெய்துள்ள வியாபாரிகளும் இந்தப் புதிய நடவடிக்கையால் பாதிக்கப்படவிருக்கின்றனர். இவ்வாறான வாகன அலங்கார உதிரிப்பாகங்கள் இந்தியா, தாய்லாந்து, சீனா போன்ற நாடுகளிலிருந்தே அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. சிலநேரங்களில் இரவுநேரங்களில் பல வர்ணங்களிலான மின்குமிழ்கள் தரும் எல்லை மீறிய வெளிச்சம் காரணமாக முன்னால் வரும் வாகனச் சாரதிகள் கடுமையான நெருக்கடிகளை சந்திக்கின்றனர். தடுமாறும் நிலைமைகள் உள்ளன.

அதனால் இத்தகைய நிலைமைகள் தொடர்பாக சுற்றிவளைப்புகளைச் செய்யும்



பொலிஸார் முதற்கட்ட நடவடிக்கையில் அபராதம் விதிப்பதில்லை. பொருத்தமற்ற முறையில் பொருத்தப்பட்டிருக்கும் உதிரிப்பாகங்களை நீக்குமாறு கோருகின்றனர். எதுவானாலும் போக்குவரத்துச் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் மீறும்போது பாதிக்கப்படுபவர்கள் அப்பாவி பொதுமக்களோவர்.

உயிர்களுக்கு விலை மதிப்பிட முடியாது. இதனைச் சாரதிகள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். அனைவரும் பாதுகாக்கப்பட வேண்டும். விலைமதிக்க முடியாத உயிர்களைப் பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கைக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும். ஆனாலும் இந்த விடயம் கிளீன் ஸ்ரீ லங்காவின் ஓர் அம்சம் என்றும் திடீரென்று இவ்வாறான நடைமுறைகளை அனுமதிக்க முடியாது என்றும் சாரதிகள் தெரிவித்து வருகின்றனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஒருநாள் வேலைநிறுத்தம் ஒன்றுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. எவ்வாறாயினும், முன்னைய கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்தவுடன் மக்கள் அவதானத்தை அரசின் பக்கம் கொண்டுவர ஆரம்பித்த ஒரு வேலைத்திட்டம்தான் நாட்டிலிருந்த மதில்களில் சித்திரம் வரையும் திட்டம். இந்தக் கிளீன் ஸ்ரீ லங்காவும் அவ்வாறான ஒரு திட்டமாக அமையக் கூடாது என்பது பலரதும் எதிர்பார்ப்பாகும்.

## பேசுபொருளாக மாறியுள்ள...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சர்வதேச பாதுகாப்பு கோரி மியன்மாரை விட்டு வெளியேறும் மக்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தால் 2024ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல் குறிப்பின் பிரகாரம், அந்நாடு இன்னும் பாதுகாப்பற்றதாக உள்ளதென ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

குறித்த அகதிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பார்வையிடுவதற்கான அனுமதியின் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தி வருகின்றார்.

ரோஹிங்யா அகதிகளை நாட்டுக்குள் வரவேற்று அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கியமைக்காக இலங்கை அரசாங்கத் துக்கு நன்றிகளைத் தெரிவிப்பதாக ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரே ப்ரென்ச் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் செயற்பாடுகள் கடந்த டிசம்பர் 31ஆம் திகதியுடன் இலங்கையில் நிறைவடைந்துள்ளது.

இருந்தபோதிலும், கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதி விடப் பிரதிநிதியின் அலுவலகத்தில் அகதிகளின் விடயங்களைக் கவனிப்பதற் காக ஓர் அதிகாரி தற்போதும் செயற்பட்டு வருகின்றார்.

குறித்த ரோஹிங்யா அகதிகள் இலங்கைக்கு வந்தபோது அவர்களுக்குத் தேவையாக இருந்த மொழிபெயர்ப்பு உதவியை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்துகொடுத்திருந்தது.

இதுபோன்று தேவையான அடிப்படை வசதிகளை குறித்த மக்களுக்கு வழங்கவும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் தயாராகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் வலையமைப்பு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, குறித்த 103 ரோஹிங்யா அகதிகளை மீண்டும் மியன்மாருக்கு திருப்பியனுப்ப வேண்டாமென பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன் மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகி யோர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வுக்கு அண்மையில் கடிதம் எழுதியுள்ளனர்.

அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் இது விடயமாக பாராளுமன்றில் சுட்டிக்காட்டியிருந்தார். இதனிடையே, கடந்த ஜனவரி 03ஆம் திகதி வெள்ளிக் கிழமை இது விடயமாக கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமும் இடம்பெற்றது.

குறித்த அகதிகளை நாடு கடத்த வேண்டாம் என்பதை வலியுறுத்தியும் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களை பாதுகாக்குமாறும் கோரி கடந்த வியாழக் கிழமை முல்லைத்தீவிலும் கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது.

இவ்வாறு ரோஹிங்யா அகதிகளுக்கான ஆதரவு நாளுக்கு நாள் இலங்கையில் அதிகரித்து வருகின்றது. இதனால் குறித்த அகதிகளை ஒருபோதும் மியன்மாருக்கு திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது. எனினும், இந்த அகதிகள் விடயத்தில் சரியான தீர்மானமொன்றை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

# கலிபோர்னியா சந்தித்த பேரழிவு









அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் இருக்கும் பல்வேறு பகுதிகள் காட்டுத் தீயால் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கே ஏற்பட்ட காட்டுத் தீ தொடர்பான ரீல்ஸ் காட்சிகள் பல இணையத்தில் வைரலாகி வருகின்றன.

அமெரிக்காவில் காட்டுத் தீ அதிகம் ஏற்படும் பகுதிகளில் கலிபோர்னியா மாகாணம் முக்கிய இடத்தில் இருக்கிறது. கடந்த ஒருவருடம் மட்டுமே கலிபோர்னியாவில் மொத்தம் 40இற்கும் மேற்பட்ட காட்டுத் தீ பரவல்கள் ஏற்பட்டன. ஒரே மாதத்தில் கலிபோர்னியாவில் இங்கே 2-3 தடவைகள் தீ ஏற்படுவது வழக்கம்.

வழக்கமாக இந்த காட்டுத் தீ முதலில் வென்சுரா என்ற பகுதியில் உருவாகும். பின் சாண்டா பார்ப்பாரா பகுதியில் உக்கிரமடைந்து லொஸ்ஏஞ்சல்ஸ் வரை கூட பரவும். இந்தத் தடவை லொஸ்ஏஞ்சல்ஸ் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 3,00,000 பேர் கலிபோர்னியாவை விட்டு வெளியேறிவிட்டனர். 10,000இற்கும் அதிகமான வீடுகள் அப்படியே தீக்கிரையாகியுள்ளன. அமெரிக்க வரலாற்றில் ஏற்பட்ட பெரிய காட்டுத் தீயில் இதுவும் ஒன்று.

இந்தத் தடவை காட்டுத் தீயை அணைப்பது மிகவும் சிரமமான காரியமாக இருக்கிறது. இது லொஸ்ஏஞ்சல்ஸ் பகுதியை அடைவதற்குள் எப்படியாவது அணைக்கப்பட்டுவிடும் என்று கூறப்பட்டது. ஆனால், தற்போது லொஸ்ஏஞ்சல்ஸ் பகுதியையும் இந்தத் தீ கைப்பற்றிவிட்டது.

2,95,000 ஏக்கர் நிலப்பரப்பை லொஸ்ஏஞ்சல்ஸ் பகுதியில் மட்டும் ஆக்கிரமித்திருக்கிறது. இந்தத் தீ மொத்தமாக ஆக்கிரமித்த பகுதிகள் லண்டனின் அளவை விட அதிகமாகிவிட்டதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக லொஸ்ஏஞ்சல்ஸ் பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. லொஸ்ஏஞ்சல்ஸ் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயிலேயே இதுதான் மிக மோசமானதென்று அமெரிக்க வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை இந்தத் தீ காரணமாக 10 பேர் பலியாகியுள்ளனர். இதனால் ஏற்பட்ட புகை நியூயோர்க் நகரத்தில் கூட பரவியுள்ளது. 1,000 தீயணைப்பு வாகனங்களும் 32 ஹெலிகொப்டர்களும் 8,500 தீயணைப்பு வீரர்களும் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதுவரை 750 கோடிக்கும் அதிகமாக இதனால் செலவாகியுள்ளது. எவ்வளவு இழப்பு என்று தீ அணைந்த பின்பே கண்டுபிடிக்க முடியும். 4,700 கோடிக்கும் அதிகமாக கண்டிப்பாக இழப்பு ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தக் காட்டுத் தீ உருவாகி இரண்டு வாரத்துக்கும் அதிகமாகிவிட்டது. இதன் காரணமாக கலிபோர்னியா மாகாணத்தின் முக்கிய பகுதிகள் நாசமாகியிருக்கின்றன. இது லொஸ்ஏஞ்சலஸ் நகரத்தைத் தாக்குவதற்கு முன்பே நிறுத்தப்படுமென்று கூறப்பட்டது. ஆனால், தற்போது லொஸ்ஏஞ்சல்ஸ் பகுதியில் பெரும்பாலான இடங்களை இந்தத் தீ நாசம் செய்திருக்கிறது. இன்னும் இந்தத் தீ கட்டுப்படுத்த முடியாமல் பரவிக்கொண்டிருக்கிறது.

அங்கே தீயை அணைக்க போதுமான ஊழியர்கள் இல்லை என்பதால் ஓய்வுபெற்ற 600 ஊழியர்கள் மீண்டும் பணிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். அங்கே தீயை அணைப்பதில் ஜனாதிபதி பைடன் அரசு தோல்வியடைந்துவிட்டதாக ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள டிரம்ப் குற்றச்சாட்டு வைத்துள்ளார்.

அங்கே ஏற்பட்ட காட்டுத் தீ தொடர்பான ரீல்ஸ் காட்சிகள் பல இணையத்தில் வைரலாகி வருகின்றன. மலிபு போன்ற பிரபல பகுதிகளில் வீடுகளெல்லாம் நாசமான வீடியோ காட்சிகளும் வைரலாகி வருகின்றன. லொஸ்ஏஞ்சல்ஸ் வரலாற்றில் ஏற்பட்ட இந்த மிக மோசமான தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் போராடிக்கொண்டுள்ளனர்.

பல்லாயிரக்கணக்கானோர் இந்த காட்டுத் தீயால் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளனர். பலர் தற்போது தற்காலிக நிலையங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.











# உழவர் திருநாளாம் தைத்திருநாள்

கே.அனுஷா

தமிழர்களின் திருநாளே தைத்திருநாள். “தை பிறந்தால் வழி பிறக்கும்” என்பார்கள். உலகிலும் இலங்கையிலும் பரந்து வாழும் தமிழர்களின் முக்கிய திருநாள் தைப்பொங்கலாகும். மார்கழி மாதம் பிறந்து 30 நாட்கள் முடிந்த பின்னர் மறுநாள் தை மாதம் பிறக்கின்றது. தமிழர்களின் முக்கியமான திருநாளில் தை மாதம் முதலிடத்தைப் பிடிப்பதோடு இது முழுமையாக சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நாளாகவே கருதப்பட்டு வருகின்றது. சோதிட ரீதியாகப் பார்க்கும்போது சூரிய பகவான் புதிய ராசியில் பிரவேசித்தல் என்று கூறப்படுகின்றது.

**போகிப் பண்டிகை**

போகிப் பண்டிகையானது சூரிய நாட்காட்டியின்படி, தமிழ் ஆண்டின் மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று கொண்டாடப்படுகிறது. பொங்கல் திருநாளின் முதல்நாள் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் பழையன கழித்து, புதியன புகவிடும் நாளாகக் கருதப்படுகிறது. பழையவற்றையும் உபயோகமற்றவையும் விட்டெறியும் நாளாகக் கருதப்படுகிறது. போகியன்று, வீட்டின் கூரையில் பூலாப்பூ செருகப்படும். அன்றைய தினம், வீட்டில் தேங்கிப் போயிருக்கும் குப்பைகள், தேவையற்ற பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டு வீடு சுத்தமாக்கப்படும். வீடு மட்டுமல்ல, மனதில் இருக்கும் தீய எண்ணங்களும் தவறான எண்ணங்களும் நீக்கப்படவேண்டுமென்பது இதிலுள்ள தத்துவமாகும்.

**தைப்பொங்கல்**

வீடுகளில், ஆலயங்களில் 30 நாட்கள் மார்கழி கோலம் போடுவார்கள். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் நீராடிய பெண்கள் வீட்டின் வாசலில் - ஆலயங்களில் இந்த மா கோலத்தைப் போடுவார்கள். அந்தக் கோலத்தின் நடுவில் பசுவின் சாணம் கொண்டு பிள்ளையார் செய்து அதன் மேல் மலரொன்றும் வைத்து பூஜை செய்யப்படும். அதாவது, தூபதீபம் இட்டு சூரியனுக்குக் காட்டப்படும். இது 30 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும். 30ஆவது நாளில் சாணம் மூலம் செய்யப்பட்ட 30 பிள்ளையார்கள் காணப்படும். இதனை தைப்பொங்கலன்று மாலைவேளையில் கடலில் போடுவார்கள்.

தை பிறக்கும் நாளன்று எல்லா இந்துக்களின் வீடுகளிலும் அதிகாலையிலேயே துயில் எழுந்து விடுவார்கள். அதிகாலை 5 மணியளவில் பசுவின் சாணத்தை வீட்டின் முன் வாயிலில் பரவலாகப் தெளித்து செப்பனிடப்படும். அதன் மீது புள்ளிக் கோலத்தைப் போடுவார்கள். கோலங்களில் ரங்கோலி, புள்ளிக் கோலம் என இரு வகையான கோலங்கள் வழக்கத்தில் காணப்படுகின்றன.

தைத்திருநாளன்று பொதுவாக புள்ளிக்கோலமிடுவது வழக்கமாகி வருகின்றது. அரிசி மாவில் கோலமிடுவது எறும்பு போன்ற ஊர்வனங்களுக்கு உணவு பெற்றுக்கொள்வதற்கு வழியாகும். வீட்டில் கோலத்தைச் சுற்றி நான்கு புறங்களிலும் கரும்பு போன்றவற்றை நிறுத்தி அதில் மாவிலை, தோரணம் என்பவற்றை தொங்கவிடுவார்கள். பின்னர் வாழையிலையில் பச்சரிசியைப் பரப்பி அதன் மீது நிறைகுடம் வைக்கப்படும். இரு மருங்கிலும் மங்கல விளக்கு போன்றவைகளும் அங்கு வைக்கப்படும்.

சூரியன் உதயமாகிக்கொண்டிருக்கும்போதே பொங்கல் பானை அடுப்பில் ஏற்றப்படும். இந்தப் பொங்கல் அரிசி, பயறு, சீனி, சர்க்கரை, நெய், பால் போன்றவை சேர்க்கப்பட்டு சர்க்கரைப் பொங்கலாக முழுமைபெறும். இந்த சர்க்கரைப் பொங்கல் தயாராகி படையல் போடப்படும். அந்தப் படையலுடன் கொழுக்கட்டை, பழவகைகளும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும்.



அதிகாலை சூரியன் உதித்து வெளிச்சத்தைக் காணும்போது, தீபாராதனை காட்டப்படும். அன்று எல்லோரும் சூரிய பகவானை - அந்த இயற்கைக் கடவுளை நன்றியோடு வணங்கு வார்கள். இந்நிகழ்வை சூரிய பகவானுக்குரிய திருவிழா என்றே கூறவேண்டும். அதேவேளை, உலகுக்கு ஒளியூட்டுபவன் என்ற வகையில் சூரிய பகவான் உலகில் வாழும் இந்துக்களால் வணங்கப்படும் தெய்வம் என்றே கூறலாம்.

வேளாண்மைக்குத் தேவையான மழை நீரையும் சூரிய ஒளியையும் (வெயிலையும்) காற்றையும் தேவைக்கேற்ப வழங்கி தம்மையும் நாட்டையும் செழிப்புடன் வாழ உதவிய இயற்கைக்கும் (பூமி, சூரியன், வளிமண்டலம், நீர்நிலைகள் போன்றவற்றுக்கும்) தம்மோடு சேர்ந்து கஷ்டப்பட்டு உழைத்த கால்நடைகளுக்கும் தொழிலாளர் களுக்கும் தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாக உழவர்களால் தைப்பொங்கல் கொண்டாடப்பட்டு வந்துள்ளது.

தற்பொழுது பொங்கல் விழாவானது முன்புபோல் வீடுகளில் மட்டுமன்றி ஆலயங்கள், கல்விக்கூடங்கள், தொழில் நிலையங்கள், இந்துக்கள் அல்லாத



தமிழ் மக்களாலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருவதால் தமிழர் பண்டிகையாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு சிறப்படைகின்றது.

தைப்பொங்கல் பண்டிகையின்போது உழவர்கள் தாம் அறுவடைசெய்த நெற்கதிர்களை அரிசியாக்கி அதில் பொங்கல் பொங்கி கொண்டாட, பல்வேறு தொழில் புரிவோர் உழவர்களுடன் பண்டமாற்று செய்து புதிய அரிசியை வாங்கிப் பொங்கல் பொங்கி கொண்டாடுகின்றார்கள்.

உழவர்கள் மார்கழி மாதத்தில் (தைப்பொங்கலுக்கு முன்னர்) ஒரு நல்ல நாள் பார்த்து ‘புதிர் எடுத்தல்’ நிகழ்வை நடத்துவார்கள். குடும்பத்தலைவர் குறிப்பிட்ட ஒரு நல்ல நாளில் காலையில் குளித்து கடவுளை வணங்கி வயலுக்குச் சென்று வயல் வரம்பில் முதற்கடவுளான பிள்ளையாரை வைத்து பூ, பழம், பாக்கு, வெற்றிலை ஆகியவற்றைப் படைத்து தேங்காய் உடைத்து விநாயகரையும் குலதெய்வத்தையும் வணங்கி, அதன் பின்னர் அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிர்களில் சிறிதளவை வெட்டி வீட்டுக்குக் கொண்டுசெல்வர். இதேநேரம் குடும்பத்தலைவி குளித்து, வீடு பெருக்கி, கழுவி, மெழுகி புதிர் வாங்குவதற்குத் தயாராக இருப்பார். தலைவன் கொண்டுவருகின்ற நெற்கதிர்களை மனையாள் வாங்கி பூஜையறைக்குக் கொண்டுசெல்லும் வழக்கம் உண்டு. அதன் பின்னர் கடவுளை வணங்கி புதிய நெற்கதிர்களை பூஜையறை மற்றும் சமையல் அறைகளில் கட்டித் தொங்கவிடுவார்கள்.

மிகுதியாக உள்ள நெற்கதிர்களை அரிசியாக்கி தைப்பொங்கலுக்காக வைத்திருப்பார்கள். கடின உழைப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற நெற்கதிர்களை நல்ல நாளில் “புதிர்” எடுப்பதன் மூலம் வருடம் முழுவதும் அவர்களுக்கு சாப்பாட்டுக்கு குறைவிருக்காது என்பது அவர்களுடைய நம்பிக்கையாகும்.

தைப்பொங்கல் தினத்தன்று ஒவ்வொரு குடிமகனும் தம் வீட்டுப் பொங்கல் படையல் சூரியன் உதிக்கும்போதே முதல் நல்விருந்தாக அமைய வேண்டுமென்ற ஆதங்கத்தில் அதிகாலையே விழித்தெழுந்து பொங்கலுக்கான ஆயத்தங்களைச் செய்வார்கள்.

பெண்கள் அதிகாலையில் குளித்து, வீடு பெருக்கி, முற்றம் கூட்டி, வாசலில் சாணம் கொண்டு மெழுகி அதில் உலக்கை வைத்து அரிசி மா, மஞ்சள் மாவால் அல்லது செங்கட்டி மண்ணால் கோலம் போடுவார்கள். முற்றம் சீமெந்தாலானதாயின் அதனை சுத்தம் செய்து கழுவி கோலம் போடுவார்கள்.



அத்துடன் வீட்டு வாசலில் (கதவு நிலையில்) மாவிலை கட்டி சூரிய பகவானை வரவேற்கத் தயாராக இருப்பார்கள்.

புதுமணமக்கள் இருப்பவர்கள் பொங்கல் விழாவை ‘தலைப் பொங்கல்’ என வெகு சிறப்பாகக் கொண்டாடுவார்கள். வீட்டுக்கு வெள்ளையடித்து, வீட்டை அலங்கரித்து, தாமும் புத்தாடை அணிந்து சூரிய பகவானின் ஆசியைப் பெறுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். துக்கமான நிகழ்வுகள் நிகழ்வுற்ற குடும்பத்தினர் பொங்கல் விழாவை ஒரு வருடத்துக்குத் தவிர்த்துக்கொள்வார்கள்.

பொங்கிய பொங்கலை ஒரு தலைவாழை இலையில் படைத்து அதன் மேல் பகுதியை குழிவாக்கி அதன் மேல் வாழைப்பழத்தை உரித்து வைத்து அதன் மீது தயிர் விட்டு, சர்க்கரையும் வைப்பார்கள். வடை,மோதகம், முறுக்கு என்பனவற்றை இன்னொரு தலைவாழை இலையிலும் சுத்தம் செய்த பழங்களை வேறொரு தலைவாழை இலையிலும் படைப்பார்கள். படையல் படைக்கும்போது சூரியனுக்கு வலப்பக்கத்தில் இலையின் அகன்ற பகுதி இருக்கும்படி படைத்தல் வேண்டும்.

வாழை இலைகளில் படைத்த பின், தேங்காய் உடைத்து வைத்து சூரிய பகவானுக்கு தூப, தீபம் ஆரத்தி எடுத்து அனைவரும் பக்தியோடு பஜனை பாடி சூரியனை வணங்குவார்கள். சூரியனுக்கு படைத்த (படையல்) பொங்கலை அனைவரும் சேர்ந்து உண்டு மகிழ்ந்து பொங்கல் தினத்தை சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

உறவினர்கள், நண்பர்கள் துக்க நிகழ்வுகள் அல்லது வேறு சமூகத்தவர் என்னும் காரணமாக பொங்காது இருந்தால் அவர்களுக்கும் தமது பொங்கலை பரிமாறி அவர்களையும் மகிழ்விப்பார்கள்.



பொங்கல் பண்டிகை நாளில் ஊரில் பல பாகங்களிலும் தமிழன் பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் முத்தமிழ் (இயல், இசை, நாடக) கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும். அவற்றிலும் மக்கள் பங்கேற்று மகிழ்ச்சியடைவார்கள்.

**பட்டிப்பொங்கல் / மாட்டுப்பொங்கல்**

பொங்கல் தினத்துக்கு அடுத்தநாள் “பட்டிப் பொங்கல்/மாட்டுப் பொங்கல்” தினமாக உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் ஆவினத்துக்கு நன்றி கூறும் வழக்கமும் அவர்களிடம் உண்டு.

உழவனின் நண்பனாக இருந்து உழைத்த மாடுகளுக்கு நன்றி செலுத்தும் முகமாக பட்டிப்பொங்கல் கொண்டாடும் மரபு காணப்படுகிறது.

அன்றைய தினம் மாடுகளைக் குளிப்பாட்டி, விபூதி குறிகள் வைத்து, சந்தனம், குங்குமத்தால் பொட்டிட்டு, மலர் சாத்தி அல்லது மலர்மாலை அணிவித்து, மாட்டின் கொம்புகளுக்கு வர்ணம் பூசி அலங்கரித்து “பொங்கலோ பொங்கல், பட்டிப் பொங்கல் மனசு பெருக, பால் பானை பொங்க, நோயும் பிணியும் தெருவோடு போக” என்று மாட்டுத்தொழுவத்தில் பொங்கல் பொங்கி மாட்டை கடவுளாக மதித்து அதற்கு படையல் படைத்து உண்ணக் கொடுத்து, தாமும் உண்டு மகிழ்வர்.

மாடு உண்ட எச்சில் தண்ணீரை தொழுவத்தில் தெளிப்பார்கள். பட்டிப்பொங்கலின்போது கிராமங்கள் தோறும் ஜல்லிக்கட்டு போன்ற விளையாட்டுகளிலும் மக்கள் கலந்துகொண்டு மகிழ்வார்கள்.

**காணும் பொங்கல்:**

காணும் பொங்கல் என்பது பொங்கல் கொண்டாட்டங்களில் நான்காவது நாள் விழா. காணும் பொங்கலைக் கன்னிப் பொங்கல் அல்லது கணுப் பண்டிகை என்றும் அழைப்பர். உற்றார், உறவினர், நண்பர்களைக் காணுதல் மற்றும் பெரியோர் ஆசி பெறுதல் என்பன அடங்கும். பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், பட்டி மன்றம், உரி அடித்தல், வழுக்கு மரம் ஏறல் என்று வீர சாகசப் போட்டிகளிலிருந்து சகலமும் இடம்பெறும்.

இது பெண்களுக்கு முக்கியமான பண்டிகை ஆகும். பொங்கல் பானை வைக்கும்போது அதில் புது மஞ்சள் கொத்தைக் கட்டி, அதனை எடுத்து முதிய தீர்க்க சுமங்கலிகள் ஐவர் கையில் கொடுத்து ஆசி பெற்று, அதனை கல்லில் இழைத்து பாதத்திலும் முகத்திலும் பூசிக்கொள்வார்கள்.

இவ்வகையில் தமிழர் திருநாள் நன்முறையில் அனைத்து வகை மக்களாலும் கொண்டாடப்படும்.

“தை பிறந்தால் வழி பிறக்கும்” என்ற பழமொழி தோற்றம் பெற்றிருக்கின்ற நிலையில் தை மாதத்தில் அவர்களிடம் பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும்.

இதன் காரணமாக திருமணங்கள் போன்ற நல்ல நிகழ்வுகளை அதிகமாக தை மாதத்தில் தமிழர்கள் நடத்துவார்கள். ஆண்டுதோறும் தை மாதம் முதல் ஆனி மாதம் வரையுள்ள ஆறு மாதங்கள் உத்தராயணம் என்றும் ஆடி முதல் மார்கழி வரையுள்ள மாதங்கள் தட்சிணாயனம் என்றும் கூறப்படுகிறது. இதில் தை மாதம் முதலாம் திகதியை மகர சங்கராந்தி, தைப் பொங்கல் என்று கொண்டாடுகிறோம்.

“உழவர் சேற்றில் கால் வைத்தால்தான் ஏனையோர் சோற்றில் கை வைக்க முடியும்” என்பது பலரும் அறிந்த பழமொழி.

அதனால் போலும் பொங்கல் என்பதற்கு ‘‘பொங்கி வழிதல்”, ‘‘பொங்குதல்” என்பது பொருள். அதாவது புதிய பானையில் பால் பொங்கி வழிந்து வருவதால், எதிர்காலம் முழுவதும் நம் வாழ்வும் வளமும் அந்தப் பால் போன்று பொங்கிச் சிறக்கும் என்பதும் களனியெல்லாம் பெருகி அறுவடை மென்மேலும் அதிகரிக்கும் என்பதும் இந்தப் பண்டிகையின் மேலோங்கிய தத்துவமும் தொன்றுதொட்டு வரும் நம்பிக்கையுமாகும்.

## உத்தமமான பொங்கல்



பொங்கலோ பொங்கலென – நாம்
பொங்கி மகிழும் பொங்கல்
திங்களாகி திகைக்க வைத்த
திண் சுவை பூத்த பொங்கல்
பங்கமில்லா தங்கமான உதித்த
பாகா விட்ட பொங்கல்
மங்கை வாழ்வை மகிழ வைத்த
மனம் கவர்ந்த தைப்பொங்கல்

மகளிர் ஏக்கத்தை மகிழ்ச்சி தர
மன்றில் உதித்த பொங்கல்
பகலில் பாங்கா பவனி வரும்
பால் பொங்கும் பொங்கல்
நிகரில்லா நிம்மதியை நித்தலம்
நீட்சியாக தரும் பொங்கல்
வகை வகையான பொங்கலிட்டு
வாழ்த்துரைக்கும் பொங்கல்
பகை ஒழிந்து பசுமை படர
பாங்கான பால் பொங்கல்

உழைத்தவர் உழைப்போர் - உயர்வென
உன்னதமான உண்மை பொங்கல்
பிழைத்தவரின் பித்தலாட்டம் ஒழிந்து
பிறந்து விட்ட பொங்கல்
தழைத்து விட்ட ஒற்றுமை உணர்வு
தரணி சிறக்க வந்த பொங்கல்
அழைத்த அன்பர்களுக்கு அமுதூட்டி
ஆர்ப்பரிக்கும் அன்பு பொங்கல்
உலகுக்கும் உழவரின் உழைப்பு கூறும்
உத்தமான பொங்கல்

உடப்பூர் வீரசொக்கன்



## அநுர அரசிடம் தஞ்சம் புகுந்த ரோஹிங்யா அகதிகள்!

# ஏற்கப்படுமா கோரிக்கைகள்?

**உமர் அலி உஸ்மான்**

2017 முதல் 2024 வரை மியன்மாரில் இனவாதக் குழுக்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை காரணமாக சுமார் 2.5 மில்லியனுக்கும் அதிகமான ரோஹிங்யா இனத்து முஸ்லிம்கள் மியன்மாரை விட்டு வெளியேறியுள்ளதுடன், 25,000இற்கும் அதிகமான மக்கள் அந்நாட்டிலேயே படுகொலை செய்யப்பட்டனர்.

இது தவிர, உயிர் காப்பதற்காக கடல் வழியாக வேறு நாடுகளுக்குத் தப்பிச் செல்ல முயற்சி செய்தவர்களில் பலர் படகு விபத்துகள் காரணமாகவும் மாண்டதாக சர்வதேச அறிக்கைகள் சுட்டிக்காட்டிக்கொண்டிருக்க, இலங்கையை நோக்கியும் அண்மையில் இந்த அகதிகள் வந்தடைந்துள்ளனர்.

டிசம்பர் 04ஆம் திகதி 120 பேர் 3 படகுகளில் புறப்பட்டோம். அதில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 5 பேர் வழியில் மரணமடைந்துவிட்டார்களென மியன்மார் அகதிகள் இலங்கையை வந்தடைந்தவுடன் தெரிவித்திருந்தனர்.



திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த இவர்கள், நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய பொலிஸ் பாதுகாப்புடன், டிசம்பர் 21 அன்று காலை 6.45 மணியளவில் இரு பஸ்களில் மிரிஹான தடுப்பு முகாமுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இவ்வாறு கொழும்பு நோக்கி அழைத்துச்செல்லப்பட்ட இவர்களை சனி, ஞாயிறு வார இறுதி விடுமுறை தினங்களாக இருப்பதால், மிரிஹான தடுப்பு முகாமில் இவர்களுக்கான போதிய வசதிகளைச் செய்ய முடியாத நிலை இருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து இவர்கள் மீண்டும் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் எனும் அலைச்சல் நிறைந்த அகதி வாழ்வின் முதலாவது அத்தியாயத்தை அவர்கள் வேதனையுடன் கடந்து இலங்கையின் அழகை ரசித்துள்ளார்கள்.

இதேவேளை, குறித்த அகதிகளை மியன்மாரிலிருந்து ஏற்றி வருவதற்கு படகோட்டிகளாக செயற்பட்ட மியன்மார் நாட்டுப் பிரஜைகள் 12 பேருக்கும் எதிராக குடிவரவு - குடியகல்வு சட்டத்தின்கீழ் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்து திருகோணமலை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 14 நாட்களுக்கு தடுப்புக்காவலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற பதில் நீதவான் அப்துல் சலாம் சாஹிர் பொலிஸாருக்கு உத்தரவிட்டு இப்போது அவர்கள் விடுதலையும் பெற்றுள்ளார்கள்.

கடந்த 2024 டிசம்பர் 19ஆம் திகதி வியாழக்கிழமை மாலை திருகோணமலையை வந்தடைந்த மியன்மார் நாட்டு படகிலிருந்த 115 அகதிகளும் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை (20) ஆஜர்படுத்தப்பட்டபோதே, பதில் நீதவான் அப்துல் சலாம் சாஹிர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

மேலும், படகில் அழைத்துவரப்பட்ட 103 மியன்மார் நாட்டுப் பிரஜைகளையும் கொழும்பு மிரிஹான தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்குமாறும் நீதிபதியால் உத்தரவிடப்பட்ட நிலையிலேயே இவர்கள் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். எனினும், மிரிஹான தடுப்பு முகாமிலிருந்து இவர்களைப் பொறுப்பேற்பதற்கு அனுமதி கிடைக்காமையால் மீண்டும் இவர்கள் திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டனர். இவர்களுக்குத் தேவையான உணவு உட்பட அத்தியாவசிய தேவைகளை திருகோணமலை பிரதேச செயலகம் செய்து கொடுத்ததாக திருகோணமலை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எச்.எம்.றியாத் தெரிவித்திருந்தார்.

இவர்கள் ஏன் மியன்மாரிலிருந்து வந்தார்கள். இப்படி உயிரைப் பணயம் வைத்து இவர்கள் கடலில் மிதந்து வரக் காரணம் என்ன என்பதை இலங்கையர்களை விட உலகில் யாராலும் உணர்வு ரீதியாக அறிந்துகொள்ள முடியாது. 2009இற்கு முன்னர் இலங்கையிலிருந்தும் பல அகதிகள் உள்நாட்டு யுத்தத்தின் கோரமுகத்தால் இந்தியா உட்பட பல நாடுகளுக்கும் இடம்பெயர்ந்த வரலாறுகளின் தொடர்ச்சியே மியன்மார் அகதிகளின் நிலையும்.

இந்த அகதிகளின் வாழ்வின் சுமை தெரிந்தமையாலோ என்னவோ திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்ட மியன்மார் ரோஹிங்யா அகதிகளின் நலன் பற்றி விசாரிக்கவும் அவர்களுக்குத் தேவையான விடயங்களை செய்துகொடுப்பது தொடர்பாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் 21ஆம் திகதி குறித்த பாடசாலைக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன்போது அவருடன் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.தாஹிர் உட்பட பலரும் கலந்துகொண்டதுடன், ஒருதொகை அத்தியாவசியப் பொருட்களை ரிஷாத் பதியுதீன் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளரிடம் கையளித்தார்.



மியன்மார் நாட்டிலிருந்து புறப்பட்டு முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் கடந்த 2024.12.19 அன்று கரையொதுங்கிய மியன்மார் படகுடன் அகதிகள் 20ஆம் திகதி காலை திருகோணமலை அஷ்ரப் துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்டு குறித்த படகில் பயணித்த 115 பயணிகளும் அஷ்ரப் துறைமுகத்தில் தரையிறக்கப்பட்டு குருதி மாதிரிகள் பெறப்பட்டு சுகாதார பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களுள் கர்ப்பிணித் தாய் ஒருவர் உட்பட 27 பெண்களும் 39 ஆண்களும் 49 சிறுவர்களும் அடங்குகின்றனர். அஷ்ரப் இறங்கு துறைக்கு திருகோணமலை நீதிமன்ற நீதிபதி அர்ஜுன் அரியரட்ணம் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

அன்று மாலை இவர்கள் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களுக்குத் தேவையான உணவு உட்பட அத்தியாவசிய தேவைகளை மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் உட்பட அரச திணைக்களங்களும் பொலிஸ் நிலையமும் தொண்டு நிறுவனங்களும் வழங்கியிருந்தன.

ஏன் இவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது எனும் வினாவுக்குக் கிடைத்த பதில்தான் மிகவும் மன வேதனையானது. மியன்மார் நாட்டில் 12 வருடங்களாக நாம் புனர்வாழ்வு முகாம்களில் வசித்து வந்தோம். எம்மை ஐ.நா. நிறுவனம் பராமரித்து வந்தது. மியன்மாரிலிருந்து ஐ.நா. நிறுவனம் கடந்த 18 மாதங்களுக்கு முன்னர் வெளியேறிவிட்டது. இதனால் அங்கு வாழமுடியாத சூழ்நிலை எமக்கு ஏற்பட்டது. இந்நிலையில், இலங்கைக்கு செல்ல முடிவெடுத்தோம் என்று அந்த அகதிகள் தெரிவிக்கின்றனர். இலங்கைக்கு வருகை தரும் நோக்கில் மூன்று படகுகளில் 120 பேர் வருகை தந்ததாகவும் இடைநடுவே இரண்டு படகுகள் பழுதடைந்ததாகவும் இதனால் ஒரு படகில் மற்றைய படகில் வந்த நபர்களும் சேர்ந்து பயணித்ததாகவும் குறிப்பிடுகின்றனர். அத்துடன், வரும் வழியில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து பேர் பசியால் உயிரிழந்ததாகவும் அவர்களின் உடல்களை கடலில் வீசிவிட்டு வந்ததாகவும் அந்தக் குடும்பத்தில் ஒரு சிறுமி உயிர் தப்பி தம்முடன் இருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கைக்கு வருவதற்காக தங்களுடைய சொத்துகளை விற்று தங்கள் நாட்டின் பெறுமதியில் ஒவ்வொருவரும் எட்டு இலட்சம் ரூபா வழங்கி படகை கொள்வனவு செய்து கடந்த டிசம்பர் 04ஆம் திகதி அங்கிருந்து புறப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இப்படியான சோகக் கதைகளை கூறிக்கொண்டிருக்கும் இவர்களை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்திரா சந்தித்து குறித்த நபர்களைப் பார்வையிட்டு அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாக அரச அதிகாரிகளுடனும் பொலிஸாருடனும் கலந்துரையாடியிருந்தார் என்பது இங்கு அரசின் மனிதாபிமான போக்கைக் காட்டுகிறது.



ஆனாலும் இந்த அரசாங்கம் மீண்டும் அவர்களை அந்த நாட்டுக்கே அனுப்புவதற்கு முயற்சிக்கிறது. அவ்வாறு செய்தால் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்படுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தனது கண்டனத்தை வெளியிட்டு மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ரோஹிங்யா முஸ்லிம்கள் இலங்கைக்கு வந்தபோது, அப்போதைய அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து மனிதாபிமான ரீதியில் செயற்பட்ட விடயத்தையும் நினைவுபடுத்தியுள்ளார்.





மியன்மார் அண்மைக்காலமான இன, மத மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு நாடாகும். ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக அந்நாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் அவதானம் செலுத்தியுள்ளது. அந்த இனத்தவர்களே தற்போது எமது நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். அவ்வாறான மக்களை மீண்டும் அந்த நாட்டுக்கே அனுப்ப வேண்டும் எனக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

அவ்வாறெனில், சர்வதேச மனித உரிமை சட்டதிட்டங்களை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லையா?

இலங்கையில் ஜே.வி.பி. கலவரத்தின்போது ஆயிரக்கணக்கான மக்கள் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு வெளியேறினர். அதேபோன்று வடக்கு, கிழக்கு யுத்த காலத்திலும் மக்கள் நாட்டை விட்டுச் சென்றனர்.

ஆனால், அவர்கள் அகதிகளாகச் சென்ற நாடுகள் அவர்களைக் கைவிடவில்லை. மாறாக, அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தன. அவர்களிடம்தான் தேர்தல் காலங்களில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஒத்துழைப்புக் கோரினார். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இதேபோன்று ரோஹிங்யா இனத்தவர்கள் இலங்கையில் தஞ்சமடைந்தனர். அவர்கள் தற்காலிகமாக தங்குவதற்கு இடமளித்து, ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து அவர்களை பொறுப்பேற்கக்கூடிய நாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை அந்த அரசாங்கம் முன்னெடுத்திருந்தது.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கூட இவ்வாறு மனச்சாட்சியுடன் செயற்பட்டது. ஆனால், இந்த அரசாங்கம் அவ்வாறு சிந்திக்கவில்லை. எனவே, அவர்களை மீண்டும் அந்த நாட்டுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டாமென்று ரிஷாத், முஜிபுர் ரஹ்மான் போன்ற முஸ்லிம் எம்.பிக்கள், அல்-மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா போன்ற சில சிவில் அமைப்புகள் ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டுள்ள விடயமும் இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

1951 அகதிகள் ஒப்பந்தம் இருக்கிறது. சர்வதேச மனித உரிமை வரைபுக்குள்ளிருந்து நாங்கள் செயற்பட வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களை வெளியேற்றும் முயற்சியை உடனடியாக அரசாங்கம் நிறுத்த வேண்டும். ஐக்கிய நாடுகள் அகதிகள் அமைப்பு மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் கலந்துரையாடி, பாதிக்கப்பட்டிருக்கும் ரோஹிங்யா பிரஜைகளுக்கு வழங்கவேண்டிய மனிதாபிமான நடவடிக்கைகளைப் பெற்றுக்கொடுக்க நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மியன்மாரிலிருந்து அகதிகளாக வந்திருக்கும் ரோஹிங்ய பிரஜைகளை மீள திருப்பியனுப்புவது சர்வதேச மனித உரிமை சட்டத்தை மீறும் விடயமாகும். அதனால் அவர்களை வெளியேற்றும் முயற்சியை உடனடியாக அரசாங்கம் நிறுத்தவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூட தன் பங்குக்கு தனது கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இலங்கையில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்யா அகதிகளை மீண்டும் மியன்மார் நாட்டுக்குத் திருப்பியனுப்ப அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது மனிதாபிமானத்தை விரும்புபவர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்பான நாட்டில் அரசியல் தஞ்சம் பெற்றுக்கொள்ளும் நோக்கமாகவே இவர்கள் அவர்களின் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். மியன்மாரிலிருந்து நாட்டை வந்தடைந்த அகதிகள் குற்றவாளிகளோ சந்தேகநபர்களோ அல்ல என்பதனால் அவர்களைத் தடுத்து வைப்பது முற்றிலும் தவறு எனச் சுட்டிக்காட்டியிருக்கும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ, ஐக்கிய நாடுகள் அலுவலக அதிகாரிகள், மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு இடமளிக்கப்படவேண்டுமென வலியுறுத்தியுள்ளார். ஆனால், இந்த விடயத்தில் அரசியல்வாதிகள் பலரும் மௌனம் காப்பது பொருத்தமானதல்ல.

அகதிகள் அல்லது புகலிடக் கோரிக்கையாளர்கள் அச்சுறுத்தலை எதிர்கொள்ளக்கூடிய அபாயமுள்ள நாட்டுக்கு அவர்களை வலுகட்டாயமாகத் திருப்பியனுப்பாதிருத்தல் எனும் சர்வதேச அடிப்படைச் சட்டத்துக்கு முரணான விதத்தில் மியன்மார் அகதிகளை மீண்டும் அந்நாட்டுக்குத் திருப்பியனுப்புவது ஏற்புடையதல்ல என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ தெரிவித்துள்ளமை இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இது விடயத்தில் இலங்கையில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்யா அகதிகளை நாடு கடத்த வேண்டாமென மனிதாபிமான விரும்பிகளும் அரசியல் தலைவர்களும் தொடர்ந்தும் வேண்டுகோள் விடுக்கின்றனர். இதனைக் கவனத்திற்கொண்டு மனிதாபிமானமிக்க அரசாங்கமும் அரசியல் தலைவர்களும் அந்த அகதிகளை மீள மியன்மார் நாட்டுக்கு அனுப்பாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு அல்-மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்கா பகிரங்க வேண்டுகோளை விடுத்திருந்தது. இந்தக் கோரிக்கையை நாட்டின் பல அரசியல்வாதிகளும் முன்னிறுத்தி வருகிறார்கள்.

இவற்றைக் கவனத்திற்கொண்டு போராட்ட குணவியல்புகள் நிறையவே அறிந்த மக்கள் விடுதலை முன்னணி, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினர் மியன்மார் அகதிகளை நாட்டுக்குத் திருப்பியனுப்பும் தனது நிலைப்பாட்டில் தளர்வைக் கொண்டு வருவார்களா என்பதுதான் இன்றைய வினாவாகவுள்ளது. இதுதவிர, தற்சமயம் முல்லைத்தீவு இராணுவ முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 103 ரோஹிங்யா அகதிகளைச் சந்தித்துப்பேச இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினருக்கு வசதி செய்துகொடுக்க வேண்டும். தற்சமயம், இந்தியா, தாய்லாந்து, மலேசியா, கனடா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் அந்த நாடுகளுக்குத் தஞ்சம் தேடி வந்த ரோஹிங்யாக்களுக்கு அடைக்கலம் தந்துள்ளதுபோன்று இலங்கையும் நேசக்கரம் நீட்டவேண்டும்.

1948 ஆம் ஆண்டு மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா பிரகடனத்தில், 14ஆவது சரத்தில் ''தங்கள் சொந்த நாடுகளின் துன்புறுத்தல்கள் காரணமாக வேறு நாடுகளுக்குச் சென்று தஞ்சம் தேடுவதற்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமை உண்டு'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையும் அப்பிரகடனத்தின் ஒருசாரார் எனவும் சுட்டிக்காட்டியுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஈரானுக்கான தூதுவருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம்.ஷுஹைர் மியன்மாரில் ரோஹிங்யாக்கள் துன்புறுத்தப்படுவது உலகமறிந்த உண்மை. நிலைமை இவ்வாறிருக்க, தொழில்நுட்ப விடயங்களைத் தேடி நேரத்தை வீணாக்காது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் இந்த ஆதரவற்ற மக்களைச் சந்தித்து ஐ.நாவின் பரிந்துரையின்படி செயற்படுவதற்கு அரசு வசதி செய்துகொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இதுதான் இன்றைய தேவையும் கூட.

அரசு இந்தக் கோரிக்கைகளை ஏற்குமா?

# மலையகம் - ஒரு பன்முகப் பார்வை

சந்தனம் சத்தியநாதன்



பிறந்திருக்கும் இப்புத்தாண்டோடு மலையக மக்களின் வரலாற்றுக்கு 201 வருடங்களாகப் போகிறது. இன்று இலங்கை அடைந்துள்ள பொருளாதாரம் மற்றும் ஏனைய முன்னேற்றங்களை நோக்குமிடத்து தேயிலைத் தொழிற்றுறையே அடித்தளமாக அமைந்துள்ளதென்றால் மறுக்க முடியாது.

அத்தோடு வீதி அபிவிருத்தி மற்றும் பெருந்தெருக்கள் புகையிரத போக்குவரத்து, நாட்டில் இடம்பெற்றுள்ள அனைத்து உட்கட்டமைப்பு மாற்றங்களுக்கும் இன்றைய தேயிலை தோட்டத் தொழிலாளர்களின் முன்னோர்களே காரணமானவர்கள் என்பதை மறுக்க முடியாத போதிலும் தோட்டத் தொழிலாளர் களின் சந்ததியினரது வாழ்நிலையில் மட்டும் குறிப்பிடத்தக்க பாரிய மாற்றங்களைக் காணமுடியவில்லை.

201 வருடங்களுக்கு முன்னர் வெள்ளைக்காரார்கள் கட்டிக்கொடுத்த 10அடி லயக் காம்பிராக்களிலேயே 95 சத வீதமானோர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். நாட்டின் மொத்த சனத்தொகையில் 85 சதவீதமானோர் சொந்த வீடுகளில் வாழ்பவர்களாகவும் உள்ளனர். ஆனால், 95 சதவீதமான தோட்டத் தொழிலாளர்கள் சொந்த வீடின்றியும் நிலமற்றவர்களாகவும் வாழ்ந்து வருவது மன வருத்தத்தையே தருகிறது. இந்நிலைமைக்குப் பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகம் இந்த நாட்டின் சிறுபான்மையினர் என்பதுவும் ஒரு காரணமாக இருக்கலாமென்பது பலரது கருத்தாக அமைகிறது.

சிறுபான்மையினர் என்றவுடன் எமது மனக்கண்ணில் எழுவது எமது நாட்டு இனப் பிரச்சினையேயாகும். ஏனெனில், நம்மில் சிலர் இன வேறுபாடு இனவாத கடும் போக்குடன் தமது குறுகிய அரசியல் இலாபத்துக்காக மக்களின் மனங்களில் தவறான எண்ணங்களையும் பிரிவினைகளையும் விதைத்துள்ளனர். எமது நாட்டைத் தவிர்த்து உலகை எடுத்து நோக்கின் நிறம், மதம், சாதி, மொழி, அரசியல் கொள்கை போன்ற பல்வேறுபட்ட காரணங்கள் 'சிறுபான்மையினர்' என்ற சொல்லை உச்சரிக்க ஏதுவாக அமைகிறது.

இப்பின்புலத்தோடு மிக வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கும் நமது நாட்டின் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது மலையக சமூகம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. இந்த ஏற்றத்தாழ்வுகள் முதலில் தகர்த்தெறியப்படவேண்டும்.

அதற்கு சமூக ஆர்வலர்கள் அயராது உழைக்க வேண்டும். ஏனைய சமூகங் களுக்கு இணையாக மலையக சமூகம் முன்னேற இந்த வருடத்தில் உறுதிகொள்ள வேண்டும். அதற்கு முதலில் வீடு மற்றும் நிலம் அவரவருக்குச் சொந்தமாக வேண்டும். அப்போதுதான் ஒரு மனிதனுக்கு சுயகௌரவம் ஏற்படும்.

அந்தவகையில் வீடு ஒரு தனிமனிதனின் அல்லது அவரது குடும்பத்தின் இருத்தலை மற்றும் அபிவிருத்தியை நிர்ணயிக்கும் காரணியாக இன்று காணப்படுகிறது.

"1948ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட மனித உரிமை சாசனத்தின் 25 உறுப்புரை (1) கூறுவதாவது யாதெனில், ஒவ்வொருவரும் உணவு, உடை, வீடு, மருந்து, கவனிப்பு, அவசியமான சமூக சேவைகள் என்பன உட்பட தமது குடும்பத்தினரதும் உடல் நலத்துக்கும் நல்வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத்தரத்துக்கும் உரித்துடையர். அத்துடன், வேலையின்மை, நோய், இயலாமை, கைம்மை, முதுமை மற்றும் வேறு காரணிகளால் வாழ வழியின்மை ஏற்படும்போது பாதுகாப்புக்கு உரித்துடையோராவர் எனக் குறிப்பிடப்படுகிறது.

அத்தோடு பொருளாதார மற்றும் கலாசார உரிமைகளுக் கான சர்வதேச சமவாயம் (1966) 1976 ஜனவரி 03ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்தது. (உறுப்புரை 11 (1) இச்சமவாயத்தை அங்கீகரிக்கும் அரசுகள் ஒவ்வொருவரும் அவரது குடும்பத்தினரும் போதியளவு உணவு, உடை மற்றும் வீடு என்பவற்றைக் கொண்டிருக்க உரித்துடையர் என்பதை அங்கீகரிப்பதுடன், வாழ்க்கை நிலைமைகளின் தொடர்ச்சியான அபிவிருத்திக்கும் உரித்துடையர் என்பதை அங்கீகரிக்கின்றன. இவ்வுரிமைகள் யதார்த்தமாகும் வகையில் உகந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளும் எனக் குறிப்பிடுகிறது.

இதிலிருந்து ஒன்றைப் புரிந்துகொள்ள முடிகிறது. அரசாங்கம் எவற்றையெல்லாம் செய்யாமல் விட்டுள்ளதென்று சட்டங்கள், பிரகடனங்கள் எல்லாமே சரியாக இருந்தபோதிலும் 1980களின் பின்னிறுதியிலிருந்து தனிவீட்டுக் கோரிக்கையை மலையக தொழிற்சங்கங் களும் சிவில் அமைப்புகளும் தொடர்ந்து முன்வைத்து வருகின்றன. ஆட்சி பீடமேறிய அரசாங்கங்களோ மலையக தோட்ட மக்களுக்கு வீடு வழங்கவோ காணிகள் வழங்கவோ எவ்வித அக்கறை யும் காட்டவில்லை என்பதே உண்மை.

மலையக மக்களுக்கு வீடு மட்டுமல்ல, பிரச்சினை வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் வேலைவாய்ப்பு போன்ற அனைத்துத் துறைகளிலும் புறக்கணிப்பு நடந்தே



வருகின்றது. ஒரு நாட்டு அரசாங்கம் என்ற ரீதியில் மலையக மக்களுக்கு உரிமைகளை வழங்குவதில் ஆட்சி பீடமேறிய அரசாங்கங்கள் தயக்கம் காட்டியே வந்துள்ளன என்பதை மறுக்க முடியாது.

சிறுபான்மையினர் தங்களது மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் சட்டத்தின் முன் எவ்வித வேறுபாடுகளுமின்றி முறையாகவும் முழுமையாகவும் அனுபவிப்பதற்குரிய உத்தரவாதத்தை அரசுகள் எடுக்கவேண்டும். சர்வதேச தராதரங்களுக்கும் தேசிய சட்டத்துக்கும் முரணாக இல்லாத சந்தர்ப்பங்களில் சிறுபான்மையினர் தங்கள் கலாசார, மொழி, மத, பாரம்பரியங்கள் மற்றும் வழக்காறுகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் தங்களது சிறப்பியல்புகளை வெளிப்படுத்துவதற்குமுரிய சாதகமான சந்தர்ப்பங்களை அரசானது ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

சிறுபான்மையினர் தங்களது மொழியைக் கற்பதற்கு அல்லது தங்களது மொழியில் தேவையான அறிவுறுத்துதல்களைப் பெறுவதற்குப் பொருத்தமான சந்தர்ப்பங்களை அரசு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென சிறுபான்மையினர் பற்றிய உறுப்புரை 4இல் கூறப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் மலையக மக்கள் பற்றிய விடயங்களில் முழுமையான அக்கறையுடன் செயற்படவில்லை யென்பது கண்கூடு. தேசிய வருமானத்தின் பங்காளி களை ஒதுக்கி வைத்தது ஒரு வரலாற்று வஞ்சிப்பாகவே கருதப்படுகிறது.

இருந்தபோதிலும் புதிய அரசாங்கம் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வை வழங்க வேண்டும். இம் முறை மலையக மக்கள் தமது ஆதரவை ஆளும் அரசுக்கு வழங்கியுள்ளனர். இந்த புதிய வருடத்தில் புதிய முயற்சி, புதிய சிந்தனை, புதிய நோக்குடன் பயணிக்கும் மலையக மக்களை புதிய அரசு நல்வழிப்படுத்துமென நம்புவோம்!

# குழந்தைகள் - செல்போன்கள் - பெற்றோர்கள் டிஜிட்டல் மகாகவி:

சாந்தி ஜோ

***"ஓடி விளையாடு பாப்பா - நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா"***

என்று பாடிய மகாகவி பாரதி, தற்போதைய டிஜிட்டல் உலகில் வாழ்ந்திருந்தால் கவலையோடு கீழ்க்கண்டவாறாக பாடியிருப்பார் எனத் தோன்றுகிறது.

"செல்போன் பாவிக்காதே பாப்பா - உன்னை
ஓய்ந்திருக்க வைத்துவிடும் பாப்பா"

மகாகவி பாடிய பாப்பா பாடல் பெண் குழந்தைகளை ஊக்கப்படுத்துவதாக சொல்லப்பட்டாலும் அப்பாடலின் கருத்துகள் ஆண், பெண் குழந்தைகள் இருவருக்குமே பொருத்தமானதாகவே இருக்கும். இப்பாடல் பல நாடுகளிலுள்ள பாடப் புத்தகங்களில் இடம்பெற்றுள்ளது. அப்படியாக இப்பாடலை சிறுவயதில் படித்து வளர்ந்து தற்போது ஒரு குழந்தைக்குத் தகப்பனான நான், அனைவரும் அறிந்து அலட்சியப்படுத்தும் செல்போன்கள் குழந்தைகள் கையை ஆக்கிரமித்துள்ளதைப் பற்றி விவரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**வளரும் கைகள் எங்கே:**

குழந்தைகள் செல்போனை கைதாங்கி பாவிக்கும்போது அவர்களது உள்ளங்கை தெரியாது. அதுபோல திரையில் தன்னுடைய வேடிக்கைகளைக் காட்டும் செல்போன் அவர்களை ஓரிடத்தில் ஓரங்கட்டிவிடுவது மட்டுமல்லாமல், அதிக நேர பாவனை குழந்தைகளின் எதிர்கால இலட்சியம், என்னவென்று அவர்களுக்கே தெரியாமல் சோம்பேறியாக்கிவிடுகிறது. காலம் வீணாகும்.

சிறு வயதில் கணித பாடத்தில் மட்டும் தேர்ச்சியடையாமல் இருந்த என்னிடம் கணித ஆசிரியை சொன்ன வார்த்தைகள் எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. "நீ என்ன நினைக்கிறியோ அதுதான் நடக்கும். நீ கஷ்டம்னு நினைச்சா கஷ்டமாதான் இருக்கும். உன் நினைப்ப நீ மாத்திக்கோ கட்டாயம் நீ பாஸ் ஆகுவ" என்றார்.

ஆசிரியை சொன்னபடி முடியும் என்ற நினைப்பை எனக்குள் உண்டாக்கி படித்து கணிதத்தில் தேறினேன். எண்ணங்களே செயற்பாடுகள் என்பதைப் புரிந்து கொண்டேன். ஆனால், இப்பொழுது வளரும் குழந்தைகளுக்கோ சிந்திக்க நேரமும் சூழலும் அவர்கள் கையில் வைத்திருக்கும் செல்போன் அதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுப்பதில்லை. பேனாவும் புத்தகங்களும் பிடிக்க வேண்டிய கைகளில் அதைவிட அதிக நேரம் செல்போன் வைத்து பாவிப்பதை பெற்றோர்களாகிய நாம் கணக்கெடுத்தால் அவர்களின் ஆரம்ப வளர்ச்சி பாதிப்படைவதைத் தடுக்கலாம்.



**வேண்டாம் அலட்சியம்:**

செல்போன் பாவனை குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கும் பார்வைக்கும் பாதிப்பை ஏற்படுத்துமென மருத்துவர்கள் கூறுகின்றனர். அதேசமயம் சரியான முடிவுகளை எடுக்கும் திறனையும் பாதிக்குமெனத் தெரிவிக்கின்றனர். பெற்றோர்கள் என்ற மிகப்பெரிய பதவியை நமக்குத் தந்த குழந்தைகளுக்கு நாம் கொடுக்க வேண்டியது உணவு, உடை, அரவணைப்பு மட்டுமல்ல. நல்ல அறிவும், சிறந்த போதனைகளும் தான் அவர்களுடைய வளர்ச்சிப் பாதையை சரியானதாக அமைக்க உதவும்.

குழந்தைகள் அழுதால் கட்டுப்படுத்தவும் அடம்பிடித்தால் கார்டூன் பாரு என்று கையில் செல்போனை கொடுக்கும் நாம் அதையே அவர்களுக்குத் தினசரி பழக்கியும் விடுகிறோம். பரீட்சையில் புள்ளி குறைந்தால் ''அறிவு இல்ல உனக்கு'' என்று குழந்தைகளைத் திட்டவும் அடிக்கவும் செய்கிறோம். உண்மையில் அறிவு யாருக்கு இல்லை என்ற கேள்வி பெற்றோர்களாகிய நம்மிடையேதான் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அடுப்படியில் சமைக்கும்போதும் சின்னத்திரைகளை செல்போனில் காணும் பெற்றோர்கள் சிலர், வழிகாட்டியாக இருக்கவேண்டிய அவர்களின் வளர்ச்சிப் பாதைப் பயணத்தில் அலட்சியம் காட்டுகிறார்கள்.

**தலைவர்கள் உருவாகக் காரணம்:**

பெரிய பெரிய தலைவர்களின் வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால் அவர்கள் வாழ்வில் உயர்வதற்குக் கட்டாயம் புத்தகங்கள் பாலமாக இருந்திருக்கும். சாதாரண ஏழை மீனவக் குடும்பத்தில் பிறந்து உலகமே போற்றும் சிறந்த தலைவரான டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் ஐயா அவர்கள், தான் இவ்வளவு பெரிய இடத்துக்கு வந்ததற்கு தன்னுடைய விடாமுயற்சி காரணம் என்றாலும் அதற்கு என்னை நானே தயார்படுத்திக்கொள்ள ஊக்குவித்தது புத்தகங்களே என்று சொல்லியிருக்கிறார்.

ரஷ்ய நாட்டில் விளாடிமிர் என்ற சிறுவன் வீட்டில் இலக்கியப்போட்டி என்று வாரத்துக்கு ஒருமுறை நடக்கும். ஒரு வாரம் தாங்கள் படித்த புத்தகத்திலிருந்து சில கேள்விகளை விளாடிமிரின் தாய் இலியா, பிள்ளைகளிடம் கேட்பாள். கதாபாத்திரங்களை நினைவூட்டும் சில உரையாடல்களும் சொல்லப்படும். விளாடிமிர் இதில் ஆர்வமாகக் கலந்து கொண்டு நாயகன் - நாயகி பெயரைக் கண்டுபிடித்துச் சொல்லுவான். இந்தச் சிறுவயது வாசிப்புப் பழக்கம்தான் விளாடிமிர் என்ற சிறுவனை பின்னாளில் உலகமே வியக்கும் பன்முக ஞானவான் லெனின் என்ற புரட்சியாளராக உருவாக்கியது. புத்தக வாசிப்பு இவ்வாறு தலைவர்களின் வாழ்வில் ஒரு முக்கிய பங்கு வகித்துள்ளது.

அப்துல் கலாம் ஐயா மறைந்தாலும் அவர் எழுதிய புத்தகங்கள் வாயிலாக நாட்டை உயர்த்தவும் தனிமனித முன்னேற்றத்தையும் சொல்லிக்கொண்டுதானே இருக்கிறார்.

**கைப்பிடித்து அழைத்துச் செல்வோம்:**

பெற்றோர் சிலருக்கு தங்கள் குழந்தைகளை வெளிநாடுகளுக்கு அழைத்துச்செல்ல ஒரு சிறிய சொல்ல இயலாத ஆசை இருக்கும். ஆனால், பண வசதி இல்லாததால் அந்த ஆசை கிடப்பில் போடப்படும். நீங்கள் ஒரு ரூபா கூட செலவு செய்யாமல் நினைத்த நாட்டுக்குச் செல்ல முடியும். எப்படியென்றால் உங்கள் ஊரிலுள்ள நூலகத்துக்கு குழந்தைகளை கைப்பிடித்து அழைத்துச் செல்லுங்கள். பல நாட்டு இலக்கியப் புத்தகப் பொக்கிஷங்கள் இருக்கும். அதன் வாயிலாக பயணியுங்கள்.

அந்தப் பயணம் சிந்திக்க வைக்கும். சாதிக்க ஊக்குவிக்கும். ஒரு நாள் குழந்தைகள் புத்தகத்தில் மட்டும் வாசித்து கற்பனை செய்த நாடு அழைக்கும். அப்பொழுது அவர்கள் அதற்கு செல்லத் தயாராக இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. வாசிக்கத் தெரியாத பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வாசிக்கச் சொல்லி கேளுங்கள். அந்தப் பழக்கம் குழந்தைகளுக்கும் உங்களுக்கும் வாழ்வில் மேலோங்க உதவும். பெற்றோர்கள் வாசிப்புப் பழக்கத்தைக் கடைப்பிடித்தால் பிள்ளைகளும் அப்பாதையில் செல்வார்கள். எதிர்மறையாக என் குடும்பத்தில் நான் வாசிப்பதைக் கண்ட எனது 45 வயது அம்மா வாசிக்க கற்றுக்கொடுக்க என்னிடம் கேட்டது ஒரு பெரும் பாக்கியமாகவே நான் கருதுகிறேன்.

அம்மாவோடு அரட்டை அடித்துக்கொண்டிருக்கும் திண்ணை நண்பிகளும் அவர்களின் குடும்பத்தார்களும் என்னிடம் வாசிக்கக் கற்றுக்கொண்டது இரட்டை பாக்கியமாகும். இப்பொழுது எனது அம்மாவோ அகிலனின் சித்திரப்பாவை நாவலை வாசித்துக் கொண்டிருக்கிறார். குழந்தைகளை நூலகத்துக்கு அழைத்துச்செல்வது எவ்வளவு முக்கியமோ அதுபோல புத்தகக் கண்காட்சி நடைபெறும் இடங்களுக்கு அழைத்துச்செல்வதும் வாழ்க்கையின் ஒரு விசேட அம்சமாகும். அவர்களின் தேடல் வளரும். செய்தித்தாள்களில் அறிவிக்கும் இலக்கியப் போட்டிகளுக்குப் பிள்ளைகளைப் பங்கேற்க பரிந்துரை செய்யுங்கள். அப்பழக்கம் அவர்களின் அறிவு என்னும் தகவல் பெட்டி மேலும் பல தகவல்களைத் தெரிந்துகொள்ள வழிவகுக்கும்.

செல்போன்கள் வளராத அக்காலத்தில் நம் முன்னோர்கள் செய்தித்தாள், புத்தகங்கள் மூலம்தான் பல விடயங்களைத் தெரிந்துகொண்டு தம் அறிவை வளர்த்துக்கொண்டார்கள். செல்போன்கள் நமக்கு அத்தகைய வளர்ச்சியைக் கொடுத்தாலும் நம்மை சோம்பேறியாக்கிவிட்டது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. கற்றலுக்காக குழந்தைகளிடம் செல்போனை கொடுக்கும் நாம், அதைப் பயன்படுத்தும் சரியான நேரத்தை குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.


# உளவியல் கல்வி காலத்தின் கட்டாயம்

**இம்தியாஸ் ஹுசன்**

உளவியலானது மனித மனதின் அற்புத உலகமாகும். இது மனித மனம், நடத்தை மற்றும் அனுபவங்களைப் பற்றி ஆராயும் ஒரு அறிவியல் துறையாகும். மனிதர்கள் எவ்வாறு சிந்திக்கிறார்கள், உணர்கிறார்கள், செயற்படுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள உளவியல் உதவுகிறது. உளவியலானது மனிதர்களின் வளர்ச்சி, ஆளுமை, உறவுகள், மனோநிலை மற்றும் பலவற்றைப் பற்றியும் ஆராய்கிறது.

உளவியல் நம் அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் பாதிக்கிறது. நாம் எவ்வாறு மற்றவர்களுடன் தொடர்பு கொள்கிறோம், எவ்வாறு முடிவுகளை எடுக்கிறோம், எவ்வாறு கற்றுக்கொள்கிறோம், எவ்வாறு பிரச்சினைகளைச் சமாளிக்கிறோம் என்பதை உளவியல் விளக்குகிறது.

உளவியலை தனிப்பட்ட மற்றும் சமூக வளர்ச்சியின் ஒரு மூலக்கல்லாகப் பார்க்கும்போது அதன் தாக்கத்தைப் பின்வரும் வழிகளில் காணலாம்:



**உணர்ச்சி நுண்ணறிவை மேம்படுத்துதல்:**

உணர்ச்சிகளைப் புரிந்துகொள்வது தனிநபர்கள் தங்கள் எதிர்வினைகளைக் கட்டுப்படுத்தவும் மற்றவர்களுடன் பச்சாதாபத்தை ஏற்படுத்தவும் உதவுகிறது. உணர்ச்சி நுண்ணறிவு சிறந்த தகவல் தொடர்புகளை வளர்க்கிறது, மோதல்களைக் குறைக்கிறது, குடும்பங்கள், பணியிடங்கள் மற்றும் சமூகங்களில் ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது.

**மன ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்:**

உளவியல் கோட்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு தனிநபர்கள் மனநல சவால்களை அடையாளம் காணவும் எதிர்கொள்ளவும் உதவுகிறது. களங்கத்தைக் குறைக்கிறது மற்றும் சரியான நேரத்தில் தலையீட்டை ஊக்குவிக்கிறது. மனநலத்துக்கு முன்னுரிமை அளிக்கும் சமூகம் மிகவும் நெகிழ்ச்சியுடனும் ஆதரவுடனும் இருக்கும்.

**சமூக நல்லிணக்கத்தை வளர்ப்பது:**

மனித நடத்தையைப் படிப்பதன் மூலம் உளவியல் மோதல்களைத் தீர்ப்பதற்கும் நம்பிக்கையை வளர்ப்பதற்கும் உறவுகளை வலுப்படுத்துவதற்கும் கருவிகளை வழங்குகிறது. இது பன்முக கலாசார சமூகங்களில் அமைதியான சகவாழ்வுக்கு இன்றியமையாத சகிப்புத்தன்மை மற்றும் பன்முகத்தன்மைக்கு மரியாதை கற்பிக்கிறது.

**நேர்மறையான நடத்தையை ஊக்குவித்தல்:**

வலுவூட்டல் மற்றும் உந்துதல் போன்ற உளவியல் கோட்பாடுகள், நல்ல பழக்கங்களை ஊக்குவிக்கவும் நன்னடத்தைகளை ஊக்கப்படுத்தவும் பயன்படுத்தப்படலாம். இது சமூக முன்னேற்றத்துக்கும் ஸ்திரத்தன்மைக்கும் பங்களிக்கிறது.

எதிர்கால சந்ததியினரின் மனதையும் மனப்பான்மையையும் வடிவமைக்கும் கல்வி ஒரு நாட்டின் வளர்ச்சியின் அடிக்கல்லாகும். வேகமாக மாறிவரும் உலகில் மனநலச் சவால்கள், சமூக மோதல்கள் மற்றும் உணர்ச்சிப் போராட்டங்கள் பெருகிய முறையில் அதிகரித்துவரும் நிலையில், உளவியல் கல்வியின் தேவை எப்போதும் அதிகமாக இருந்துவருகிறது.

எனவே, ஆரம்பப் பாடசாலை முதல் உயர்நிலைப் பாடசாலை வரை தேசிய பாடத் திட்டத்தில் உளவியலை ஒரு முக்கிய பாடமாக அறிமுகப்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

இம்முயற்சியானது தனிப்பட்ட மாணவர்களுக்குப் பயனளிப்பது மட்டுமன்றி, இணக்கமான மற்றும் முற்போக்கான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பங்களிக்கும். கல்வியில் உளவியலுக்கான வழக்கு உளவியல், மனம் மற்றும் நடத்தை பற்றிய அறிவியல் ஆய்வு, மனித உணர்வுகள், சிந்தனை செயல்முறைகள் மற்றும் செயல்கள் பற்றிய விலைமதிப்பற்ற நுண்ணறிவுகளை வழங்குகிறது.

இது சுய விழிப்புணர்வு, உணர்ச்சி ரீதியான பின்னடைவு மற்றும் தனிப்பட்ட திறன்களைக் கொண்ட தனிநபர்களை மேம்படுத்துகிறது. இவை அனைத்தும் தனிப்பட்ட மற்றும் சமூக நல்வாழ்வுக்கு அவசியம். இலங்கை ஏன் இந்தத் தைரியமான மற்றும் முற்போக்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்பதை ஆராய்வோம்.

**மனநல நெருக்கடியை நிவர்த்தி செய்தல்:**

மனநலம் என்பது உலகளவிலும் இலங்கையிலும் வளர்ந்துவரும் கவலையாக உள்ளது. மன அழுத்தம், பதற்றம், மனச்சோர்வு மற்றும் பிற மனநலப் பிரச்சினைகள் மாணவர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் குழந்தைகளைக்கூட அதிகளவில் பாதிக்கின்றன.

***உளவியல் கற்பிப்பதன் மூலம் பாடசாலைகள்:***

மன அழுத்தம் மற்றும் தோல்வியைச் சமாளிக்க மாணவர்களைச் சமாளிக்கும் வழிமுறைகளுடன் சித்தப்படுத்துங்கள். மனநலப் பிரச்சினைகளைச் சுற்றியுள்ள களங்கத்தைக் குறைக்கவும். ஆரம்பகால தலையீட்டை ஊக்குவிக்கவும் மற்றும் மன நலனை மேம்படுத்தவும்.

> ***மனநலம் மற்றும் உணர்ச்சி ரீதியான முற்போக்கான சிந்தனைகளை வளர்ப்பதன் மூலம் இலங்கை மற்ற நாடுகளுக்கு முன்மாதிரியாக இருக்க முடியும். கல்வி மற்றும் கலாசார செழுமையை மதிக்கும் ஒரு தேசமாக இலங்கை தனது இளைஞர்களை நவீன உலகின் சிக்கல்களுக்குத் தயார்படுத்தும் சவாலை எதிர்கொள்ள வேண்டும். பாடத்திட்டத்தில் உளவியலை ஒருங்கிணைப்பதன் மூலம் உணர்வு ரீதியாக அறிவார்ந்த, சமூகப் பொறுப்புணர்வு மற்றும் மனநலம் மிக்க குடிமக்களின் தலைமுறையை அரசாங்கம் உருவாக்க முடியும்.***

**உணர்ச்சி நுண்ணறிவை ஊக்குவித்தல்:**

உணர்ச்சி நுண்ணறிவு (E I) 21ஆம் நூற்றாண்டில் ஒரு முக்கியமான திறனாகும். தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வெற்றிக்கு உணர்ச்சிகளைப் புரிந்துகொள்வது, ஒருவருக்கொருவர் உறவுகளை நிர்வகிப்பது மற்றும் மற்றவர்களுடன் அனுதாபம் கொள்வது அவசியம்.

**உளவியல் பாடத்திட்டம் மாணவர்களுக்கு உதவும்:**

சுய விழிப்புணர்வு மற்றும் பச்சாதாபத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். சகாக்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் நேர்மறையான உறவுகளை உருவாக்குங்கள். உணர்ச்சிகளை திறம்பட நிர்வகிக்கவும் மோதல்கள் மற்றும் தவறான புரிதல்களைக் குறைக்கவும்.

**சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்துதல்:**

இலங்கையின் பல்வேறு கலாசார மற்றும் இன நிலப்பரப்பில் நல்லிணக்கத்தைப் பேணுவதற்குப் பரஸ்பர புரிதலும் மரியாதையும் தேவை. உளவியல் சகிப்புத்தன்மையை வளர்க்கிறது மற்றும் பன்முக கலாசார சமூகத்தில் அமைதி மற்றும் ஒற்றுமையை ஊக்குவிக்கும் மாணவர்களுக்குப் பன்முகத்தன்மையை பாராட்ட உதவுகிறது.

**நவீன தொழில்களுக்குத் தயாராகுதல்:**

எதிர்கால வேலைச் சந்தையானது தகவல் தொடர்பு, குழுப்பணி மற்றும் சிக்கலைத் தீர்ப்பது போன்ற மென்மையான திறன்களை அதிகளவில் மதிக்கிறது. உளவியல் கல்வியானது, ஆலோசனை, கல்வி, சுகாதாரம், மனித வளங்கள் மற்றும் சமூகப் பணி போன்ற துறைகளில் பணிபுரிய மாணவர்களைத் தயார்படுத்துகிறது.

**பாடசாலைகளில் கொடுமைப்படுத்துதல் மற்றும் வன்முறையைக் குறைத்தல்:**

இலங்கைப் பாடசாலைகளில் கொடுமைப்படுத்துதல் மற்றும் வன்முறை குறிப்பிடத்தக்க பிரச்சினைகளாகும்.

இன்றைய காலகட்டத்தில் தகாத பழக்கவழக்கங்கள் பெருகி வருவதனால் எதிர்கால சந்ததியினரின் எதிர்காலம் பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. அதனால் பாடசாலைகளில் உளவியலை அறிமுகப்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. இதன்மூலம் மாணவர்கள் தங்களைத் தாங்களே புரிந்துகொள்ளவும் மற்றவர்களுடன் சிறந்த உறவை ஏற்படுத்திக் கொள்ளவும் வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும் முடியும்.

சிறு வயதிலிருந்தே உளவியலைக் கற்பிப்பது குழந்தைகளுக்கு அவர்களின் உணர்ச்சிகள், பலம் மற்றும் பலவீனங்களைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இந்த சுய விழிப்புணர்வு நம்பிக்கையையும் நெகிழ்ச்சியையும் வளர்க்கிறது.

அத்துடன், உளவியல் கல்வியானது மன அழுத்தம், தோல்வி மற்றும் சவால்களைக் கையாள்வதற்கான வழிமுறைகளை மாணவர்களுடன் சித்தப்படுத்துகிறது. இது பிற்கால வாழ்க்கையில் மனநலப் பிரச்சினைகளின் அபாயத்தைக் குறைக்க வழிகோலும்.

உளவியலிலுள்ள பாடங்கள் ஒவ்வொருவரின் திறன்களை மேம்படுத்தும் அதேவேளை, ஆரோக்கியமான உறவுகளை உருவாக்கவும் குழுக்களில் திறம்படச் செயற்படவும் மாணவர்களுக்கு உதவுகின்றன. உளவியல் பகுப்பாய்வானது சிந்தனை மற்றும் சிக்கலைத் தீர்க்கும் திறனை ஊக்குவிக்கிறது.

இதில் பிரதான விடயம் யாதெனில், மாணவர்கள், அனுமானங்களைக் கேள்வி கேட்கவும் சூழ்நிலைகளைப் பகுப்பாய்வு செய்யவும் தகவலறிந்த முடிவுகளை எடுக்கவும் கற்றுக்கொள்கிறார்கள். இச்செயற்பாடு மாணவர்கள் பல விடயங்களைத் தானாகக் கற்று அவர்களுடைய அறிவை விருத்தி செய்ய பேருதவியாக அமையும்.

மேலும், பச்சாதாபம், சகாக்களின் அழுத்தம் மற்றும் ஆக்கிரமிப்பு போன்ற உளவியல் கருத்துகள் பற்றிய விழிப்புணர்வு, பாடசாலைகளில் கொடுமைப்படுத்துதல் மற்றும் வன்முறைக்கு எதிரான முன்முயற்சி நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும்.

இன்னும் உளவியலின் வெளிப்பாடானது ஆலோசனை, சிகிச்சை, கல்வி, மனித வளங்கள் மற்றும் பலவற்றில் பல்வேறு தொழில் வாய்ப்புகளைத் திறக்கிறது.

ஆரம்பப் பாடசாலை முதல் உயர்நிலை வரை உளவியல் கல்வியமைப்பில் உளவியலை ஒருங்கிணைப்பதற்கு ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை தேவைப்படுகிறது.

உளவியல் கல்வி மூலம் மாணவர்களுக்குப் பச்சாதாபத்தின் மதிப்பையும் அவர்களின் செயல்களின் தாக்கத்தையும் கற்பிக்க முடியும். இது பாதுகாப்பான மற்றும் உள்ளடக்கிய கற்றல் சூழலுக்கு வழிவகுக்கும். செயற்படுத்துவதற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டம் இலங்கைக் கல்வி முறையில் உளவியலை திறம்பட ஒருங்கிணைக்க, அரசாங்கம் ஒரு கட்ட அணுகுமுறையைப் பின்பற்றலாம்:

***ஆரம்பக் கல்வி:***

ஊடாடும் செயற்பாடுகள் மற்றும் கதை சொல்லல் மூலம் உணர்ச்சிகள், பச்சாதாபம் மற்றும் சுய விழிப்புணர்வு ஆகியவற்றின் அடிப்படைக் கருத்துகளை அறிமுகப்படுத்துங்கள்.

***நடுநிலைப்பள்ளி:***

குழு விவாதங்கள் மற்றும் ரோல்பிளே மூலம் மோதல் தீர்வு, மன அழுத்த மேலாண்மை மற்றும் பன்முகத்தன்மையைப் புரிந்துகொள்வது ஆகியவற்றை உள்ளடக்கியதாக விரிவாக்குங்கள்.

***உயர்நிலைப் பாடசாலை:***

அறிவாற்றல் உளவியல், நடத்தை கோட்பாடுகள் மற்றும் மன ஆரோக்கியத்தை உள்ளடக்கிய ஒரு ஆழமான பாடத்திட்டத்தை வழங்கவும். ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் விமர்சன சிந்தனைப் பயிற்சிகளை ஊக்குவிக்கவும்.

***ஆசிரியர் பயிற்சி:***

உளவியலைக் கற்பிப்பதற்கும் மாணவர்களின் உணர்ச்சி மற்றும் நடத்தைத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தேவையான பயிற்சியை ஆசிரியர்களுக்கு வழங்கவும். பாடசாலைகளில் உளவியலை அறிமுகப்படுத்துவது தொலைநோக்கு தாக்கங்களை ஏற்படுத்தும்.

***வலுவான குடும்பங்கள் மற்றும் சமூகங்கள்:***

உணர்ச்சி ரீதியாக அறிவார்ந்த நபர்கள் ஆரோக்கியமான உறவுகளை உருவாக்குகிறார்கள். சமூக பதற்றங்களைக் குறைக்கிறார்கள். சிறந்த மனநலம் மற்றும் தனிப்பட்ட திறன்களைக்கொண்ட தொழிலாளர்கள் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கின்றனர்.

மனநலம் மற்றும் உணர்ச்சி ரீதியான முற்போக்கான சிந்தனைகளை வளர்ப்பதன் மூலம் இலங்கை மற்ற நாடுகளுக்கு முன்மாதிரியாக இருக்க முடியும்.

கல்வி மற்றும் கலாசார செழுமையை மதிக்கும் ஒரு தேசமாக இலங்கை தனது இளைஞர்களை நவீன உலகின் சிக்கல்களுக்குத் தயார்படுத்தும் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

பாடத்திட்டத்தில் உளவியலை ஒருங்கிணைப்பதன் மூலம் உணர்வு ரீதியாக அறிவார்ந்த, சமூகப் பொறுப்புணர்வு மற்றும் மனநலம் மிக்க குடிமக்களின் தலைமுறையை அரசாங்கம் உருவாக்க முடியும்.

கல்வியில் உளவியலின் உருமாறும் திறனை அங்கீகரிக்க கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் பெற்றோர்களை நாம் கேட்டுக்கொள்கிறோம். வலிமையான, அதிக இரக்கமுள்ள, முற்போக்கான இலங்கையைக் கட்டியெழுப்ப இந்தத் தொலைநோக்கு நடவடிக்கையை மேற்கொள்வோம். நம் குழந்தைகள் மற்றும் நம் நாட்டின் எதிர்காலம் அதில் தங்கியுள்ளது.

இறுதியாக உளவியல் என்பது ஒரு கல்வியியல் துறை மட்டுமல்ல, இது தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் சமூக மாற்றத்துக்கான ஒரு கருவியாகும். பாடசாலை பாடத்திட்டத்தில் உளவியலை ஒருங்கிணைப்பதன் மூலம் எதிர்கால சந்ததியினர் உணர்ச்சி ரீதியாக சமநிலையான, சமூக இணக்கமான மற்றும் அறிவுபூர்வமாக பூர்த்திசெய்யும் வாழ்க்கையை நடத்துவதற்கு வசதியாக இருப்பதை உறுதிசெய்கிறது.

சமூகம் தொடர்ந்து சிக்கலான சவால்களை எதிர்கொள்வதால், உளவியல் மனித பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதற்கும் தீர்ப்பதற்கும் ஒரு பாதையை வழங்குகிறது. இது கல்வியின் ஒரு தவிர்க்க முடியாத பகுதியாகும். குழந்தைகளுக்கு மனம் மற்றும் நடத்தை பற்றிய அறிவியலைக் கற்பிப்பதன் மூலம் இரக்கமுள்ள, நெகிழ்ச்சியான மற்றும் முற்போக்கான உலகத்துக்கு அடித்தளம் அமைக்கிறோம் என்பதை மனதிற்கொள்ளவும்.

கல்விக்கான இந்த அணுகுமுறை சந்தேகத்துக்கிடமின்றி கல்வியில் திறமையான நபர்களை உருவாக்குகிறது. இது உணர்ச்சி ரீதியாக அறிவார்ந்த மற்றும் சமூக பொறுப்புணர்வுடன் அனைவருக்கும் பிரகாசமான எதிர்காலத்தை உறுதிசெய்யும் என்பதில் சந்தேகமில்லை..

## குறுக்கெழுத்துப் போட்டி - 50

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | | 3 | | |
| | ■ | ■ | | ■ | | ■ | | ■ | 4 |
| 5 | | 6 | 7 | | ■ | 8 | | 9 | ■ |
| | ■ | 10 | | | | ■ | 11 | | |
| | | | ■ | ■ | 12 | | | | ■ |
| 13 | | | | | 14 | ■ | ■ | ■ | |
| | ■ | ■ | ■ | ■ | | 15 | | | 16 |
| | ■ | 17 | ■ | 18 | ■ | | 19 | ■ | ■ |
| 20 | | | | | | ■ | 21 | | |
| | ■ | | ■ | | ■ | ■ | | ■ | 22 |

**இடமிருந்து வலம்**

01. பகைவர் ஒத்த சொல்.
02. அறிவாளி ஒத்த சொல்.
05. பெருமெடுப்பு.
08. குரு போன்றவரிடம் வைக்கும் மதிப்பும் அன்பும்.
10. பூமி (குழம்பியுள்ளது).
11. படுக்கை நிலை ஓரெழுத்து இல்லை (குழம்பியுள்ளது).
12. சிறுவர் விளையாட்டு (குழம்பியுள்ளது).
20. பணிவை ஒத்த சொல்.
21. தகட்டு வடிவம்.

**மேலிருந்து கீழ்**

01. மேன்மாடம் (குழம்பியுள்ளது).
02. சினங்கொள்.
03. அச்சமுறு.
06. உயர்ந்தகன்ற மேட்டுநிலம் (குழம்பியுள்ளது).
09. திசையை ஒத்த சொல்.

12. மனைவியின் உடன் பிறந்தவளின் கணவன் (குழம்பியுள்ளது).
13. தலைப்பாகை.
15. கட்டுதல்.
17. மேகமூட்டம்.
18. ஓர் இசைக்கருவி.
19. ஆமணக்கம் விதை (குழம்பியுள்ளது).

**கீழிருந்து மேல்**

04. பார்வதி தேவி.
07. செருக்கு (குழம்பியுள்ளது).
16. மறுமொழி.
22. சமையல் வேலை.

**வலமிருந்து இடம்**

14. திருடுதல் ஓரெழுத்து இல்லை.
16. முதியவன்.
19. விதையினின்று வெளிப்படும் இளஞ்செடி.

## குறுக்கெழுத்துப் போட்டி - 49க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | வி | ய | ம் | ■ | 2 வா | ன | 3 ம | ன் | ■ |
| ழ் | ■ | ப | ■ | று | 4 து | ■ | க | ■ | ம் |
| ப் | 5 பு | 6 உ | ■ | 7 மா | ■ | ■ | று | ■ | மே |
| 8 பு | ற | ம் | ■ | ■ | 9 தா | ழ | ல் | க் | 10 கோ |
| ■ | க் | ■ | 11 சி | ந் | து | ■ | ■ | ■ | த |
| 12 ச | க | க் | ர | ■ | ■ | 13 பு | ற் | சி | க |
| ■ | டை | ■ | ம் | த | 14 வீ | ■ | 15 இ | ■ | ■ |
| 16 மா | ■ | 17 வா | ■ | ■ | ம் | 18 தே | ய | ம | 19 நா |
| லு | ■ | ங் | 20 அ | ■ | 21 பு | ற் | கை | ■ | ற் |
| மி | ம் | 22 கு | ■ | ■ | ■ | று | ■ | 23 சே | று |

**மூளைக்கு வேலை பகுதியில் தரப்படுகின்ற ஆக்கங்களுக்கான சரியான விடைகளை thamilanweekly@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அனுப்பலாம்.**

# க்ரைம் த்ரில்லர் படங்களாதான் அமையுது. - தன்ஷிகா

**நடிகை சாய் தன்ஷிகாவுக்கு அறிமுகமே தேவையில்லை. பிரபல இயக்குநர்களின் 'குட்புக்'கில் எப்போதும் இருப்பவர். கதாநாயகி, வில்லி, குணச்சித்திரம் என எந்த கதாபாத்திரம் கொடுத்தாலும் கனகச்சிதமாக பண்ணக்கூடியவர்.**

**சமீபத்தில், 'ஐந்தாம் வேதம்' வெப் சீரிஸில் கதாநாயகியாக நடித்து பலரின் கவனத்தை ஈர்த்தார். தற்போது மித்ரன் ஆர் ஜவஹர் இயக்கத்தில் வெளிவரவுள்ள 'அதிர்ஷ்டசாலி' படத்தில் நடித்து முடித்துள்ளார்.**



**முதல்முறையாக வெப் சீரிஸ்... எப்படியிருந்தது அனுபவம்?**

ரொம்ப வித்தியாசமான அனுபவம். சினிமாவுக்கும் வெப் சீரிஸுக்கும் பெரிசா வித்தியாசம் தெரியல. ஆனா, வெப் சீரிஸ்ல என் கெரக்டர் உட்பட ஒவ்வொரு கெரக்டரும் அழுத்தமானதாக இருக்குது. டைரக்டர் நாகா சாருடன் ஐந்து மாதங்கள் ஷூட்டிங் பயணத்துல நிறைய கத்துக்கிட்டேன்.

அவர் 'மர்மதேசம்', 'சிதம்பர ரகசியம்'னு பல சீரியல்களும் 'ஆனந்தபுரத்து வீடு' உள்ளிட்ட படங்களும் பண்ணினவர். அவரின் கதைக்களம் நடிப்புக்குப் பெரும் பலம் சேர்க்கும். காசி, கும்பகோணம், ஏலகிரி மலைனு பல இடங்கள்ல டிராவல் பண்ணி ஷூட்டிங் எடுத்தோம். காசி ஷூட்டிங் ஒரு புனித யாத்திரைக்குப் போன மாதிரி இருந்தது. கங்கையில் ஆரத்தி பார்த்ததும் அங்கேயே என் பிறந்தநாளைக் கொண்டாடினதும் எல்லாமே அலாதியானது. பனி நிறைந்த காட்டுப் பகுதியில் என்னை புல்லட் ஓட்ட வச்சாங்க. இப்படி நிறைய மெனக்கெட்டு நடித்தேன். வெப் சீரிஸைப் பார்த்திட்டு பலரும் பாராட்டினபோதுதான் ரொம்ப சந்தோஷமா இருந்தது.

**சினிமாவுக்குள் வந்து 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகிடுச்சு... எப்படி வந்தது சினிமா ஆர்வம்?**

என் மாமா அருண் சினிமாவில் இருந்தார். அவர் மூலமாகத்தான் சினிமாவுக்குள் என்ட்ரியானேன். அவர் நடிகை சிம்ரன், ஜோதிகாவுக்கு மனேஜராக இருந்தார். அதனால் சினிமாவுக்குள் ஈசியா வரமுடிஞ்சது. இப்பவும் எனக்கு வழிகாட்டி அவர்தான். சின்ன வயசுல எனக்கு கம்ப்யூட்டர் என்ஜினியரிங் படிக்கணும்னுதான் ஆசை. ஆனா, பள்ளிப்படிப்பு முடிக்கும்போதே 'பேராண்மை' பட வாய்ப்பு வந்திடுச்சு. அப்ப சினிமா பத்தி ஒண்ணுமே தெரியாது. இயக்குநர் எஸ்.பி.ஜனநாதன் சார்தான் ஒரு பேராசிரியராக இருந்து சினிமாவை சொல்லிக்கொடுத்து கேமரா முன்னாடி என்னை நிறுத்தினார். அவருக்கு நன்றி கூறு கடன்பட்டிருக்கேன்.

**'அரவான்', 'பரதேசி', 'கபாலி', 'இருட்டு'... போன்ற படங்கள் உங்களை ரொம்ப கவனிக்க வைச்சதே..?**

இவை எல்லாமே சிறந்த இயக்குநர்களின் படங்கள். அவர்களுடன் வொர்க் பண்ணக்கூடிய வாய்ப்பு எனக்கு கடவுளின் அருளால் கிடைச்சது. அதேபோல நானும் ஒவ்வொரு படத்துக்கும் நிறைய உழைப்பை செலுத்தினேன். அதன் பிரதிபலிப்பே என்னை கவனிக்க வைச்சது.

'பேராண்மை', 'பரதேசி', 'அரவான்'ல நடிச்சதைப் பார்த்திட்டு நிறைய பேர் உங்களை ரொம்பப் பிடிக்கும்னு சொன்னாங்க. அடுத்து பா.இரஞ்சித் சாரின், 'கபாலி'யில் என் ஹேர்கட்டிங் லுக் பார்த்து பாராட்டினாங்க. ரஜினி சாரோட மகளாக நடிச்சது என் வாழ்க்கையில் கிடைச்ச பெரிய பாக்கியம்.

சுந்தர் சி. சாரை ஓர் இயக்குநராக ரொம்ப பிடிக்கும். அவர் இயக்கத்துல ஒரு படத்திலாவது நடிக்கணும்னு ஆசை இருக்கு. இருந்தும் அவர் கதாநாயனாக நடிச்ச 'இருட்டு'ல வில்லியாக நடிக்க வாய்ப்பு அமைஞ்சது. இப்படி எல்லாமே தானாக அமைஞ்சதுதான்.

**எல்லாமே த்ரில்லர், க்ரைம், ஹாரர்னு அமைகிறதே..?**

எனக்கு கெரக்டர்தான் முக்கியம். நல்ல கெரக்டராக இருந்தால் அதுவாகவே மாறணும்னு நினைப்பேன். லேடி ஓரியண்டட் கெரக்டர்னு விரும்புறது கிடையாது. நல்ல கதைக் களத்தோடு வந்தால் பண்ணுவேன். அப்படியாகவே த்ரில்லர், ஹாரர் படங்களாக அமையுதுனு நினைக்கிறேன்.

**மலையாளம், தெலுங்கு, கன்னடம்னு வேற்று மொழிகள்லயும் பண்றீங்க..?**

தெலுங்கில் கடந்த ஆண்டு 'அந்திம தீர்ப்பு', 'தக்ஷினா'னு நான் நடிச்ச இரண்டு படங்கள் ரிலீஸ் ஆச்சு. அதுக்கு முன்னாடி 'ஷிகாரு'னு ஒரு படம் வெளியாச்சு. இதில் ஒரு படத்தில் ஹீரோயினாக பண்ணினேன். எல்லாமே க்ரைம், த்ரில்லர்தான். அதேபோல மலையாளத்துல பிஜாய் நம்பியார் இயக்கத்துல துல்கர் சல்மான்கூட 'ஷோலோ'னு ஒரு படம் நடிச்சேன். அது கொரோனா ரைம்ல ரிலீஸ் ஆச்சு.கன்னடத்துல 'உத்கர்ஷா'னு த்ரில்லர் படம் பண்ணினேன். எல்லா மொழி படங்களும் பண்றேன். இப்ப தமிழ்ல அதிகம் கவனம் செலுத்திட்டு இருக்கேன்.

**அடுத்து என்னென்ன படங்கள்?**

'யோகி டா'னு ஓர் அக்ஷன் படத்துல ஹீரோயினாக நடிச்சிருக்கேன். இதனை கௌதம் கிருஷ்ணா என்கிற புது இயக்குநர் பண்ணியிருக்கார். அடுத்து மித்ரன் ஆர். ஜவஹர் சார் இயக்கத்துல 'அதிர்ஷ்டசாலி' படம் பண்ணி முடிச்சிட்டேன். இதுல மாதவன் ஹீரோவாக நடிச்சார். நானும் மடோனா செபஸ்டியனும் ஹீரோயினாக நடிச்சிருக்கோம். நல்ல கெரக்டராக வந்திருக்கு.

# ஓ.ஏ.கே.தேவர்!



தமிழ்ச் சினிமா உலகில் அன்று இரு தேவர்கள் உலா வந்தனர். அவர்களுள் ஒருவர் சாண்டோ சின்னப்பா தேவர். இவர் படங்களை இயக்கியது மட்டுமல்லாமல், மிருகங்களையும் நடிக்க வைத்து வெற்றிகண்டவர். எம்.ஜி.ஆரை வைத்து 16 படங்களை இயக்கியவர்.

அடுத்தவர், ஓ.ஏ.கே.தேவர். இவர் ஆரம்பத்தில் கறுப்பு, வெள்ளைப் படங்களில் அரசராக ஓரிரு காட்சிகளில் தோன்றி நடித்தவர். எடுத்துக்காட்டாக ஒருசில படங்களை எடுத்துக்காட்ட விளைகிறேன். கோவலன் – கண்ணகி சரித்திரப் படமான கண்ணம்மா நடித்த 'கண்ணகி' படத்தில் கோவலனைக் கொன்ற வேந்தனாக நடித்தார்.

அதே கதை அதே வடிவில் பின்னர் எஸ்.எஸ்.ராஜேந்திரன், விஜயகுமாரி, ராஜஸ்ரீ நடித்து வெளிவந்தது. அப்படம் தான் 'பூம்புகார்'. இப்படத்திலும் இவரே அரசனாக நடித்திருந்தார். இவரை அன்றைய சரித்திரப் படத் தயாரிப்பாளர்கள் அரசனாக ஒப்பந்தம் செய்திருந்தார்கள்.



அன்று எம்.ஜி.ஆர். நடித்த 'மதுரை வீரன்' (1956) படத்தில் மதுரை வீரனை (எம்.ஜி.ஆரை) கொலை செய்யும் அரசனாக நடித்தார். சரித்திரப் படங்களில் இவரின் அபார நடிப்பு பிரமாதமாக இருந்ததால் தொடர்ந்து எம்.ஜி.ஆரின் சரித்திரப் படங்களான 'மகாதேவி' (1957), 'விக்ரமாதித்தன்' (1962) போன்ற படங்களிலும் நடித்தார்.

சிவாஜி கணேசன் நடித்த சரித்திரப் படங்களான 'மனோகரா' (1954), 'உத்தம புத்திரன்' (1958), 'குறவஞ்சி' (1959) போன்ற படங்களிலும் அரச உடையில் கம்பீரமாக ராஜநடையில் தோன்றினார். அதுமட்டுமல்லாமல், பின்னர் சமூகப் படங்களில் வெள்ளை ஜிப்பா உடையில் மைனர் வேடங்களில் நடித்து வெளுத்து வாங்கினார். பலதரப்பட்ட வேடங்களில் நடித்த இவர், 1966இல் வெளிவந்த 'நான் ஆணையிட்டால்' படத்தில் எம்.ஜி.ஆரின் வளர்ப்புத் தந்தையாக (வில்லன் வேடத்தில்) நடித்தார். அதே ஆண்டில் வெளிவந்த 'தங்கச் சுரங்கம்' படத்திலும் சிவாஜிக்குத் தந்தையாக (வில்லன் வேடத்தில்) நடித்தார்.

இவர் அன்று மக்கள் திலகத்துடனும் நடிகர் திலகத்துடனும் அவ்வப்போது பல படங்களில் பல்வேறு வேடங்களில் நடித்திருந்தார். மக்கள் திலகத்துடன் 'பறக்கும் பாவை' (1966), 'கண்ணன் என் காதலன்' (1968), 'காதல் வாகனம்' (1968), 'அடிமைப்பெண்' (1969), 'ராமன் தேடிய சீதை' (1972) போன்ற படங்களில் நடித்திருந்தார்.

'விக்ரமாதித்தன்', 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி', 'காதல் வாகனம்' போன்ற படங்களில் மக்கள் திலகத்துடன் பயங்கரமாக மோதி நடித்தார். நடிகர் திலகத்துடன் 'காவல் தெய்வம்' (1968), 'எங்க மாமா' (1970) போன்ற படங்களிலும் நடித்திருந்தார்.

ஜெய்சங்கருக்கு வில்லனாக 'நான்கு சுவர்கள்', 'மாணவன்' போன்ற படங்களில் நடித்தார். ரவிச்சந்திரனுடன் 'மெட்ராஸ் டு பாண்டிச்சேரி', 'நீயும் நானும்', 'மூன்றெழுத்து' போன்ற படங்களிலும் வில்லனாக தோன்றி நடித்தார்.

இவரின் நடிப்புக்கு 'ராமு', 'வீர அபிமன்யு', 'சாது மிரண்டால்', 'சக்கரம்' போன்ற படங்கள் மென்மேலும் மெருகூட்டின எனலாம்.

**கலாபூஷணம்**
**கல்லொளுவை பாரிஸ்**




# நான் சினிமாவில் இருப்பது சிலருக்குப் பிடிக்கவில்லை
## சிவகார்த்திகேயன்

நடிகர் சிவகார்த்திகேயன் தமிழ் சினிமாவில் இன்று தவிர்க்க முடியாத முன்னணி நடிகராக வலம் வருகிறார். தற்போது ஏ.ஆர்.முருகதாஸ், சுதா கொங்கரா போன்ற முன்னணி இயக்குநர்களின் இயக்கத்தில் நடித்து வருகிறார். இவர் அளித்த பேட்டியொன்றில் அவர் பேசிய வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

அதில், ''சினிமாத் துறையில் என்னை போன்ற சாதாரண மனிதர்கள் வருவதை சிலர் மட்டுமே வரவேற்கின்றனர். சிலருக்கு அதை ஏற்றுக்கொள்ள மனம் இல்லை. இந்தத் துறைக்கு வருவதற்கு அவர் யார் என்று கேட்டனர். இன்னும் சிலர் என் முகத்துக்கு நேராகவே இந்தத் துறையில் நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய் என்று கேட்டனர். அவர்களுக்கு நான் எந்தப் பதிலும் சொல்வதில்லை. சிரித்துக்கொண்டே கடந்து விடுகிறேன். என்னுடைய வெற்றியின் மூலம் அவர்களுக்கு நான் பதில் தர விரும்பவில்லை. ஏனெனில், என் வெற்றி அவர்களுக்கானதல்ல. என் வெற்றி என்னுடன் சேர்ந்து 100 சதவீத உழைப்பை போடும் என்னுடைய குழுவினருக்கானது. வெற்றியோ தோல்வியோ என்னை கொண்டாடும் என் ரசிகர்களுக்கானது.

உங்களைப்போல நாங்களும் வர வேண்டும் அண்ணா என்று சொல்லும் மக்களுக்கானது. கடந்து செல்வது மட்டுமே அவர்களை கையாள்வதற்கான ஒரே வழி.

இன்னும் சிலர் சமூக வலைத்தளங்களில் என் படம் தோல்வியடைந்தால் அதற்குக் காரணம் நான்தான் என்று கூறி என்னைத் தாக்குவார்கள். ஆனால், என் படம் வெற்றியடைந்தால் என்னைத் தவிர மற்ற எல்லோரையும் பாராட்டுவார்கள்'' என சிவகார்த்திகேயன் தெரிவித்திருந்தார்.



# வருடத்துக்கு ஒரு மலையாளப் படம்
## – த்ரிஷா

டோவினோ தோமஸ், த்ரிஷா, வினய் ராய் நடிப்பில் வெளியான மலையாளப் படம், 'ஐடென்டிட்டி'. அகில் போல் மற்றும் அனஸ் கான் திரைக்கதை எழுதி இயக்கியிருக்கும் இந்தப் படம் தமிழிலும் வரவேற்பைப் பெற்று வருகிறது. இந்நிலையில், இந்தப் படக்குழுவினர் சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

நடிகை த்ரிஷா பேசும்போது, "மலையாளப் படங்கள் நல்ல கதையம்சம் கொண்டதாக இருக்கின்றன. எனக்கு மலையாளப் படங்கள் ரொம்பப் பிடிக்கும். அங்கு வருடத்துக்கு ஒரு படத்தில் நடிக்க வேண்டுமென்று நினைத்தேன். அந்த நேரத்தில் இந்த வாய்ப்பு வந்தது. இந்தப் படத்தின் திரைக்கதை புத்திசாலித்தனமானது.

டோவினோ, மலையாளத்தில் பெரிய ஹீரோ. அவர் தேர்ந்தெடுக்கும் படங்கள் எனக்குப் பிடிக்கும். அவருடன் நடித்தது நல்ல அனுபவம். மலையாளப் படங்களில் நாயகி கதாபாத்திரங்களையும் நன்றாக எழுதியிருப்பார்கள். இதிலும் சிறந்த கேரக்டர். இங்கும் இந்தப் படத்துக்குக் கிடைத்து வரும் வரவேற்பு மகிழ்ச்சியளிக்கிறது'' - என்றார்.

டோவினோ தோமஸ், வினய் உட்பட படக்குழுவினர் உடன் இருந்தனர்.



# அஜித்தை வைத்து விரைவில் படம் இயக்குவேன்
## - லோகேஷ் கனகராஜ்



மாநகரம், கைதி, மாஸ்டர், விக்ரம், லியோ படங்களை அடுத்து தற்போது ரஜினி நடிப்பில் 'கூலி' என்ற படத்தை இயக்கி வருகிறார் லோகேஷ் கனகராஜ். ரஜினியுடன் நாகார்ஜுனா, உபேந்திரா, சத்யராஜ், ஸ்ருதிஹாசன் உள்ளிட்ட பலர் நடிக்கும் இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார். நட்புக்காக பொலிவூட் நடிகர் அமீர்கான் நடிக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு 70 சதவீதம் முடிவடைந்துள்ள நிலையில், தற்போது தாய்லாந்தில் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், அடுத்தபடியாக 'கைதி-2' படத்தை இயக்க திட்டமிட்டுள்ள லோகேஷ் கனகராஜிடத்தில், கமல், ரஜினி, விஜய்யை வைத்து படம் எடுத்துவிட்ட நீங்கள், அஜித்தை வைத்து எப்போது படம் எடுப்பீர்கள்? என்று கேள்வி எழுப்பியதற்கு, அஜித் சாரை வைத்து படம் இயக்க வேண்டும் என்ற ஆசை நீண்ட காலமாகவே மனதளவில் இருந்து வருகிறது. விரைவில் அதற்கான முயற்சி எடுப்பேன். கூடிய சீக்கிரமே என்னுடைய அந்த ஆசை நிறைவேறும் என்று நினைக்கிறேன் என்கிறார் லோகேஷ் கனகராஜ்.

# காதலர் தினத்தன்று வெளியாகும் 2K Love Story

சுசீந்திரன் இயக்கியுள்ள படம் '2K லவ் ஸ்டோரி'. இப்படத்தில் கதாநாயகனாக ஜெகவீர் அறிமுகமாகி உள்ளார். மேலும் இப்படத்தில் மீனாட்சி கோவிந்தராஜன், பால சரவணன், அந்தோணி பாக்யராஜ், ஜெயப்பிரகாஷ், வினோதினி வைத்தியநாதன், ஜி.பி.முத்து உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். இப்படத்துக்கு டி.இமான் இசையமைத்துள்ளார். சுசீந்திரன் - இமான் இணைந்துள்ள 10ஆவது திரைப்படம் இதுவாகும்.

2K தலைமுறையின் காதல், நட்பு என அவர்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் படமாக இப்படம் உருவாகியுள்ளது. மேலும், வெட்டிங் போட்டோகிராபி எடுக்கும் இளைஞர்களின் வாழ்வில் நடக்கும் சம்பவங்களை அடிப்படையாகக்கொண்டு படத்தின் திரைக்கதை அமைந்துள்ளது. இந்தத் திரைப்படத்தின் டீசர் - ட்ரெய்லர்- பாடல்கள் ஆகியவை வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றது.

இப்படம் கடந்த 10 ஆம் திகதி உலகமெங்கும் வெளியாகும் என அறிவிக்கப்பட்ட நிலையில், தற்போது இப்படம் பொங்கலுக்கு வெளியாகாது என அறிவிக்கப்பட்டது. இதனால் ரசிகர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இந்நிலையில், இத்திரைப்படம் காதலர் தினமான பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி வெளியாகவுள்ளது என படக்குழு புதிய போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.



# எங்கே நிம்மதி

மதி இழந்து
அலையும் மனதை அடக்கி
ஆளும் பக்குவம் இல்லாதபோது
நிம்மதி நம்மிடம்
இல்லாமலே போய்விடும்

பிரபஞ்ச மாயையில் மயங்கி
பேராசைக்கு அடிமைப்பட்டு
மன நிம்மதி இழந்து வாழும் மனிதன்
இருக்கும் இடத்தை விட்டு
இல்லாத இடம் தேடி
எங்கெங்கோ அலைகின்றான்

ஆழியின் அலையோடு
போராடிப் புரண்டு எழுந்து
கடற்கரை மணலுக்குள்ளேயே
குடியிருக்கும் சிறு நண்டுக்கும்
சிறப்பான வாழ்வுண்டு

அஃறிணையோ உயர்திணையோ
மண்ணில் வாழும்
உயிரினங்கள் அத்தனைக்கும்
ஆசை பாசம் இன்பம் துன்பம்
பலம் பலயீனம் எல்லாமே உண்டு

ஏனோ மனிதனுக்குப் போதும்
என்று சொல்லும் மனமின்றி
தனக்குத் தானே வினைசெய்து
வேதனையில் மன நிம்மதி
தேடி அலைகின்றான்

ஆன்மா அழுகின்றது இவன்
அலையும் நிலை கண்டு

**மருதூர் மௌஜுன்,**
**மருதமுனை.**

# நீண்ட நிம்மதி நித்திரை



அவன் இனிமேல்
இங்கே
ஆக்கியுண்ண
அடுப்பெரிக்க
மாட்டானாம்
உடுப்புக் கழுவ
மாட்டானாம்!

உழைக்கப் போக
மாட்டானாம்
உண்டுகளிக்க
மாட்டானாம்
உறங்கப் படுக்கை
பாய் விரிக்க
மாட்டானாம்!

இனியவனுக்கு
இதுவெல்லாந்
தேவையில்லையாம்!
இனியவன் – தன்
உடலைக் கொண்டு
சுடலைக்குப் போகப்
போகிறானாம்!

நன்றி கெட்ட இந்த
நாய்களுடனிருந்து
தொண்டு செய்து
கெட்டவனாம்

உழைப்பும் பறிப்பும்
ஓட்டமும் பாய்ச்சலும்
தன்னிடம்

மிகுந்தபோது
கூட்டமாய் வந்து – குடி
இருந்தவர்கள்
நான் வாட்டமானதும்
வாலாட்டக்கூட
ஒரு நாய்கூட
இல்லையாம்!

இனித்தான்
நீண்ட நிம்மதி,
நித்திரையாகப்
போகிறானாம்.

**பாண்டியூர் பொன்**
**ஏ.பி.என்.நவநீதன்.**

# நான் இப்படித்தான்.....

என்னை விட நான் பிறரை
நேசிக்கிறேன்
ஆனால் அவர்களின்
குணாதிசயங்களை அறிந்து
பேசிக்கிறேன்........

உப்பிட்டவரை உள்ளவரை
நினைக்கிறேன் எட்டி உதைத்தவரை
உள்ளவரையும் மறக்க மாட்டேன்.....

தட்டிக் கொடுத்தவரை தலை
போனாலும் போசிப்பேன்.......

என்னை நான் மேம்படுத்திக்கொள்ள
முயல்கிறேன் அதை சிதைக்கும்
சிலரை யோசிக்கிறேன்.......

நான் நல்லதே நினைக்கிறேன்
அதனாலே எனக்கு நடப்பவை
எல்லாமே நல்லதாக அமைகிறது........

எனது போக்கு தனியானது தான்
ஆனால் அதன் விளைவுகள்
விருட்சமானது......

வெறி கொண்டு சாதிக்க
துடிக்கும் எனக்கு சதி எல்லாம்
புஸ்வானம் தான்....

அரவணைக்கும் உள்ளங்கள்
ஆசையாய் அழைக்கும் உள்ளங்கள்
மனித இனத்தின் அடையாளம்........

**அபி, கொழும்பு**

# தனிவழிப் பயணம்!



தனியே கிடந்து அழுகின்றேன்
இனிமைக் கனவை அழிக்கின்றேன்
கனியின் சுவையை வெறுக்கின்றேன்
இளமைச் சுகத்தை இழக்கின்றேன்!

நேற்று நிலையாய்க் குடியிருந்தேன்
கசப்பில் உண்மை அறிகின்றேன்
வனிதையர் நட்பை மறுக்கின்றேன்
வறுமையில் உலகைப் படிக்கின்றேன்!

காற்றில் துரும்பாய் மிதக்கின்றேன்
காரணமின்றிக் கிடக்கின்றேன்
வேற்று முகமாய்த் தெரிகின்றேன்
மனித உறவை ஒடிக்கின்றேன்!

காற்றை உயிர்த்துப் பயில்கின்றேன்
ஆற்றுப் போக்காய் நடக்கின்றேன்
விதியை நினைத்து அழுகின்றேன்
மண்ணுடன் ஒன்றாய்த் துடிக்கின்றேன்!

**கல்லொளுவை பாரிஸ்,**
**மல்வானை.**

# பூவும் பூவையும்

பூவுக்கும் பூவைக்கும்
பூக்கின்ற தன்மையுண்டு!
பூவுக்கும் பூவைக்கும்
பூத்த பின் மணமுண்டு!
பூவுக்கும் பூவைக்கும்
பூவிதழில் தேனுண்டு!
பூவுக்கும் பூவைக்கும்
கவர்ச்சி அதிகமுண்டு!
பூவிலே காய் தோன்றும்
பூவையிடம் சேய் தோன்றும்.


**ஸாதிக் பாரிஸ்**
**மல்வானை**

## தூறல்கள்

# தமிழன் தர்பார்

இது எங்க ஏரியா

## இன்டர்வியூ!



இன்டர்வியூ செய்வதில் வழக்கமான வழிமுறைகளை உடைத்து புது வழியில் ஆட்களைத் தெரிவுசெய்வதில் வல்லவர் கம்பெனி முதலாளி. இன்று நடைபெறப்போகும் இன்டர்வியூவில் எப்படி ஆட்களைத் தெரிவுசெய்வார் எனத் தெரிந்துகொள்வதில் ஆவலாக இருந்தனர் கம்பெனியின் தொழிலாளர்கள்.

''காலணிகளை வெளியே விடவும்'' என அலுவலக வாசலில் வைக்கப்பட்டிருந்த பலகைக்கு அருகிலேயே காலணிகளைக் கழற்றி போட்டுவிட்டு உள்ளே நுழைந்தார்கள் இன்டர்வியூவுக்கு வந்தவர்கள். ஒவ்வொருவராக உள்ளே அழைத்து இன்டர்வியூ செய்து அனுப்பிக்கொண்டிருந்தார் முதலாளி.

''என்ன சேர்... ஒருத்தரையும் தெரிவுசெய்யாமல் திருப்பி அனுப்பிட்டீங்க...'' இன்டர்வியூ முடிந்ததும் கேட்டார் மேனேஜர்.

''இனிமேதான் என்னோட தெரிவே இருக்கு. வாசலில் இருக்கிற சிசிடிவி கெமரா காட்சிகளைப் போடுங்க...'' என்றார்.

இன்டர்வியூ முடிந்து எல்லோரும் கிளம்பி விட்ட நிலையில், இவர் இனிதான் என்னோட தெரிவே ஆரம்பமாகப் போகுது என்கிறாரே என்ற குழப்பத்தில் இருந்த மேனேஜரிடம், ''அதோ ஒருத்தர் போறாரே... அவரைத் தெரிவு செய்திடுங்க...” என்றார் முதலாளி.

''எதுக்காக அவரை செலக்ட் பண்ணினீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா சேர்?''

''நாம் காலணிகள்தான் விற்பனை செய்கிறோம். அதனால் நம்ம பிராண்ட் செருப்பை போட்டுக்கிட்டு வந்தா வேலை கிடைக்கும்னு எல்லோரும் வழக்கமா அவங்க உபயோகிக்கிற செருப்பை தவிர்த்துவிட்டு புதுசா நம்ம பிராண்ட் செருப்பை வாங்கி போட்டுக்கிட்டு இன்டர்வியூவுக்கு வந்திருக்காங்க. ஒருத்தர் செருப்பு கூட பழையது இல்லை.
எல்லாம் புதுசு. இந்தப் பாசாங்கு எதுவும் இல்லாம, தன்னுடைய இயல்பிலிருந்து துளியும் மாறாம இவர் மட்டும்தான் வந்தார். அதனால்தான் இவரை செலக்ட் செஞ்சேன்'' என்றார் முதலாளி.

## சின்ன விஷயத்திலும் கவனம்



மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நண்பரைப் பார்க்கச் சென்றிருந்தேன். காலில் கட்டுடன் படுத்திருந்தார். ''என்ன ஆயிற்று?''என்று கேட்டேன்.

“வீட்டில் பப்பாளிப்பழம் நறுக்கி சாப்பிட்டோம். தோல், கொட்டை போன்றவைகளைப் பெருக்கி வெளியே போட்டுவிட்டோம். அப்போது சிறிய துண்டு ஒன்று, டைல்ஸ் தரையில் விழுந்திருக்கிறது. யாரும் அதை கவனிக்கவில்லை. நான் நடந்தபோது தெரியாமல் அந்தப் பப்பாளித் துண்டின் மேல் காலை வைத்துவிட்டேன். வழுக்கி விழுந்து இப்படியாகிவிட்டது'' - என்றார்.

சின்ன விஷயங்களில் கூட கவனமாக இருங்கள். இல்லையென்றால் இதுபோன்ற பிரச்சினைகள் எழத்தான் செய்யும் என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.

## ரசிக ரத்னா பாலையா



திருவிளையாடல் படத்தில் பாலமுரளியின் “ஒரு நாள் போதுமா?" பாட்டை இன்று கேட்கிறபோதும் மெய் மறந்து ரசிக்கலாம். அந்தப் பாடலுக்குத் திரையில் நடிகர் பாலையா மிகத் தத்ரூபமாக வாயசைத்திருப்பார். ஆனால், பலருக்கும் பாலையாவுக்கு அபாரமான சங்கீத ஞானம் உண்டு என்பது தெரியாது. அவரது வீட்டில் ஒரு கிராமபோன் கருவி இருந்தது. அதில், எம்.எஸ்., எம்.எல்.வி., டி.கே.பட்டம்மாள் போன்ற மூத்த கர்நாடக இசைக் கலைஞர்களின் ஏராளமான இசைத்தட்டுகளைப் பொக்கிஷமாக வைத்திருந்தார். ஓய்வுநேரங்களில் அந்தக் கிராமபோனில் இசைத்தட்டுகளைப் போட்டுவிட்டு, இசையில் லயித்துப்போவார்.

பாலையாவுக்கு கர்நாடக இசையில் மட்டுமன்றி, ஹிந்துஸ்தானி இசையிலும் ஈடுபாடு உண்டு. அவர், பீம்சேன் ஜோஷியின் பரம ரசிகர். அவரைப்போலவே சில பாட்டுகளை நெருங்கிய நண்பர்கள் மத்தியில் பாடிக்காட்டுவார். அது மட்டுமல்லாமல், அந்தக் காலத்து வித்வான்கள் பலர் பாலையாவின் நண்பர்கள். அவர்கள், நேரம் கிடைக்கும்போது பாலையாவின் வீட்டுக்கு வந்து அவருடன் அளவளாவிக்கொண்டு இருந்துவிட்டுப் போவார்கள். இன்னொரு தகவல்: பாலையாவுக்கு நன்றாக கஞ்சிரா வாசிக்கத் தெரியும்.

## பாடமாட்டேன் போ!



சென்னையின் புறநகர்ப் பகுதியாக இருந்த தாம்பரம் சானடோரியத்தில் வசித்தவர்கள் ஒரு பிள்ளையார் கோயிலைக் கட்டி, கும்பாபிஷேகம் செய்தார்கள். அந்தக் கோயிலில் பிரபல வித்வான் மகாராஜபுரம் விஸ்வநாத ஐயருடைய கச்சேரியை ஏற்பாடுசெய்ய விரும்பினார்கள். அவரை அணுகி, வேண்டுகோள் விடுக்க, அவரும் கச்சேரிக்கு ஒப்புக்கொண்டு, திகதி கொடுத்தார்.

வந்தவர்கள், “கஷ்டப்பட்டு, நன்கொடை வாங்கி ஒரு வழியாக இப்போதுதான் கும்பாபிஷேகம் செய்து முடித்திருக்கிறோம். தங்கள் கச்சேரிக்கு சன்மானம் கொடுக்கும் வசதி இல்லை" என்று தயங்கியபடியே சொல்ல, விஸ்வநாத ஐயர், “அட போமய்யா... இதுதானா விஷயம்? கவலைப்படாதேயும்... நான் வந்து சேந்துடறேன்" என்று சொல்லி விட்டார். வந்தவர்கள் மகிழ்ச்சியோடு புறப்பட்டுச் சென்றார்கள்.

மறுநாளே பம்பாயிலிருந்து வந்த சிலர் விஸ்வநாத ஐயரிடம் “அண்ணா! உங்களைக் கேக்காமலேயே நாங்க உங்க கச்சேரி நடக்கப் போறதா விளம்பரம் பண்ணிவிட்டோம். நீங்க இந்தத் திகதியில் அவசியம் வந்து கச்சேரி பண்ணணும்" என்றனர். “அந்தத் திகதியில் சானடோரியம் பிள்ளையார் கோயில் கச்சேரி உள்ளதால் முடியாது; வேறு திகதியில் வைத்துக்கொள்ளுங்கள்" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார் விஸ்வநாத ஐயர். வந்தவர்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்தினார்கள். ஒருவர் சட்டென்று, “அண்ணா.... உங்கள் சன்மானத்தை ரெண்டு மடங்காகத் தருகிறோம்! வாருங்கள்" என்றார். அவ்வளவுதான்! விஸ்வநாத ஐயர் “படவா... என் பாட்டை நீ காசு கொடுத்து வாங்கி விடுவாயாடா. கோடி குடுத்தாலும் பாடமாட்டேன் போ... நான் இப்போ சானடோரியத்துக்குப் பாடப் போற கச்சேரியில் எனக்கு என்ன கிடைக்கும் தெரியுமா? தேங்காய் மூடிதான்! பணமாடா பெரிசு? கொடுத்த வாக்கை பணத்துக்காக மாற்றுகிறவன்னா என்னை நினைச்சே? போ வெளியிலே..." என்று சீறினார். வந்தவர்கள் மிரண்டு போனார்கள். மகாராஜபுரம், விஸ்வநாத ஐயர் மகாவித்வான் மட்டுமல்ல.... ஆ மகாமனிதனும் கூட.

## நல்ல ஐடியா!



நண்பர் ஒருவர் ஏழெட்டு பைல்கள் வாங்கி வைத்திருந்தார். ''எதற்கு இதெல்லாம்?'' எனக் கேட்டேன்.

“திடீரென்று ஏதேனும் ரசீது தேவைப்பட்டால் எல்லாவற்றையும் அள்ளிப் போட்டு தேட வேண்டியதாக இருக்கிறது. இன்சூரன்ஸ் ரசீது, வீட்டுவரி ரசீது, வரி தாக்கல் செய்த ரசீது என்று ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக பைல் போடப் போகிறேன். இப்படி வைத்தால் தேவையானதை உடனே எடுத்துக்கொள்ளலாம். டென்ஷனும் இருக்காது. நேரமும் விரயமாகாது" என்றார்.

நண்பர் செயல் மிகவும் பயனுள்ள தென உணர்ந்த நானும் பைல் செய்யும் பழக்கத்தை மேற்கொண்டுவிட்டேன்.

## குழந்தைகள் பார்சல் சர்வீஸ்



ஒரு கிலோவுக்கு ரூ.1 என்ற விளம்பரத்தைப் பார்த்து, குழந்தைகளை மூடையாகக் கட்டி கூரியர் சர்வீஸ்சில் அனுப்பும் வடிவேலு பட நகைச்சுவையை மறந்திருக்க முடியாது. அப்படி ஒரு சம்பவம். அமெரிக்காவில் நடந்திருக்கிறது. இப்போதல்ல... 1913இல்.

அமெரிக்க தபால் துறையில், 1913ஆம் ஆண்டு பார்சல் சேவை தொடங்கப்பட்டது. முதன் முதலாக நியூஜெர்சி கவர்னருக்கு அப்பிள் பார்சல் அனுப்பப்பட்டது. தபாலில் என்னென்ன பொருட்களை அனுப்பலாம், எவற்றை அனுப்பக்கூடாது என்பது போன்ற எந்த விதிமுறைகளும் அப்போது வரையறுக்கப்படவில்லை. இதனால் மக்கள் தங்களுக்குப் பிடித்தப் பொருட்களை உறவினர்களுக்குப் பார்சல்கள் அனுப்பினர். சிலர் செல்லப்பிராணிகளையும் நண்பர்களை மிரட்ட பாம்புகளையும் கூட பார்சல் கட்டி தபாலில் அனுப்பினர்.

இந்தக் களேபரங்களுக்கு மத்தியில் அமெரிக்காவின் ஓஹியோ நகரைச் சேர்ந்த தம்பதி, தமது மகனை ஒன்றரை கி.மீ. தூரத்தில் இருக்கும் பாட்டி வீட்டுக்கு தபால் பார்சலில் அனுப்பிவைத்தனர். இப்படி தபாலில் அனுப்பப்படும் குழந்தைகளுக்கான ஸ்டாம்ப் தொகை மற்றும் காப்பீடு தொகையைப் பெற்றோர்கள் கட்ட வேண்டும். தபால்காரர் அந்தக் குழந்தையை தன்னுடன் அழைத்துச் சென்று, சேர்க்க வேண்டிய முகவரியில் பத்திரமாகச் சேர்த்துவிடுவார். பயணத்தின் நடுவே குழந்தை பசியெடுத்து அழுதால், பால் வாங்கிக்கொடுத்து சமாதானம் செய்வதும் அவரின் வேலை.

இந்தத் தகவல் அமெரிக்கா முழுவதும் பரவியது. விடுமுறை நாட்களில் தங்கள் குழந்தைகளை தாத்தா, பாட்டி வீட்டுக்குத் தபால் பார்சல் மூலம் அனுப்ப ஆரம்பித்தனர் மக்கள்.

பஸ், ரயில் கட்டணத்தை விட, ஸ்டாம்ப் கட்டணம் மிகக் குறைவு என்பதால், குழந்தைகளை தபால் பார்சலில் அனுப்புவது பிரபலமடைந்தது. அதோடு, நம்பிக்கைக்குரிய அமெரிக்க தபால்துறை குழந்தைகளைப் பத்திரமாக பார்த்துக்கொள்ளும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருந்தது.

1914ஆம் ஆண்டு குழந்தைகளை தபால் பார்சலில் அனுப்பும் நடைமுறையை தடைசெய்தது அமெரிக்க தபால்துறை. ஆனாலும், மக்கள் அந்தத் தடையுத்தரவை கண்டுகொள்ளவில்லை. 1915ஆம் ஆண்டு புளோரிடாவிலிருந்து வேர்ஜீனியாவுக்கு 1158 கி.மீ. தூரத்துக்கு ஒரு பெண் குழந்தை தபால் பார்சலில் அனுப்பப்பட்டது. இச்சம்பவம், உயிருள்ள நபர் மேற்கொண்ட மிக நீண்ட தபால் பயணமாக வரலாற்றில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஒருவழியாக 1915ஆம் ஆண்டு இறுதியில் குழந்தைகளை தபாலில் அனுப்புவது முற்றிலும் தடைசெய்யப்பட்டது.

# தமிழக ஆளுநர் ரவி வந்தார்; சென்றார்: மூன்றாவது ஆண்டாகத் தொடர்கிறது புறக்கணிப்பு!

ரமணி

தமிழக சட்டசபையின் 2025ஆம் ஆண்டுக்கான முதலாவது கூட்டத் தொடர் ஆரம்பமாகும் திகதி அறிவிக்கப்பட்டபோதே பூகம்பம் வெடிக்குமென்ற எதிர்பார்ப்பு நிலவியது.

தமிழக முதல்வராக ஸ்டாலின் பொறுப்பேற்ற முதல் இரண்டு கூட்டத்தொடர்களிலும் பெரும் பிரளயம் வெடித்தது. அதற்குச் சற்றும் குறையாத சம்பவம் இந்த ஆண்டும் நடைபெற்றது.

முதல் கூட்டத்தொடரில் மாநில சட்டசபையின் சாதனைகள் பட்டியலிடப்படும். தன் முழு அறிக்கையும் முதலிலேயே ஆளுநரிடம் கொடுக்கப்பட்டு ஒப்புதல் பெறப்படும். அந்த அறிக்கையை மாற்றாமல் வாசிப்பதுதான் ஆளுநரின் கடமை. ஆனால், தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, கடந்த தடவை தமிழக அரசின் சாதனைகளை வாசிக்கவில்லை. மத்திய அரசின் மீதான குற்றச்சாட்டுகளைத் தவிர்த்து தனது கருத்துகளைப் புகுத்தினார். உடனடியாக அன்று ஸ்டாலின் செயற்பட்டு ஆளுநரின் உரையை சபைக் குறிப்பிலிருந்து நீக்கத் தீர்மானம் கொண்டுவந்தார். அதனால், அன்று ஆளுநர் தெறித்து ஓடினார்.

2025ஆம் ஆண்டுக்கான முதல் சட்டமன்ற கூட்டத்தொடர் ஆளுநர் உரையுடன் தொடங்குமென அறிவித்திருந்த நிலையில், கூட்டம் தொடங்கியதுமே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அமளியில் இறங்கினர். இந்நிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவியும் ஆளுநர் உரையை வாசிக்காமலேயே வெளியேறிச் சென்றார்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு வருடமும் சட்டப்பேரவை கூட்டத்தொடர் தமிழக ஆளுநர் உரையுடன்தான் தொடங்குவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு முதல் சட்டப்பேரவை கூட்டத்தொடர் காலை 9.30 மணிக்குத் தொடங்கியது. இதற்காக சட்டசபைக்கு வருகை தந்த ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு தலைமை செயலகத்தில் காவல்துறை மரியாதை வழங்கப்பட்டது. அதன் பிறகு அவரை பொன்னாடை போர்த்தி வரவேற்ற சபாநாயகர் அப்பாவு, சட்டப்பேரவை வளாகத்துக்குள் அழைத்துச் சென்றார்.

அதன்பின்னர் கூட்டத்தொடர் தொடங்கியது. சட்டசபை மரபுப்படி முதலில் தமிழ்த் தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. இதையடுத்து ஆளுநர் உரையை வாசிக்காமலேயே ஆளுநர் ஆர்.என். வெளியேறினார். தேசிய கீதம் பாடாததால் வெளியேறியதாக ஆளுநர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆளுநரை வரவேற்கும்போது தேசிய கீதம் இசைக்கப்படும். கூட்டத்தொடர் ஆரம்பமாகும்போது தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும். கூட்டம் முடியும்போது தேசிய கீதம் இசைக்கப்படும். இதுதான் தமிழக சட்டசபையின் மரபு. இந்த மரபுபற்றி ஆளுநருக்குத் தெரியும். ஆனாலும் அதனை மீறும்படி ஆளுநர் கூறியதை தமிழக அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.



அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமைக்கு எதிராக அ.தி.மு.கவினர் முழக்கமிட்டனர். பதாகைகளை ஏந்தியபடி அவர்கள் கோஷமிட்டதால் சபையில் பெரும் அமளியாக இருந்தது.

இதையடுத்து அவர்களை வெளியேற்றுமாறு அவைக் காவலர்களுக்கு சபாநாயகர் அப்பாவு உத்தரவிட்டார். அதன்பின்னர் அ.தி.மு.கவினர் வெளியேறினர். இதைத் தொடர்ந்து ஆளுநர் உரையின் தமிழாக்கத்தை சபாநாயகர் அப்பாவு வாசித்தார்.

தொடர்ச்சியாக 3ஆவது ஆண்டாக ஆளுநர் உரை தொடர்பான சர்ச்சை நீடிப்பது சலசலப்பையும் விவாதத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆளுநர் ஆர்.என்.ரவிக்கும் தி.மு.க. அரசுக்குமிடையே தொடர்ந்து பூசல் நிலவி வருகிறது. அவ்வப்போது அடங்குவதுபோல தெரிந்தாலும் கூட, வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் இது பெரிதாக வெடித்துச் சிதறுகிறது. குறிப்பாக, ஆளுநர் உரை தொடர்பாக கடந்த 3 வருடங்களாக சர்ச்சை நிலவி வருகிறது. கடந்த 2023ஆம் ஆண்டு முதல் முறையாக பெரிய சர்ச்சை வெடித்தது.

2023ஆம் ஆண்டு ஜனவரி 09ஆம் திகதி சட்டசபை கூடியது. ஆண்டின் முதல் கூட்டம் என்பதால் ஆளுநர் உரையுடன் கூட்டம் தொடங்குவதாகத் திட்டம். ஆளுநர் ஆர்.என்.ரவியும் சட்டசபைக்கு வந்தார். ஆளுநர் உரையை வாசிக்க ஆரம்பித்த அவர், அதில் இடம்பெற்றிருந்த சில வரிகளைத் தவிர்த்துவிட்டு வாசித்தார். மேலும், புதிதாக சில வாசகங்களையும் அவர் சேர்த்துப் படித்தார்.

அதன் பின்னர் எழுந்த முதல்வர் மு.க.ஸ்டாலின், அரசு தயாரித்துக் கொடுத்த உரையை ஆளுநர் முழுமையாகப் படிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டினார். மேலும் ஆளுநர், அவராக சேர்த்து வாசித்த வாசகங்கள் அவைக்குறிப்பில் இடம்பெறாது என்று தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்தத் தீர்மானம் வாசிக்கப்பட்டபோது ஆளுநர் ஆர்.என்.ரவி அவையிலிருந்து வெளியேறிச் சென்றார்.

இதைத் தொடர்ந்து 2024ஆம் ஆண்டு பெப்ரவரி 12ஆம் திகதி சட்டசபை ஆளுநர் உரையுடன் தொடங்கியது. வழக்கம்போல கூட்டத்தொடர் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கியபோது, முதலில் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும். அதன் பிறகே தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட வேண்டும் என்ற தனது கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்றார். மேலும் ஆளுநர், உரையில் இடம்பெற்றுள்ள சில பகுதிகளை தன்னால் ஏற்க முடியாதென்று கூறி உரையை வாசிக்க மறுத்து அமர்ந்துவிட்டார். இதையடுத்து சபாநாயகர் அப்பாவு உரையை வாசித்தார்.


அதன் பின்னர் ஆளுநரின் செயற்பாடு குறித்து அப்பாவு சில கருத்துகளைக் கூறினார். அவர் சொல்லி முடித்த அடுத்த நிமிடமே ஆளுநர் அவையிலிருந்து வெளியேறினார். அவர் வெளியேறிய பின்னர் ஆளுநர் உரை சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டபடியே அவைக் குறிப்பில் பதிவேற வேண்டும் என்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இந்த ஆண்டும் தமிழ்த் தாய் வாழ்த்து முதலில் பாடப்பட்டதால் அதிருப்தி அடைந்து ஆளுநர் வெளியேறியுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த் தாய் வாழ்த்து மீது அதிக மரியாதை வைத்துள்ளேன். அதை அனைத்து தளங்களிலும் உரிய மரியாதையுடன் பாடியுள்ளேன். அதை அவமதிக்கும் எண்ணம் ஒருபோதும் இருந்ததில்லை என்று தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி கூறியுள்ளார்.

தமிழ்த்தாய் வாழ்த்துக்கு மரியாதை கொடுக்காத ஆளுநரை உடனடியாக மாற்ற வேண்டுமென தமிழகத்தின் பல தலைவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். ஆளுநரின் மூலம் தமிழக அரசுக்குக் குடைச்சல் கொடுக்க வேண்டுமென்று மோடி அரசு விரும்புகிறது. அதனை ஆளுநர் ரவி கனகச்சிதமாகச் செயற்படுத்துகிறார். ஆகையால் அவரை இப்போதைக்கு அசைக்க முடியாது.

# பேசவேண்டியவை மூடியே கிடக்கின்றன



– ஷாமிலா ஷெரீப்

நினைவு 26

அனைத்து விதமான தொழில்களிலிருந்து ஆசிரியத் தொழில் வேறுபட்டது. நாம் கோழிக் குஞ்சுகளை வாங்கி விற்பனை செய்கின்ற நபர் என வைத்துக் கொள்வோம். உயிர்களுடன் மேற்கொள்ளப் படும் இந்தத் தொழிலில் குஞ்சு செத்துவிடாமல் நேரத்துக்குள் உரிய இடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட வேண்டும் என்ற பதற்றம் இருக்கும். கோழிக்குஞ்சு விற்பனை செய்யும் நபரைச் சந்திக்க நேரிட்டது. அத்தொழிலில் அவர் காட்டும் நேர்த்தியும் அர்ப்பணிப்பும் தியாகமும் ஆசிரியர் தொழிலில் இருக்கிறதா என என்னை ஒரு முறை சுய பரிசீலனை செய்தேன்.

ஆசிரியர் என்பவர் கல்வி கற்றுக் கொடுப்பவர் என்பதுடன், மாணவர்களுக்கு அறிவு, திறன், நல்லொழுக்கத்தைப் பெற உதவுபவர் எனக் கூறலாம்.

ஒரு வினைத்திறனுடைய ஆசிரியர் மாணவரின் தேவைகளைக் கவனிப்பவராகவும் மாணவர்கள் பிரச்சினைக்கு உள்ளாகும்போது அவர்களை நன்கு புரிந்துகொண்டு செயற்படுபவராகவும் விளங்க வேண்டும். வகுப்பறையிலே மாணவர்கள் வெறுமனே கற்பவர்கள் என்ற கருத்துடனன்றி அவர்கள் கற்பதற்கு ஏற்றவகையிலான உதவிகளை வழங்கக்கூடிய தொடர்புகளைப் பேணுபவர்களாகவும் விளங்குதல் ஆசிரியர் – மாணவர் உறவை சிறக்கச் செய்யும்.

என்னுடைய அனுபவத்தில் மாணவர்களை மந்தைகளாக நினைக்கும் ஆசிரியர்களையும் சந்தித்திருக்கிறேன். ஒருமுறை பாடசாலை முடிவடைந்ததும் அதிபர் அலுவலகத்துக்கு செல்கிறேன். அங்கு ஒரு மாணவன் இருந்தபடி மேசையில் உறங்க வைக்கப்பட்டிருந்தான். முதுகில் பூராண்கள் கிடப்பதுபோல கிடந்தன. சட்டென தட்டி விடலாமென போனபோது அவை பூராண்கள் அல்ல ஆசிரியரின் கைவரிசைகள் என்றார் பிரதி அதிபர். மாணவனுக்கு சிகிச்சையளித்து மாலை நேரத்தில் வீட்டுக்கு அனுப்பப்பட்டான். அதுவரை பெற்றோர் காத்திருந்தனர். இப்படி அடிக்கடி நிகழுமாம். குறித்த ஆசிரியர் ஓய்வுபெற ஓரிரு வருடங்கள்தான் இருக்கு. திருமணமாகாதவர் என்பதனால் பிள்ளைகள் மீது அன்பு இல்லை விட்டுவிடலாம் எனக்கூறினர்.

ஆனாலும் அதே பாடசாலையில் திருமணமாகாத வயதுபோன பல ஆசிரியர்கள் இருக்கவே செய்தனர். அனைவரும் மாணவர்கள் மீது மிகுந்த அன்பு வழிகாட்டுவர். மாணவர்களை வழிகாட்ட திருமணம் முடித்து குழந்தை பெற வேண்டுமா என்ன? மனிதம் செத்துவிட்டது.

அடித்தாலும் பரவாயில்லை, அன்பாக நடந்துகொள்ள வேண்டுமென்றே மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர். பொதுவாக ஆண் மாணவர்கள் தங்களுடைய தாயைப் போன்று ஆசிரியரை நினைப்பதும் சில வேளைகளில் பெற்றோரிடம் சொல்லாத விடயங்களை ஆசிரியருடன் கதைப்பதற்கும் விரும்புவர்.

நான் கல்லூரியில் இருந்தபோது ஆசிரிய பயிற்சிக்காக பலப்பிட்டி, வெலிதர முஸ்லிம் வித்தியாலயத்தில் இரண்டு வாரங்கள் ஆசிரியர் பயிற்சி மேற்கொண்டிருந்தேன்.

பயிற்சி முடிந்து மாணவர்களிடம் விடைபெற்று பேருந்தில் ஏற முயற்சிக்கின்றபோது பாதையிலே வந்த பேருந்தை நிறுத்தி ஏற முற்படும்போது வேகமாக ஓடிவந்த மாணவர் ஜன்னல் வழியே லெமன் பஃப் பிஸ்கட் ஒன்றைக் கொடுத்தார். அவர் ஆசிரியர் மீது கொண்டிருந்த அன்பை அங்குள்ள அனைவரும் வியந்து பார்த்தனர்.

அந்தப் பாடசாலையிலிருந்து நான் விடைபெற்று வந்தாலும் அக்காட்சி இன்னும் என் கண்ணை விட்டு அகலவில்லை. மாணவர்கள் ஆசிரியர்களை நேசிக்கின்ற விதம் ஆளுக்கு ஆள் வேறுபட்டது.

எனது முதல் நியமன பாடசாலை அது. மாணவர்களுடன் மிகுந்த அன்பாக நடந்துகொண்டாலும் தொடர்ச்சியாக என்னால் அங்கே இருக்க முடியவில்லை. இடமாற்றம் பெற்று கொழும்புக்கு வந்துவிட்டேன். அந்த மாணவர்கள் குறித்து நான் சிறிதும் யோசிக்கவில்லை. 13 வருடங்களின் பின்னரே எனக்கு சம்பவம் கேள்விப்பட்டது. அதுவும் முகநூல் மெசஞ்சர் ஊடாக குறித்த மாணவனே எழுதியிருந்தார்.

கொரோனாவின்போது ஜனாஸாக்களை எரித்தபோது நான் ஒரு காணொளி வெளியிட்டிருந்தேன். அந்தக் காணொளியைப் பார்த்து அந்த மாணவன் என்னுடைய முகநூல் மெசேஜ்க்கு இவ்வாறு எழுதியிருந்தார்.

நீங்கள் 2007ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி பாடசாலையை விட்டு சென்றுள்ளீர்கள். அன்று நான் விடுமுறை. அடுத்த நாள் பாடசாலை வந்தபோது நீங்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டதாக சக மாணவர்கள் குறிப்பிட்டனர். எனது தாய் மரணித்ததன் பின்னர் நான் உங்களை தாயாகக் கருதினேன். நீங்கள் பாடசாலையில் இருந்த ஏழு மாதங்கள்தான் நான் சந்தோஷமாக இருந்த காலப்பகுதி. என்னை விட்டுச் சென்றுவிடுவீர்கள் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் பாடசாலை வந்த நாள் முதலில் எங்களுடன் மிகவும் அன்பாக நடந்துகொண்டீர்கள். ஏழை, பணக்காரன் வித்தியாசமின்றி எல்லோரையும் சரிசமமாகப் பார்த்தீர்கள். எனக்கு புதிய உம்மா கிடைத்துவிட்டதாக நான் கருதினேன். நீங்கள் இல்லாத நாளை என்னால் நினைத்துப் பார்க்க முடியாது மிகுந்த கஷ்டப்பட்டு நாட்களைக் கடத்தினேன். சாதாரண தரம் வரை கற்றுவிட்டு தற்பொழுது நான் தென்னாபிரிக்காவில் வசித்து வருகிறேன். எதேச்சையாக உங்களுடைய காணொளியின் ஊடாக முகநூல் பக்கத்தை தொடர்புகொள்ள முடிந்தது – என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

வாசித்து முடித்த பின் மனது கனத்துப் போனது!

தொடர்வாள்...

# ஏஐயிடம் சொல்ல– கேட்கக்கூடாத விடயங்கள்

செயற்கை நுண்ணறிவு என்ற பெயரில் உலகம் முழுவதையும் ஒற்றை வார்த்தையில் கட்டிப்போட்டிருக்கும் 'ஏஐ' எனப்படும் செய்யறிவு உண்மையில் வரமா, சாபமா என்ற கேள்விக்கு விடை தெரியாமல் உலகம் ஓடிக்கொண்டிருக்கும் நிலையில், எதற்கெடுத்தாலும் ஏதேனும் ஒரு சாட் ஜிபிடி போன்ற 'ஏஐ' உதவியை நாடுபவர்களின் கவனத்துக்கு...

ஒரு பக்கம் 'ஏஐ' என்ற தொழில்நுட்பம் வளர்ந்துகொண்டிருந்தாலும் மறுபக்கம் தொழில்நுட்பத்தின் பல வேலைகள் மறைந்துகொண்டே போகின்றன. இதனால், தொழில்நுட்பத் துறையில் பணிவாய்ப்பு பறிபோகிறதெனக் கதறும் குரல்களும் கேட்கத்தான் செய்கின்றன.

நாட்டின் தகவல் தொழில்நுட்பத் துறை 'ஏஐ' மூலம் பன்மடங்கு மேம்படுத்தப்படும் நிலையில், இதனால் மோசடிகளும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன.

இதைச் செய்யலாமா, எப்படிச் செய்ய வேண்டும், எப்படிச் சொல்ல வேண்டும் என பல விடயங்களை 'ஏஐ' யிடம் கேட்கலாம். ஆனால், ஒருபோதும் இந்த ஆறு விடயங்களை மட்டும் நாம் 'ஏஐ'யிடம் சொல்லிவிடக் கூடாதாம். என்னவாக இருக்கும்?


**தனிப்பட்ட விவரங்கள்தான்!**

சாட் பாட்டிடம் ஒருவர் தகவல்களைக் கோரும்போது எந்தக் காரணத்தைக் கொண்டும் கேட்பவர் தனது பெயர், முகவரி, செல்போன் எண், மின்னஞ்சல் முகவரி போன்றவற்றைக் கொடுக்கக் கூடாது. இதனால், ஏதேனும் ஒரு வழியில் அவரது அடையாளம் பின்தொடரப்படும்.

**பொருளாதாரம் தொடர்பான விவரங்கள்**

வங்கிக் கணக்கு எண், கிரெடிட் கார்டு எண், ஆதார் எண் போன்றவற்றை எப்போதும் 'ஏஐ' செயலிகளில் பகிர வேண்டாம்.

மின்னஞ்சல்



அனுப்பவேண்டுமென்று தகவல் கோரும்போதும் போலியான எண்களைப் பதிவிட்டுக் கேட்கலாம். இது வழக்கமானதுதான்.

**கடவுச்சொல்**

எந்தக் காரணத்தைக்கொண்டும் இப்படி கடவுச்சொல் (பாஸ்வேர்ட்) வைக்கலாமா என்று கூட செயற்கை நுண்ணறிவிடம் கேட்கக்கூடாது.

**இரகசியத்தைக் கூடவா?**

ஒருவருக்கு மட்டுமே தெரிந்த அல்லது வேறு யாருக்கும் தெரியக்கூடாதென நினைக்கும் இரகசியத்தை சாட் பாட் செயலிகளிடம் பகிரக்கூடாது. அது என்ன மனிதனா என்றால், இல்லைதான். ஆனால், அது நீங்கள் சொல்லும் தகவல்களை இரகசியமாக வைத்துக்கொள்ளாத இயந்திரம்.

**கடைசியாக..**

நாம் சொல்வது, கேட்பது என அனைத்தும் சாட் பாட் செயலியில் சேமிக்கப்படலாம். அதன் மூலம் அதன் தரத்தைக் கூட்டுவதற்கு என்று கூறப்படலாம். எனவே, நாம் சொல்வது, கேட்பது சேமிக்கப்படத்தக்கது அல்ல என்று கருதினால் அதை கேட்காமல், சொல்லாமல் தவிர்ப்பதே நன்று.

# பிரிவின் துயரம்

தமிழன் சிறுகதை

சித்திரன்



நான் பிறந்து வளர்ந்த அந்தத் தோட்டத்தில் 180 பேர் இருந்தோம். எனது தந்தையும் அதே தோட்டத்தில் பிறந்தவர். அம்மன் கோயில் உண்டு. வீட்டுக்குப் பக்கத்திலேயே தேயிலைத் தொழிற்சாலை. அதன் பக்கத்திலேயே தோட்டத் துரையின் பங்களா, கணக்குகள் பார்க்கும் ஆபீஸ். தோட்ட உத்தியோகத்தர்கள் 20 குடும்பம்.

இவர்கள் இருந்த தோட்டத்தில் தோட்ட வைத்தியசாலை, தோட்ட கடை. இப்படி அனைத்தும் அருகே இருந்தன. இரவு 7 மணிக்கு தோட்டத்தில் நகரத்தில் இருப்பதுபோன்று உயரமான தூண்களில் மின்சார விளக்குகள். இரவில் கடைக்குப் போக வேண்டுமா, தொழிற்சாலைக்குப் போக வேண்டுமா. வேறு வெளிச்சம் தேவையில்லை. அந்த மின்சார விளக்கு வெளிச்சம் போதும். தோட்டத்தில் தெய்வ வழிபாடுகள், திருவிழா, காமன்கூத்து ஸ்டோர்சாமி வருடம் ஒருமுறை, மற்றது திருமணம், பூப்புனித நீராட்டு விழா. மனித வாழ்வில் நாம் எப்படி வாழ்ந்தோம் என்பதையும் ஆடி அடங்கும் வாழ்க்கையடா என்பதையும் வாழ்பவருக்கு ஞாபகப்படுத்தும்.

ஜாதி, பேதம் பார்க்காமல் பெரும்பான்மை மக்களும் நாங்களும் ஒரு குடும்பம்போல் வாழ்ந்தோம். எனக்கு திருமணம் முடித்து மகனும் பிறந்தான். அவனுக்கும் 2 வயதானது. அப்போதுதான் வந்தது. அந்த இடி விழுந்த மாதிரி ஒரு செய்தி.

புதிய அபிவிருத்தித் திட்டம் என்ற மகாவலி நீர்த்தேக்கம். தோட்டத் துரை, தலைவர்மார் எல்லோரையும் கூப்பிட்டு, குறிப்பிட்ட திகதியில் நீங்கள் எல்லோரும் வேறு தோட்டத்துக்குப் போக வேண்டுமென்று ஜனவசத்திலிருந்து உங்களை அனுப்பச் சொல்லி கடிதம் வந்திருப்பதாக சொன்னார். படிக்கும்போதே எல்லோரும் கலங்கிவிட்டனர். அந்தக் கவலையுடன்தான் வீட்டுக்கு வந்தோம்.

ஒரு தோட்டத்துக்கு 10 குடும்பம் என்றுதான் இடம் கிடைக்கும். எல்லோரும் ஒரே இடத்தில் கிடைக்காது என்று தோட்டத் துரை கூறிவிட்டார். அடுத்தநாள் ஆண்களும் பெண்களும் வேலைக்குப் போனவர்கள் அழுகையுடன்தான் வீடு வந்தார்கள். அன்று முதல் தோட்டத்தின் சந்தோஷம் போய்விட்டது.

இன்று எனக்கு சிறு வயது சம்பவங்கள் சில ஞாபகத்துக்கு வந்தன. எனக்கு 10 வயது இருக்கும். நாங்கள் இருந்த லயத்தில் மொத்தம் 7 வீடுகள், 6 வீடுகள் என்று இருந்தன. நடுவில் பெரிய மைதானம்போல் இடம். எங்கள் வீட்டுக்கு இரு பக்கமும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் 5 பேர். திருமணம் முடித்து வேறு வேறாக இருந்தார்கள். சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தப்படி இந்தியா போகவேண்டிய நிர்ப்பந்தம். போகவேண்டிய நாளும் வந்தது.

பெரிய பெட்டி செய்து அதில் வீட்டுச் சாமான் எல்லாம் போட்டு திறக்க முடியாமல் மூடி பூட்டி விட்டு தோட்ட லொறியில் ஏற்றி விடுவார்கள். ஏற்றி முதல் நாள் அனுப்பிவிட்டு மறுநாள்தான் இவர்கள் போவார்கள். உடன் பிறந்தவர்களைப் பிரிந்து போக முடியாமல் அவர்கள் அழும் விதம் எனக்கு இப்போது ஞாபகம் வந்தது.

அது 25 வருடங்கள் கழித்து இன்று அதே நிலைமையா என்று எண்ணும்போது எதற்கும் கலங்காத நானும் அழுது விட்டேன். சில மாதங்கள் உருண்டோடி விட்டன. சிலர் வேறு தோட்டம் பார்க்க துரையிடம் கடிதம் பெற்றுக்கொண்டு போனார்கள். எனக்கு ஒரே பயம். உறவினர்களைப் பார்க்க வேறு தோட்டம் போயிருக்கிறேன். ஒரு நாளைக்கு மேல் அங்கு தங்கியிருக்கவில்லை. அங்குள்ளவர்களின் குணம், பழக்கம் ஏதும் நமக்குத் தெரியாது என்ற பயம்தான்.

ஆனால், தோட்டம் பார்க்கப் போன சிலர் வந்தார்கள் சிரித்த முகத்துடன். 15 குடும்பங்கள் முதன் முதலாக தோட்டம் விட்டு போக முடியும். போனவர்கள் சில நாட்களில் திரும்பி வந்தார்கள். மிகுதி பேர் புதிய தோட்டத்தில் பெயர் பதிய, கடிதம் வாங்க. அப்போதுதான் அவர்களின் கவலை தெரிந்தது.

''இங்க மாதிரி இல்லை. அவர்களிடம் நல்லா பழகவும் எம்மை அவர்கள் புரிந்துகொள்ளவும் தெரியவில்லை. என்ன செய்ய'' என்று மிக மன வேதனையுடன் சொன்னார்கள். அடுத்து ஒரு வாரத்தில் 10 குடும்பத்தவர்களுக்கு துரை கடிதம் கொடுக்கச் சொன்னார். ''குறிப்பிட்ட தோட்டத்தில் கொண்டுபோய் துரையிடம் கொடுங்கள். உங்களுக்கு வீடு காட்டுவார்'' என்றார்.

நானும் மற்ற 9 குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் போனோம். நுவரெலியா மாவட்டத்திலேயே ஒரு தோட்டத்திலே பார்த்தோம். வீடுகளைப் பார்த்துவிட்டு திரும்பவும் தோட்ட ஆபீஸ் வரும்போது துரை போய்விட்டார்.

''நாளை காலை 10 மணிக்குத்தான் வருவார். நாளை வாருங்கள்'' என்று பெரிய கிளார்க் சொன்னார்.

நான், ''சேர் எங்களுக்கு இங்கு யாரையும் தெரியாது. தங்கும் வசதியும் இல்லை'' என்றேன்.

''நான் என்ன செய்ய. துரை இல்லாமல் நான் முடிவு சொல்ல முடியாது'' என்று கூறிவிட்டார்.

என்னுடன் வந்தவர்கள், ''பரவாயில்லை நீ மட்டும் இருந்து பேசிட்டு வா. நாங்கள் போறோம்'' என்றார்கள்.

நானும் அங்கு ஒரு வீட்டில் தங்கினேன். அந்த வீட்டிலுள்ளவர்கள் என்னை அவர்களில் ஒருவனாக நினைத்து நன்றாகப் பழகினார்கள்.

''நான் உங்களை ஆபிஸில் பார்த்தேன். எங்கிருந்து வந்தீர்கள்? எதற்கு வந்தீர்கள்?'' என்று விசாரித்தார்கள்.

நானும் எல்லா விபரமும் சொன்னேன். அவர் கேட்டார், ''உங்களுக்கு இங்கு வர விருப்பமா? என்று.

நான், ''நாளை வீட்டுக்குப் போய் அவர்களிடம் சொல்லி அவர்களின் விருப்பமும் கேட்க வேண்டும்'' என்றேன்.

அவர்கள், ''எதற்கும் பயப்படத் தேவையில்லை. இங்குள்ளவர்கள் நல்லவர்கள்தான். நாங்களும் தோட்ட மக்கள்தானே. ஒரே இனம்தானே. வாருங்கள்'' என்றார்கள்.

எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அப்படி ஒரு சந்தோஷம். புதிய மக்கள், புதிய இடம். இதற்கு முன்னர் இவர்களைக் கண்டதில்லை, பேசியதில்லை. இருந்தும் நம்முடன் எப்படி. இதுதான் தோட்டத் தொழிலாளர்களின் குணம். தம்மிடம் பணம் சொத்து இல்லாவிட்டாலும் வீட்டுக்கு வந்தவர்களைக் கவனிக்கும் பண்பு, தமிழ்ப் பண்பாடு. எனக்கு புதியதொரு சொந்தம் கிடைத்ததாகவே நினைத்தேன்.

மறுநாள் காலையில் எனது பழக்கப்படி 5 மணிக்கெல்லாம் எழுந்துவிட்டேன். நான் விழித்திருப்பதை கண்ட பெரியவர் தன் மகளை கூப்பிட்டு, ''மகளே! அந்த ஐயா, எழுந்து விட்டார். தேத்தண்ணி கொடு'' என்றார்.

அந்தப் பெண்ணும் எனக்கும் மற்றவர்களுக்கும் தேத்தண்ணி கொடுத்தாள். அப்போது பெரியவர் ஞாபகப்படுத்தினார். காலை உணவை அவர்கள் வீட்டிலே சாப்பிட்டவுடன் அவர்களிடம் விடைபெற்று ஆபிஸ் போனேன். துரையிடம் கடிதம் பெற்றுக் கொண்டேன். மீண்டும் வந்தேன்.

எனக்கு முன்பு வந்தவர்கள் பணம் பெற்றுக்கொண்டு தோட்டம் விட்டுபோக எல்லா ஏற்பாடும் செய்து விட்டார்கள். நம்மவர்களின் அவசரம் பணம் கிடைத்தால் போதும். அங்குள்ளவர்கள் பற்றி எதுவும் என்னிடம் கேட்கவில்லை. நான் மட்டும் நினைத்து என்ன செய்ய என்று நான் நினைத்தேன். அவர்களிடம் பேசி இன்னும் சில தோட்டம் வசதிகளைப் பார்த்து பிறகு முடிவு செய்ய. ஆனால், அவை எல்லாம் வீணாகி விட்டது.

நான் சொன்னேன் என் எண்ணத்தை. அடடா எங்களுக்குத் தெரியாதே என்று.

''நான் வந்த பிறகு முடிவு செய்யலாமென்று தோணவில்லையா. இப்ப யோசித்து வேலையில்லை போகலாம்'' என்றேன்.

எல்லோரும் குறிப்பிட்ட திகதியில் புதிய தோட்டம் வந்தோம். எல்லோரும் என்னை நம்பி வந்தார்கள். நாங்கள் 10 குடும்பங்கள் வந்ததால் பிரிவு துயரம் தெரியவில்லை. ஆனால், பொங்கல், தீபாவளி, திருவிழா போன்ற விசேட தினங்கள் வந்தால் மற்ற நண்பர்களை நினைக்காமல் இருக்க முடிவதில்லை.

தேன் கூடு களைவதுபோல் எல்லோரும் எங்கெல்லாமே களைந்து போய்விட்டோம். இப்போது நினைத்தாலும் பழைய நினைவுகள் வருவதைத் தடுக்க முடியதில்லை. அந்தத் துயரம் இறக்கும் வரை இருக்கும்.

## மலையகத்தின் சொல்ல மறந்த கதை

அந்த அதிகாலைப்
பொழுதினிலே
ஆதவனும் கண்விழிக்க
அங்கிருந்த செடிகளிலே
அழகான பனித்துளிகள்.....

மலைகளின் அரசியன்றோ
மலைகளின் தேசமிது
மலர்கள் எல்லாம்
பூத்திருக்கும்
மகத்தான இந்த மண்ணில்
மழையும் பொழிகிறது...

மலைக்க வைக்கும்
தூறலாக
சிந்திய பனித்துளிகள்
சில்லறையாய் சிதறிவிட
சில்மிஷங்கள் செய்கிறது
சிங்கார வண்டுடனே.....

பறவை எல்லாம்
கூடை விட்டு பறந்து ஓட
பாயும் நதி எல்லாம்
பாட்டுகளும் பாடியது
இத்தனை
அழகுக்கொண்டு
இந்த சீம தேசம்
இருந்தாலும்
இல்லாமல் போகவில்லை
இங்கிருந்து
சோகங்கள்தான்..

நீலகிரி தோட்டத்துக்கு
நிக்காம போகணும்னு
நீண்ட தூரமாக
நினைப்போடு வந்தவர்கள்
நின்னு விட்டு
போறாங்க....

விடிந்து விட்ட அந்த
விடியாத பொழுது அது
விடியும் முன்னு
எதிர்பார்த்த
விடிவத்தேடும் மக்களுக்கு
விடியவே
இல்லையப்பா.....

ஆத்தா எழும்பாத்தா
ஆளுக சேர்ந்திருக்கு
அடுத்த ஊரு போகலாம்னு
ஆயத்தம் ஆகிருக்கு
ஆத்தா எழும்பாத்தா.....

சின்ன பொண்ணு
சிட்டாக எழுந்திருச்சு
சீவி கொஞ்சம்
சிங்காரிச்சா
சின்ன வயசு தொட்டு
சிங்காரமாய்
அவளிருப்பா...

கருப்புக்கு ஓரழகு
கருப்பியவ முகம்
சொல்லும் பேரழகு
கருப்பு தேசத்திலே
கற்பக தருதானவ

சொந்தங்களை
விட்டுவிட்ட
சொல்லாத சோகத்திலே
மூக்காயி
சோர்ந்து போகும் நேரம்
எல்லாம்
சொக்க வைக்கும்
ஆறுதலே
சொந்தம்ங்கிற
சின்னப்பொண்ணு
மட்டும்தான்.....

அவகிட்ட பேசும் நேரம்
புருஷன் கிட்ட புள்ளகிட்ட
நெருங்கி பேசறத
போலே தான்
மனசுக்கு ஆறுதலாய்
தான் இருக்கும்....

ஆத்தா எழும்பாத்தா
ஆளுக சேர்ந்திருக்கு
அடுத்த ஊரு போகலாம்னு
ஆயத்தம் ஆகிருக்கு
ஆத்தா எழும்பாத்தா.....

சின்ன பொண்ணு
மீண்டும் எழுப்புகிறா
அவ கூட படுத்திருந்த
லட்சுமி கூட இப்போ
நேரத்தோடு எழும்பி
விட்டும்
இவ இன்னும்
எழும்பலயே...

ஆத்தா எழும்பாத்தா
ஆளுக சேர்ந்திருக்கு
அடுத்த ஊரு போகலாம்னு
ஆயத்தம் ஆகிருக்கு
ஆத்தா எழும்பாத்தா.....

சின்ன பொண்ணு தட்டி
எழுப்ப பார்த்தா
உடம்பு நெருப்பாய்
கொதிக்கிறது
நெஞ்சு துடியாய்
துடிக்கிறது
வேர்வை தண்ணி கூட
நிலத்தில் சிந்தியது...

ஆத்தாளுக்கு என்னாச்சு
ஆட்கொல்லி நோவு ஏதும்
ஆத்தால தாக்கிருச்சா
வாயசய மாட்டேங்குது
கையசய மாட்டேங்குது

ஆத்தா எழும்பாத்தா
ஆளுக சேர்ந்திருக்கு
அடுத்த ஊரு போகலாம்னு
ஆயத்தம் ஆகிருக்கு
ஆத்தா எழும்பாத்தா.....

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

எம்.ராமதாஸ்,
இறம்பொடை.

# புலரும் பொழுது

தமிழன் தொடர்கதை

கலாபூஷணம் சபீனா வைத்துல்லாஹ்

அத்தியாயம் 04



“அது சரி மகன் அமுதா! நம்ம ஆனந்தன், யாரையாவது விரும்புறானா? சொல்லேன்” என்றதும்,

“எனக்கெண்டா சரியாத் தெரியாதப்பா''

“எப்படியும் வெளியில தெரிய வருந்தானே” என்று மழுப்பிவிட்டான் அமுதன். வரும் வழியில் வயலில் மெஷின் மூலமாக நெல் அறுவடை நடந்துகொண்டிருந்தது.

“மதியண்ணா ஒங்கட வயல் அறுவடையை முடிச்சிட்டு, நம்ம வயலிலே வேலையைத் தொடங்குவமே” என்றார் நாதன்.

அந்த இடத்தில் சற்றுத் தாமதித்துத் தங்களின் வயல் அறுவடைக்கான ஒழுங்குகளைச் செய்தனர்.

வீட்டிலே, காலையுணவாக இட்லி தயாரித்துக் கொண்டிருந்த மாலாவுக்கு தனது அம்மம்மாவின் நினைவுகள் வந்து மோதின.

“பொழுது புலரும் முன்னே, அம்மம்மா காரிருளில் கண்முழிச்சிப் பஞ்சுபோல் இட்லி அவிப்பாங்க. பக்குவமாய்ச் சட்னியும் செய்வாங்க. கடைகளுக்குக் குடுத்துத்தான் விற்பாங்க. நித்திரையைத் தியாகம் செஞ்சி கஷ்டப்பட்டு என்னை வளர்த்துப் படிப்பிச்சு விட்டாங்க.''

ஊருக்கு முதலாவது பொம்புள டீச்சர் இந்த மாலா டீச்சர் தான்.

“என்ன செய்ய? சீதனம் இல்லையெண்டா, ஊரிலே மாப்பிள்ளை எடுக்க ஏலா.''

“இந்தக் கறுப்பி மாலாக்கிட்டச் சீதனம் ஏது.''

“நிம்மதியாக் குடியிருக்க ஒழுங்கான வீடு கூட இல்லை.''

“வாத்தியார் வேலை கெடச்சதும் அம்மம்மாவின் அப்பக்கடையை மூடியாச்சு!”

“அம்மம்மாவும் எங்கேயெல்லாம் மாப்பிளை தேடினாங்க! எங்கையுமே எனக்கு மாப்பிள்ளை அகப்படல்ல.

“வயது முப்பது தாண்டிய முதிர்கன்னியாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தப்போதான் நாதனின் அம்மா, வீடு தேடி வந்தாங்க.

“அம்மா நான் புதினாச் சட்னி செய்யட்டுமா அம்மா'' என்ற குரல் கேட்டதும் மாலாவின் சிந்தனை குசினிக்குத் திரும்பியது.

“சரிம்மா மலர்! உப்புப் புளி அளவா விட்டாச் சரி'' என்றார் மாலா.

காரியத்தைக் கச்சிதமாய்ச் செய்து முடித்துச் சுவைத்தாள் மலர்.

வயலில் இருந்த அமுதனும் அப்பாவும் வந்து சேர்ந்தனர்.

எல்லோரும் சாப்பிட அமர்ந்தனர். ஆனந்தனும் கைப்பேசிக்குச் சிறிது ஓய்வு கொடுத்துவிட்டு அவர்களோடு கலந்துகொள்ள வந்தான்.

இட்லி, சட்னி, சாம்பார் எனக் காலை உணவுடன் அம்மாவின் அன்பும் அங்கு பரிமாறப்பட்டது.

“அத்தை அத்தை” என்ற சத்தம் கேட்டு வெளியில் எட்டிப் பார்த்தார் மாலா.

''ஓ! நந்தன்! வாங்கோ நந்தன் வாங்கோ.''

உள்ளே வந்த நந்தனின் கையில் பார்சலொன்று இருந்தது.

“வாங்க நந்தா. ரெண்டு இட்லி சாப்பிடுங்க” என்றார் மாலா.

“அம்மா ஒங்களுக்கிட்ட இதை குடுக்கச் சொன்னாங்க அத்தை.''

“இருந்து சாப்பிட்டு விட்டுப் போங்க நந்து” என்றாள் மலர்.

“எனக்குக் கிளாஸ் இருக்குது. போயிற்று வாறேன்” என்று கூறிவிட்டு ஓடினான்.

பார்சலைக் கண்டதும்,

“ இனி அடிக்கடி கவிதா மாமி ஊட்ல இருந்து இந்த ஊட்டுக்குச் சாப்பாட்டுப் பார்சல் வரும்'' என்று சொல்லி சிரித்தாள் மலர்.

சாப்பிடும்போது குழப்பக் கூடாது என்ற எண்ணத்துடன் தாய் மாலா, பார்சலை எடுத்து ஓர் ஓரமாக வைத்தார்.

தந்தையார் நாதனுக்கு கவிதாவின் செயற்பாடுகள் ஓரளவு புரிந்தது. ரம்யாவுக்கு மாமன் மகனை மாப்பிள்ளை கேட்கவே இந்தப் பகிர்வுகள் எல்லாம் என்று விளங்கிக்கொண்டார்.

அமுதன்ட விஷயம் சரி. இனி, ஆனந்தனுக்கிட்டத்தான் சொல்லிப் பாக்கணும். அவன்கிட்ட எப்புடிச் சொல்றது என்று யோசித்தார் நாதன்.

சாப்பிட்டு முடிந்ததும் எல்லோரும் அவரவர் வேலையை பார்ப்பதற்காகச் சென்றனர்.

“மாலா என்னது பார்சல் வந்திருக்குது.'' நாதன் ஒன்றும் விளங்காதது போலக் கேட்டார்.

“அத ஏன் கேக்குறீங்க. உங்கட கவிதாட வேலை” என்று சுத்தி வளைத்து பேசிக்கொண்டிருந்தார் மாலா.

“நேத்தும் நம்ம கவிதா இங்க வந்துட்டு போனவ தானே”என்றார் மாலா.

“ஆமா என்ன இந்தப் பக்கம் சுத்திக்கிட்டுக் கெடக்குறா!”

“என்ன ஒன்னும் வெளங்காத மாதிரி நீங்க கதைக்கிறீங்க. அவ மகள் ரம்யாவுக்கு, நம்ம வீட்ல சம்பந்தம் வைக்க ஆசைப்படுறா” என்றார் மாலா.

“இவன் ஆனந்தன் ஒத்துக்கொள்வானா மாலா. அவனுக்கிட்ட நீங்கதான் கேட்டுப் பார்க்கணும் மாலா. அவனுக்கு விருப்பம் இல்லாட்டி , ஒன்னும் செய்ய இயலாதே'' என்றார் தந்தை.

“இஞ்சருங்க, அவனுக்கிட்ட நீங்க தான் கேளுங்கோ. எனக்கென்றாக் கேட்க ஏலாது” என்றார் மாலா.

நாதன் கடுமையாக யோசித்தார்.

“என்ன செய்வது யாரை வெச்சுக்கேட்பது தனக்கு விருப்பமில்லயென்று சொன்னால் கவிதாவுக்கு எப்படிச் சொல்றது” என்ற அவரின் சிந்தனை, கடிவாளமின்றிய குதிரையாயிற்று.

தனது மூத்த சகோதரியான கவிதா, அண்ணன் நாதன் மேல் வைத்திருந்த பாசத்தைச் சொல்லி விளங்க வைக்க முடியாது. பார்த்துப் பார்த்து அண்ணனுக்குச் சமையல் பண்ணி வைப்பதும் உடுப்புகளைத் தோய்த்துக் கொடுப்பதும் அவள்தான்”.

அன்று டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு இருந்தபோது, கவிதா துடித்தே விட்டாள்.

மரக்கறி சூப் செய்து

“அண்ணா கொஞ்சம் குடியுங்க! கொஞ்சம் குடியுங்க அண்ணா'' என்று கெஞ்சுவாள்!

(தொடரும்)




14 ஜூன் - 13 ஜூலை - FIFA கிளப் உலகக்கிண்ணம் - 2025 (உதைபந்தாட்டம்)

14 ஜூன் - 6 ஜூலை - Concacaf தங்கக் கிண்ணம் (உதைபந்தாட்டம்)

30 ஜூன் 13 ஜூலை - 2025 விம்பிள்டன் சம்பியன்ஷிப் (டென்னிஸ்)

**ஜனவரி**

12-26 ஜனவரி - 2025 - அவுஸ்திரேலிய ஓபன் (டென்னிஸ்)

13-19 ஜனவரி - 2025 - கோ கோ உலகக் கிண்ணம் (கோ கோ)

14-19 ஜனவரி - 2025 - இந்தியா ஓபன், புது டெல்லி (பட்மிண்டன்)

18 ஜனவரி - பெப்ரவரி - 19 வயதுக்குட்பட்ட பெண்கள் ரி20 உலகக் கிண்ணம் (கிரிக்கெட்)

**பெப்ரவரி**

பெப்ரவரி 7-14 - 2025 - ஆசிய குளிர்கால விளையாட்டுகள்

19 பெப்ரவரி - 9 மார்ச், 2025 - ஐசிசி சம்பியன்ஸ் டிராபி (கிரிக்கெட் )

**மார்ச்**

மார்ச் 10 முதல் 11 மே வரை - உலக தடகள தொடர்கள், சீனா (தடகளம்)

மார்ச் 11- மே 6 - இங்கிலாந்து ஓபன் (பட்மிண்டன்)

14 மார்ச் முதல் மே 25 வரை இந்தியன் பிரீமியர் லீக் (கிரிக்கெட்)

மார்ச் 14-16 - அவுஸ்திரேலிய கிராண்ட் பிரிக்ஸ், மெல்போர்ன் (மோட்டார் ஸ்போர்ட்)

மார்ச் 16- இங்கிலீஷ் லீக் கிண்ண இறுதிப் போட்டி, இலண்டன் (உதைபந்தாட்டம்)



**ஏப்ரல்**

4-6 ஏப்ரல் - ஜப்பானிய கிராண்ட் பிரிக்ஸ் சுசுகா (மோட்டார் ஸ்போர்ட்)

7-13 ஏப்ரல், 2025 - மாஸ்டர்ஸ் போட்டி (கோல்ப்)

11-13 ஏப்ரல் - பஹ்ரைன் கிராண்ட் பிரிக்ஸ் - சாகிர் (மோட்டார் ஸ்போர்ட்)

18-20 ஏப்ரல் - சவூதி அரேபிய கிராண்ட் பிரிக்ஸ் - ஜித்தா (மோட்டார் ஸ்போர்ட்)

**மே**

2-4 மே - மியாமி ரொண்ட் பிரிக்ஸ் - மியாமி (மோட்டார் ஸ்போர்ட்)

17-25 மே - 2025 - உலக டேபிள் டென்னிஸ் சம்பியன்ஷிப் (டேபிள் டென்னிஸ்)

24 மே - ஜேர்மன் கிண்ண இறுதிப் போட்டி, பரிஸ் (உதைபந்தாட்டம்)

24 மே - மகளிர் சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டி, லிஸ்பன் (உதைபந்தாட்டம்)

25 மே - 7 ஜூன் - 2025 - பிரெஞ்சு ஓபன் (டென்னிஸ்)

27-31 மே - 2025 - ஆசிய தடகள சம்பியன்ஷிப் (தடகளம்)

31 மே -சம்பியன்ஸ் லீக், முனிச் (உதைபந்தாட்டம்)

**ஜூன்:**

4-8 ஜூன் - யுஎவ்ஏ நேஷன்ஸ் லீக் இறுதிப்போட்டி (உதைபந்தாட்டம்)

12-15 ஜூன் - யுஎஸ் ஓபன், ஓக்மாண்ட், பென்சில்வேனியா (கோல்ப்)

13-15 ஜூன் - கனடா கிராண்ட் பிரிக்ஸ் - மாண்ட்ரீல் (மோட்டார் ஸ்போர்ட்)

**ஜூலை**

2-27 ஜூலை - UEFA பெண்கள் யூரோ (உதைபந்தாட்டம்)

5-26 ஜூலை - CAF மகளிர் ஆபிரிக்க நாடுகளின் கிண்ணம் (உதைபந்தாட்டம்)

5-29 ஜூலை - FIDE மகளிர் உலகக் கிண்ணம் - 2025 (செஸ்)

12 ஜூலை - 2 ஓகஸ்ட் CONMEBOL கோபா அமெரிக்கா ஃபெயினினா (உதைபந்தாட்டம்)

ஜூலை 17-20 - தி ஓபன் சம்பியன்ஷிப், போர்ட்ரஷ் (கோல்ப்)

**ஓகஸ்ட்**

7-17 ஓகஸ்ட் - 2025 உலக விளையாட்டுகள் (மல்டி-ஸ்போர்ட்)

15 ஓகஸ்ட் -15 செப்டெம்பர் பெண்கள் உலகக் கிண்ணம், இந்தியா (கிரிக்கெட்)

25 ஓகஸ்ட் 7 செப்டெம்பர் - யுஎஸ் ஓபன் (டென்னிஸ்)

ஓகஸ்ட் 25-31 - உலக பட்மிண்டன் சம்பியன்ஷிப், பரிஸ் (பட்மிண்டன்)

ஓகஸ்ட் 27-28 டைமண்ட் லீக் இறுதி, Weltklasse (தடகளம்)

**செப்டெம்பர்**

5-12 செப்டெம்பர் - 2025 - உலக வில்வித்தை சம்பியன்ஷிப் (வில்வித்தை)

5-7 செப்டெம்பர் - இத்தாலிய கிராண்ட் பிரிக்ஸ் Monza (மோட்டார் விளையாட்டு)

13-21 செப்டெம்பர் - 2025 - உலக தடகள சம்பியன்ஷிப் (தடகளம்)

13-21 செப்டெம்பர் - 2025- உலக மல்யுத்த சம்பியன்ஷிப் (மல்யுத்தம்)

செப்டெம்பர் 25-28 - ரைடர் கிண்ணம், நியூயோர்க், அமெரிக்கா (கோல்ப்)

27 செப்டெம்பர் - 9 ஒக்டோபர் 2025 - FIFA U-20 உலகக் கிண்ணம் (உதைபந்தாட்டம்) 2025 - மகளிர் கிரிக்கெட் உலகக் கிண்ணம் (கிரிக்கெட்) திகதி அறிவிக்கப்படவில்லை

**ஒக்டோபர்**

1-10 ஒக்டோபர் - உலக பளு தூக்குதல் சம்பியன்ஷிப், ஃபோர்டே, நோர்வே (பளுதூக்குதல்)

17-19 ஒக்டோபர் - யுஎஸ் கிராண்ட் பிரிக்ஸ் - ஆஸ்டின் (மோட்டார் விளையாட்டு)

19-25, 27 செப்டெம்பர் -19 ஒக்டோபர் 2025 - FIFA U-20 உலகக் கிண்ணம் (உதைபந்தாட்டம் )

2025 - மகளிர் கிரிக்கெட் உலகக் கிண்ணம் (கிரிக்கெட்) திகதி அறிவிக்கப்படவில்லை

**நவம்பர்**

நவம்பர் 6-16 - உலகம் ரைபிள் மற்றும் பிஸ்டல் சம்பியன்ஷிப், கெய்ரோ (துப்பாக்கிச் சூடு)

15-26 நவம்பர் - 2025 - கோடைகால காது கேளாதோர் விளையாட்டு (மல்டி-ஸ்போர்ட்)

28-30 நவம்பர் - கட்டார் கிராண்ட் பிரிக்ஸ் அசைல் (மோட்டர் ஸ்போர்ட்)

**டிசம்பர்**

டிசம்பர் 5-7 - அபுதாபி கிராண்ட் பிரிக்ஸ் யாஸ் மெரினா (மோட்டார் ஸ்போர்ட்)

டிசம்பர் 21 - ஜனவரி 18- (2024-2025 ) ஆபிரிக்க நாடுகளின் கிண்ணம் (உதைபந்தாட்டம்).



# ஓய்வு பெறுகிறார் இரும்புப் பெண்மணி கடிங்கா ஹோஸ்ஸூ

**“இரும்புப் பெண்மணி” என்று அழைக்கப்படும் ஹங்கேரிய நீச்சல் வீராங்கனை கடிங்கா ஹோஸ்ஸூ, போட்டி நீச்சலிலிருந்து ஓய்வு பெறுவதாக புதன்கிழமை அறிவித்தார்.**


**சமூக ஊடகங்களில் ஓர் இதயபூர்வமான செய்தியில், 35 வயதான அவர் தன்னை ஆதரித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.**

**“இப்போது, எனது வாழ்க்கையை நான் திரும்பிப் பார்க்கும்போது, நிறைவான உணர்வை உணர்கிறேன். பதக்கங்கள் மற்றும் சாதனைகள் மதிப்புமிக்கவை. ஆனால், என்னுடன் மிகவும் ஆழமாக இருப்பது நீச்சல் மீதான எனது நித்திய காதல்” என்று அவர் கூறினார்.**

**Hosszu சாதனைகளின் ஓர் அசாதாரண பட்டியலைப் பெருமைப்படுத்துகிறார். 2016 ரியோ ஒலிம்பிக்கில் 200 மீ, 400 மீ. தனிநபர் மெட்லே, 100 மீ. பேக் ஸ்ட்ரோக்கில் தங்கம் வென்ற அவர், மூன்று தடவைகள் ஒலிம்பிக் சம்பியனானார்.**

**அவரது தொழில் வாழ்க்கையில், அவர் 97 பதக்கங்களைக் குவித்தார் மற்றும் 200 மீற்றர் தனிநபர் மெட்லே உலக சாதனையை 2:06.12க்கு வைத்திருந்தார், மேலும் விளையாட்டின் அனைத்து நேர சிறந்த வீரர்களில் ஒருவராக தனது நிலையை உறுதிப்படுத்தினார்.**

# ஜிம்னாஸ்டிக்கில் கால் பதிக்கும் உகண்டா




( சிலம்பு)

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளின் பிடியிலிருக்கும் ஜிம்னாஸ்டிக்கில் சாதனை செய்கிறார்கள் உகண்டாவில் தெருவோர இளைஞர்கள்.

உகாண்டாவின் கட்வே நகரில் தூசி நிறைந்த தெருக்களில் வறுமையுடன் வாழும் இளைஞர்களின் கனவு முடக்கப்படுகிறது.

ஆனால், அங்குள்ள சில இளைஞர்கள் குழு ஜிம்னாஸ்டிக்ஸ் மூலம் நம்பிக்கையை மட்டுமல்ல, பிரகாசமான எதிர்காலத்துக்கான உந்துதலையும் கண்டுபிடித்துள்ளனர்.

“நான் சிமோன் பைல்ஸைப்போல இருக்க விரும்புகிறேன்” என்று கூறும் எரிக் மயஞ்சாவின் இலட்சியங்களுக்கு எல்லையே இல்லை.

உகண்டாவின் தலைநகரான கம்பாலாவில் சேரியான கட்வேயின் மையத்தில், குழந்தைகள் மிகுந்த சிரமத்தால் மூழ்கிய வாழ்க்கையை எதிர்கொள்கின்றனர். ஆயினும்கூட, கட்டகா ஆர்ட்ஸ் ஜிம்னாஸ்டிக்ஸ் என்ற உள்ளூர் கிளப் நினைத்துப் பார்க்க முடியாததைச் சாதித்து வருகிறது.

ஜிம்னாஸ்டிக்ஸை வாழ்க்கையை மாற்றுவதற்கான ஒரு கருவியாக மாற்றுகிறது. வளரும் விளையாட்டு வீரர்களில் 17 வயதான எரிக், தனது விருப்பத்துகுரிய பைல்ஸின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி சாதிக்கத் துடிக்கிறார்.

“தொற்றுநோயின் போது, வித்தியாசமாக ஏதாவது செய்ய நினைத்தபோதுதான் ஜிம்னாஸ்டிக்ஸ் தொடங்கியது யூடியூப் வீடியோக்களைப் பார்த்து அடிப்படைகளைக் கற்றுக்கொண்ட ஃபைசோ லுகோலோபி, ஒரு சுய-கற்பித்த பயிற்சியாளராக மாறினார்.

இப்போது கிட்டத்தட்ட 60 குழந்தைகளுடன் சேர்ந்து, கிளப் ஒரு சரணாலயமாக மாறியுள்ளது.

உகாண்டாவில், விளையாட்டு அரங்கில் உதைபந்தாட்டம் ஆதிக்கம் செலுத்துகிறது. ஜிம்னாஸ்டிக்ஸ் பெரும்பாலும் சந்தேகத்தை சந்திக்கிறது. பல உள்ளூர்வாசிகள் அதை ஆபத்தானதாக உணர்கிறார்கள் என பயிற்சியாளரான ஃபைஸோ கூறுகிறார்.

ஃபைசோவும் அவரது குழுவினரும் அந்த கதையை மாற்றுவதில் உறுதியாக உள்ளனர். ஒரு நாள் தங்கள் ஜிம்னாஸ்ட்களை சர்வதேச போட்டிகளுக்கு அழைத்துச் செல்லும் கனவுகளுடன், ஜிம்னாஸ்டிக்ஸ் ஒரு சாத்தியமான மற்றும் அர்த்தமுள்ள பாதையாக இருக்க முடியும் என்பதை நிரூபிக்க அவர்கள் அயராது உழைக்கிறார்கள்.

பதினான்கு வயதான சில்வெஸ்டர் ஒஜியம்போ, மற்றொரு வளர்ந்து வரும் நட்சத்திரம், ரஷ்ய ஒலிம்பிக் சாம்பியனான நிகிதா நாகோர்னியைப் பின்பற்ற வேண்டும் என்று கனவு காண்கிறார். “நான் ஜிம்னாஸ்டிக்ஸை விரும்புகிறேன், உபகரணங்கள் மற்றும் ஆடைகளுடன் எங்களுக்கு உதவும் ஸ்பான்சர்களுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்,” என்று அவர் ஒரு புன்னகையுடன் கூறுகிறார்.



தடைகள் இருந்தபோதிலும் கடக கலை ஜிம்னாஸ்டிக்ஸ் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்தது. நிலப்பரப்பு தளங்களில் பயிற்சி செய்வதிலிருந்து, அவர்கள் இப்போது உள்ளூர் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் பயிற்சி பெறுகிறார்கள். வளங்கள் பற்றாக்குறையாக இருந்தாலும் பயிற்சியாளர்கள் மற்றும் குழந்தைகளின் அசைக்க முடியாத ஆர்வம், திட்டத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கிறது. அனுசரணையாளர்கள் ஆர்வத்துடன் உதவி செய்கிறார்கள்.



தற்போது விற்பனையில்...
புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி மாதாந்த வெளியீடுகள்
ஜனவரி மாத
சஞ்சிகைகளை பெற்றுக்கொள்ளலாம்
பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
0777 983308 / 074 1684643



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7